விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 15 செவ்வாய்க்கிழமை (28.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 130

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## கிளிநொச்சியில் ரயில் - பஜிரோ கோரவிபத்து

## தாய், தந்தை, மகள் உட்பட நால்வர் சிதறிப் பலி






(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் உள்ள ரயில் கடவையினை கடக்க முற்பட்ட சொகுசு ரக மோட்டார் வாகனத்தினை (பஜிரோ) வேகமாக வந்த ரயில் மோதி தள்ளியதில் அதில் பயணித்த தென்பகுதியைச் சேர்ந்த 8 வயது சிறுமி உட்பட நான்கு பேர் ஸ்தலத்திலேயேபரிதாபகரமாக உயிரிழந்தனர்.

மேலும் இருவர்படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் கொழும்பு மாறகம பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினர்களான தாய், தந்தை, மகள் ஆகிய வசந்த பெரேரா (வயது 45), தீபிகா பெரேரா (வயது 35), நிலானி பெரேரா (வயது 8) மற்றும் கழுத்துறையை 24ஆம் பக்கம் பார்க்க....

# தவறிழைத்து விடாதீர்கள்

## 19 ஐ ஆதரித்து கௌரவம் கொடுங்கள் - ஜனாதிபதி



(கொழும்பு)

**நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாத்துக் கொள்ளும் அந்த வரலாற்று கௌரவம் கிடைப்பதற்கு ஒற்றை நாட்களே இருக்கின்றன. எனவே அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கு கை உயர்த்துவதைவிட வேறொரு கௌரவம் இல்லை. மாறாக அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரலாற்று தவறை இழைத்துவிடாதீர்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில், அரசியலமைப்பின் 19 ஆவது திருத்த சட்டத்தை நேற்றுக் காலை 10.11 க்கு நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் சமர்ப்பித்து சுமார் 17 நிமிடங்கள் உரையாற்றினார். அவர் தனதுரையில் தெரிவித்தவை வருமாறு,

இந்த சட்டமூலத்தை சமர்ப்பிக்க கிடைத்தமை வரலாற்று வரப்பிரசாதமாகும். இந்த வரலாற்று திருத்தசட்டத்தை நாளை (இன்று) செவ்வாய்க்கிழமை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

நல்லாட்சி, ஜனநாயக அரசியல் கலாசாரத்தை முன்வைப்பதற்கு முன்னின்று உழைத்த டி.எஸ்.சேனாநாயக்க மற்றும் 24ஆம் பக்கம் பார்க்க....

## வாக்கெடுப்பு இன்று; பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

19-வது அரசியலமைப்பு திருதத சட்டமூலத்தின் விவாத தொடர்சியும வாக்கெடுப்பும் இன்று பாராளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையிலேயே பாராளுமன்ற வளாகத்தின் பாதுகாப்பு பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 19-வது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தின் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவென பாராளுமன்றத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் எடுதது கொள்ளப்படவுள்ளது. (எ-11)

## பொது பல சேனா மீது வழக்குத் தாக்கல் பதிவு

### நேர் நிலையாகுமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட பிக்குமாரை குற்றவாளிக் கூண்டில் ஏறுமாறு உத்தரவிட்ட கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த சில்வா, இந்த பிக்குமாருககு எதிராக வழக்கு தாக்கல் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

புனித குர் ஆனை அவமதித்தமை, வட்டரெக்க விஜித தேரர் தலைமையிலான ஜாதிக பல சேனா அமைப்பின் 24ஆம் பக்கம் பார்க்க....

## 19ஐ ஆதரிப்போர் விரோதிகள் - நளின்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முதுகெலும்பில்லாதவர்கள் இருப்பதாகவும் அந்த கட்சியை சேர்ந்த நிமால் சிறிபால டி சில்வா, ராஜித சேனாரத்ன, டிலான் பெரேரா ஆகியோரை விவாதத்திற்கு வருமாறு அழைப்பதாகவும் பேராசிரியர் நளின டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற [illegible] அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை தோற்கடிக்க வேண்டும். இந்த திருத்தச் சட்டம் ஜனநாயக போர்வையில் கொண்டுவரபபடும் சிங்கள விரோத சர்வாதிகார திருத்தமாகும்.

19-வது அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வமாக இரண்டாக பிளவுபடும். அதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி அதன் தலைவராக மாறுவார்.

பிரதமர் பதவி கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலேயே ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தில் இருந்து விலகி சென்றார்.

நிறைவேற்று அதிகாரங்களை குறைக்க வேண்டும் என அவர் தற்போது கூறி 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு வாள்வெட்டு குற்றவாளிகளை உடன் கைது செய்க

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுதலை செய்யக்கோரியும், சுதுமலையில் வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டவர்களை கைது செய்யக்கோரியும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்புடனான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்றுக்காலை யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வகையில் புதன்கிழமை வரை வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக தெரிவித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்கள் 9பேர் கடந்த 25ஆம் திகதி மானிப்பாயில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியை பார்ப்பதற்கு சென்று கொண்டிருந்த போது இனந்தெரியாத சிலர் சுதுமலை சந்தியில் வைத்து அவர்களை வழி மறித்து வாளால் வெட்டியும் போத்தல் மற்றும் கொட்டன்களாலும் சரமாரியாக தாக்கியுமுள்ளனர்.

எதிர்பாராத விதமாக திடீரென தாம் தாக்குதலுக்கு உள்ளாவதை உணர்ந்த மாணவர்கள் ஓடத்தொடங்கியிருக்கின்றார்கள். அந்த நேரத்தில் துரத்திவந்த சிலர் ஒரு மாணவனுக்கு வெட்டியதில் கை இரண்டானது. வெட்டப்பட்ட கை நிலத்தில் துடித்துக் கொண்டு கிடந்திருக்கின்றது. மற்றைய ஒரு மாணவனுக்கு உடல் முழுவதும் வாளால் வெட்டியிருக்கின்றனர். இறுதியில் தாக்குதல்காரர்களின் வாள்வெட்டுக்கு உள்ளான மாணவர்களில் ஒருவரின் தலைக்கவசத்தை கழற்றுமாறு கூறியிருக்கின்றனர்.

அம் மாணவன் தலைக்கவசத்தை கழற்றிய போது இவர்கள் தாங்கள் தாக்க வந்தவர்கள் இல்லை என்பதை உணர்ந்து திரும்பிச்சென்றிருக்கின்றார்கள். இதன் பின்னர் படுகாயமடைந்த மூன்று மாணவர்களையும் துண்டான கையையும் எடுத்துக் கொண்டு மானிப்பாய் வைத்தியசாலைக்கு சென்றிருக்கின்றார்கள் மாணவர்கள். எனினும் அங்கிருந்து மேலதிக சிகிசசைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட அவர்கள், கைதுண்டாடப்பட்ட மாணவனை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கின்றனர்.

இதேவேளை துண்டாடப்பட்ட கை பொருந்துமா? பொருந்தாதா? என்பது இதுவரைக்கும் தெரியவில்லை.

இவ்வாறு இம்மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யக் கோரியும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித் துமே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வாள்வெட்டு கலாசாரத்தை யாழில் இல்லா தொழியுங்கள், போருக்கு பின்னர் தமிழ்ச் சமூகம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றதா? என்ற கோசங்கள் எழுப்பப்பட்டன. (ந-4)

# நேபாளத்தை உலுக்கிய பாரிய நிலநடுக்கம்

## மாடுகள் சபித்ததால் ஏற்பட்டதா?

கடந்த சனிக்கிழமை நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால், இதுவரை மூவாயிரத்து முந்நூறுக்கும் அதிகமான மனித உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.


அதுமாத்திரம் அல்லாது சொத்துக்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்பொழுது சமூக இணைத்தளத்தில் அதிகம் பேசப்படுவது நேபாளத்தில் வருடாவருடம் இடம்பெறும் மிருக பலி பூஜை தொடர்பில் ஆகும்.

இவ் மிருக பலி பூஜைக்காக 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான மாடுகளை அம் மக்கள் கடவுளுக்காக பலியிட்டுள்ளனர்.

காதிமை அம்மன் ஆலயத்தில் இடம் பெறுகின்ற இப்பலி பூஜையில் மாடுகள் மட்டுமின்றி ஆடுகள், பறவைகளும் பலியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாகவே நேபாளத்தில பாரிய நில அதிர்வு ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் தற்பொழுது எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)




வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(C-832)

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776



தேவை

மஞ்சி, மெலிபன், நெஸ்லே, ஏமாஸ், ரிஸ்பரி சொக்லட் தொழிற்சாலைகளுக்கு ஆண்/ பெண் தேவை.
18-55 வயது.
35,000/= உயர் சம்பளம்
(157)
இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:-
0717002057


# 18க்கு கையை தூக்கியவர்கள் பாவமன்னிப்பு பெற வேண்டும்

## 19ஐ ஆதரிக்க மனோ வலியுறுத்து

அன்று மகிந்த ஆட்சியிலே 18-ம் திருத்தம் என்ற அரசியலமைப்பு சட்ட திருத்த சட்டமூலத்துக்கு ஆதரவாக கையை தூக்கிய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும், இன்று 18-ம் திருத்தத்தை இல்லாது ஒழிக்கும் 19-ம் திருத்தத்துக்கு ஆதரவாக கையை உயர்த்தி ஆதரவளித்து பாவமன்னிப்பு பெற வேண்டும் என மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில் நடைபெற்ற தந்தை செல்வா நற்பணி மன்ற நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

நல்லாட்சி, நீதிமன்ற சுதந்திரம், ஊடக சுதந்திரம், பொலிஸ் துறை சுதந்திரம் ஆகிய பல விடயங்கள் நமது ஆட்சியின் மூலம் மீண்டும் இந்த நாட்டில் இப்போது கொண்டு வரப்பட்டுள்ளன.

இது போதாது. இந்த நல்ல விடயங்கள் நிரந்தரமாக வேண்டும் என்றால், அவை சட்டமாக்கப்பட வேண்டும்.

கடந்த ஆட்சியிலே நீதிமன்ற மற்றும் பொலிஸ்துறைகளில் தலையீடு, ஊடக அடக்குமுறை ஆகிய சர்வாதிகார அடிப்படைகள் 18-ம் திருத்தத்தின் மூலம் சட்டமாக்கப்பட்டன.

ஆகவேதான் அவை சட்ட புத்தகத்தில் இருந்து அகற்றப்படும் முகமாக இப்போது 19-ம் திருத்தம் வருகிறது. இதனால்தான் 19-ம் திருத்தம் கொண்டு வரப்படுகிறது என்பதை நாம் உணரவேண்டும்.

18-ம் திருத்தம் ஒரு பாவ காரியம். ஆகவே அன்று 18-ம் திருத்தம் என்ற அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்துக்கு ஆதரவாக கையை தூக்கிய அனைத்து எம்.பிகளுக்கும் இன்று பாவமன்னிப்பு பெற அரிய ஒரு சந்தர்ப்பம் கிடைகின்றது.

அன்று 18க்கு ஆதரவாக கையை உயர்த்தியவர்கள், இன்று 18-ம் திருத்தத்தை இல்லாது ஒழிக்கும் 19-ம் திருத்தத்துக்கு ஆதரவாக ஒரு கையை மட்டுமல்ல, முடியுமானால், இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவளித்து பாவமன்னிப்பு பெற வேண்டும். இதன்மூலம் மகிந்தவின் காட்டாட்சி அதிகாரப்பூர்வமாக அரசியலமைப்புரீதியாக முடிவுக்கு வரும் என மனோ கணேசன் தெரிவித்தார். (செ-11)

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலரால் யாழ்.மாவட்டச் செயலக நான்கு மாடி நிர்வாகக் கட்டடம் கட்டம்-VI, ஆண்கள், பெண்களுக்கான கூட்டு விடுதி கட்டம்-I, சங்கானை பிரதேச செயலக மூன்று மாடி மேலதிக நிர்வாகக் கட்டடம் கட்டம்-II, கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01.விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

02.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

03.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 28.04.2015 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல.021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

4.விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 28.04.2015 முதல் 15.05.2015 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

5.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 18.05.2015 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின்பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதி நிதிகளின் முன்னிலையில் 18.05.2015 திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

06.கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

07.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணை பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| Jk/ADM/11/ Con.Work/ ADM.BLOCK (VI) | யாழ்.மாவட்டச் செயலக நான்கு மாடி நிர்வாகக் கட்டடம் கட்டம்-VI | 14.91 | 06 மாதம் | C6 | 150,000.00 | 1000/- |
| JF/ADM/11/ Con.Work/ M.Quarters | யாழ்.மாவட்டச் செயலக ஆண்கள் கூட்டு விடுதி கட்டம்-I | 13.02 | 06 மாதம் | C6 | 131,000.00 | 1000/- |
| JF/ADM/11/ Con.Work/ F.Quarters | யாழ்.மாவட்டச் செயலக பெண்கள் கூட்டு விடுதி கட்டம்-I | 13.02 | 06 மாதம் | C6 | 131,000.00 | 1000/- |
| Jk/ADM/11/ Con.Work/ ADM.BLOCK (CHAN-II) | சங்கானைப் பிரதேச செயலக மூன்று மாடி மேலதிக நிர்வாகக் கட்டடம் கட்டம்-II | 7.20 | 04 மாதம் | C7 | 73,000.00 | 1000/- |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்
(சி-835)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தலால் வெளியேறிய ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு விரைவில் அழைத்து வரப்படுவார்கள்

## மங்கள சமரவீர நம்பிக்கை

வெள்ளை வான் கடத்தல்களுக்கு பயந்து நேபாளத்திற்கு சென்ற ஊடகவியலாளர்களை எதிர்வரும் வாரத்தில் நாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பி கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்களை நாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை நல்லாட்சி மேற்கொள்ளாதா? என அநுரகுமார திஸாநாயக்க வினவியுள்ளார். அதற்கு பதலளிக்கும் வகையில் கடந்த அரசாங்கத்தில் வெள்ளை வான் கடத்தல்களுக்கு பயந்தே ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.



அவர்கள் மீண்டும் நாட்டிற்கு வரவிரும்புவதால் அதற்கான நடவடிக்கைகளை தமது அரசாங்கம் மேற்கொள்வதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர இதன் போது தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் உள்ள இலங்கை ஊடகவியலாளர்களை இலங்கைக்கு அழைத்துவருவதில் சிக்கல் நிலையேற்பட்டுள்ளதாகவும்,

நேபாளத்தில் ஏற்பட்ட பூமியதிர்வினால், காத்மண்டு விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. அதனால் அவர்களுக்கான புதிய விமான சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மிக விரைவில் அவர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அனைத்து ஊழியர்களுக்கும் வருடத்தில் எட்டு நாட்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களத்தின் சட்ட ஏற்பாட்டுக்கு அமைய வருடத்தில் 8 நாட்கள் அனைத்து ஊழியர்களுக்கும் பொது விடுமுறை வழங்கப்பட வேண்டும் என வடமாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் க. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டத்திற்கு அமைவாக பொது விடுமுறைகளான தைப்பொங்கல், சுதந்திரதினம், புதுவருடப் பிறப்புக்கு 2 நாட்கள் , மேதினம், நத்தார், றம்ழான், வெசாக்தினத்துக்கு 2 நாட்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

விடுமுறை நாட்களில் தொழிலாளர்களின் சம்மதத்துடன் வேலைக்கு அமர்த்த முடியும். அத்துடன் அவர்களுக்கு இரட்டிப்பு சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

பொது விடுமுறை தினத்தில் விடுமுறை வழங்காவிடின் அந்த வருடத்தில் வேறு ஒரு நாள் ஊதியத்துடன் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நாட்டுக்குப் பொருத்தமானதல்ல

## ஜே.வி.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இந்த நாட்டுக்கு பொருத்தமானதல்ல என்று ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.**

இதனை கொண்டு வந்த ஐக்கிய தேசியகட்சியே 40 வருடங்களின் பின்னர் அதனை நீக்கவேண்டும் என்று கோருவது வரவேற்கத்தக்கது என்று ஜேவிபியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை பாசிச கொள்கைக்கு இட்டு சென்றுள்ளதாக தெரிவித்தார்.

அனுபவ ரீதியாக இதனை உணர்ந்த நிலையிலேயே மக்கள் அதனை விமர்சிக்க ஆரம்பித்ததாகவும் ஹேரத் தெரிவித்தார்.

இந்த நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கும் 19 ஆவது அரசியல் அமைப்பு சட்டமூலத்தை தமது கட்சி ஆதரிக்கும் என்று அவர் தெரிவித்தார். (இ-5)

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது. இப்போட்டி தரம் 1,2 பாலர் பிரிவிலும் தரம் 3 ,4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு "மாசில் வீணையும் மாலை மதியமும்'', "சொற்றுணை வேதியன் சோதி வானவன்'' ஆகிய இரு திருமுறைகளும் கீழ்ப்பிரிவிற்கு " கூற்றாயினவாறு விலக்ககிலீர்'', " நிலைபெறுமாறெண்ணுதியேல்'' ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதியாகும். பரீட்சைக்கட்டணமாக 60 ரூபா செலுத்தப்படவேண்டும். பரிசில்கள் எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல. 82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப. 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக சமய பிரசாரகரும் பரீட்சைச் செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

# 807.732 மெற்றிக் தொன் நெல் யாழ். மாவட்டத்தில் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 2014-2015 பெரும் போக நெற்பயிர் செய்கையில் இந்த வருடம் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை 807.732 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண நெல் சந்தைப்படுத்தல் சபையின் முகாமையாளர் ஏ. சாந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெல் சந்தைப்படுத்தல் சபையால் யாழ். மாவட்டத்தில் உள்ள 470விவசாயிகளிடம்இருந்து36.5419 மில்லியன் ரூபாவிற்கு 38 ஆயிரத்து 783 கிலோ கிராம் சம்பாவும் 7 இலட்சத்து 68 ஆயிரத்து 949 கிலோ கிராம் நாடு நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதேவேளை வடமாகாணத்தில் 11324.24 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ஐந்து மாவட்டங்களிலும் உள்ள 5 ஆயிரத்து 843 விவசாயிகளிடம் இருந்து 524.22 மில்லியன் ரூபாவிற்கு 29 இலட்சத்து 25 ஆயிரத்து 868 கிலோகிராம் சம்பாவும் 83 இலட்சத்து 98 ஆயிரத்து 374 கிலோ கிராம் நாடும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் எட்டாம் திகதிக்கு பின்னர் இதுவரை நெற் கொள்வனவு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# இராசி பலன்

28.04.2015
(சித்திரை 15, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
தசமி பின்னிரவு 1.10 மணிவரை
மகம் முன்னிரவு 11.34 மணிவரை
இராகுகாலம் 2.58-4.28 மணிவரை
சுபநேரம் 10.28-11.58 மணிவரை

வளவன்

**மேடம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், இனிமையான செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்திதரும், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்:** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** குடும்பச்சுமை கூடும், திட்டமிட்ட காரியங்களில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** சுபகாரியங்கள் இடம்பெறலாம், மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, பயணங்களால் அலைச்சல் ஏற்படலாம், சயனசுகக்குறைவுண்டு.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றப்பாதையை நோக்கிச் செல்லும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**விருச்சிகம்:** செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், பெரிய மனிதர்கள் வீடுதேடி வருவர், ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைச்சுமை கூடும், குடும்பத்தினரிடையே வாக்குவாதங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மீனம்:** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள் முற்படுவீர்கள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேகநலனில் இருந்த பாதிப்புகள் அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 187

## பொறாமையிலிருந்து விடுதலை

...எனக்கு நான் திருப்தி என்ற வார்த்தையை உபயோகப்படுத்தவில்லை. மக்கள் அடிக்கடி சொல்கிறார்கள், திருப்தியாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள் என்று. உங்களால் ஒருபோதும் திருப்தியாக இருக்கக் கற்றுக்கொள்ள முடியாது.

ஒப்பிடுதல் மற்றும் பொறாமையின் எதிர்மறையான இருப்பை அனுபவ ரீதியாக புரிந்துகொள்ளுதலின் விளைவாக திருப்தி மலர வேண்டும். அது உங்களுக்கு கொடுக்கப்பட்டவைக்கான ஆழ்ந்த நன்றியுணர்விலிருந்து மலர வேண்டும். அதை வெளியிலிருந்து சுமத்த முடியாது. அது உள்ளேயிருந்துதான் மலர வேண்டும்.

உங்களுக்குச் சொல்லப்பட்டவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். மீண்டும் மீண்டும் உண்மையைக் கேட்டுக் கொண்டிருப்பதன் மூலம் உங்களுக்குள் அதை அனுபவிக்கக் கூடிய ஒரு வெளியைத் திறக்க முடியும். எந்த ஒரு பிரச்சினையானாலும் அதற்குள்ளேயே தீர்வும் இருக்கிறது. உங்களுக்கு சிரத்தையான மனதுடன் அதை ஆழ்ந்து பார்க்கும் விருப்பம் மட்டுமே இருந்தால் போதுமானது. நீங்கள் வெறுமனே ஒப்பிடுதலையும் பொறாமையையும் விழிப்புடன் ஆழ்ந்து பார்த்தாலே அது உங்கள் மனதின் வெறும் விளையாட்டைத் தவிர வேறல்ல என்பதைக் காண முடியும். நீங்கள் வீட்டில் தனியாக இருக்கும் பொழுது உங்களுக்கென்று ஒரு வீடும் காரும் மட்டும் இருந்தாலே போதுமானது என்று நினைப்பீர்கள். இந்த எண்ணமே உங்களைத் தளர்வாக இருக்கச் செய்துவிடும். நீங்கள் சில கணங்கள் நன்றியுணர்வுடனும் நிறைவுடனும் கூட இருப்பீர்கள். கொஞ்ச நேரம் கழித்து நீங்கள் உங்கள் காரில் வீட்டை விட்டு வெளியே வந்து போக்கு வரத்து சிக்னலில் நிற்கும் பொழுது என்ன நடக்கிறது? ஒரு மெர்ஸிடிஸ் பென்ஸ் கார் உங்கள் கார் அருகில் வந்து நின்றதும். உங்கள் மனம் தன் சிந்தனையை அப்படியே மாற்றி கொண்டு விடுகிறது. உங்கள் கார் அவ்வளவாக நன்றாக இல்லை என்று நினைக்கத் தொடங்கி விடுகிறீர்கள். அது மெர்ஸ்டிஸ் பென்ஸ் கார் இல்லாவிட்டாலும் நீங்கள் புதிய கார் வாங்க உகந்த நேரம் வந்துவிட்டதாக நினைக்கத் தொடங்குகிறீர்கள். சில நிமிடங்களக்கு முன்னர் உங்களிடம் இருந்தவற்றுடன் நீங்கள் சந்தோஷமாகத்தானே இருந்தீர்கள். ஆனால் இப்பொழுது என்னவாயிற்று? (தொடரும்)



பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

### பெற்ற மகனை முகத்தில் சுமக்கும் தந்தை பாசத்தின் மறு உருவம்

அமெரிக்காவில் தந்தை ஒருவர், மகனது முகத்தை தனது தாடையில் பச்சை குத்தியுள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள ஹவ்ஸ்டன் நகரைச் சேர்ந்த கிரிஸ்டியன் ஸெக்ரிஸ்ட் (Christian Sechrist Age - 20) என்பவருக்கு சமீபத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது.



தனது குழந்தையின் மீது வைத்திருக்கும் பாசத்தை உலகத்துக்கு வெளிப்படுத்துவதற்காக இவர் புதிய முயற்சியை கையாண்டுள்ளார்.

அதாவது, கடுமையான வலியையும் பொருட்படுத்தாமல், ஆசை மகனது முகத்தை தனது தாடையில் பச்சை குத்தியுள்ளார். இந்த புகைப்படத்தினை பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இதற்கு நண்பர்கள் சிலர் ஆதரவும், பலர் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.

இந்த செயலால் உனது அழகையும், அமைப்பையும் கெடுத்துக் கொண்டாய் என கூறியுள்ளனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## கோதுமை அல்வா



**தே.பொருட்கள்:**

கோதுமை -250 கிராம்
சர்க்கரை- 1 கிலோ
நெய் -350 கிராம்
ஏலப்பொடி முந்திரி
கேசரிப் பவுடர் பால் - 1 டீஸ்பூன்
எலுமிச்சைச் சாறு (விரும்பினால்)

**செய்முறை**

கோதுமையை குறைந்தது 12 மணிநேரம் ஊறவைத்து, கிரைண்டரில் அரைத்து பால் எடுத்து அதை அப்படியே இரண்டு மணி நேரம் வைக்கவும். அடுப்பில் அடிகனமான பாத்திரத்தில் சர்க்கரையை, கம்பிப் பதமாகப் பாகு வைக்கவும். பாகில் ஒரு டீஸ்பூன் பால் விட்டு அழுக்கை நீக்கவும். இப்போது கோதுமைப் பாலின் தெளிவை இறுத்துவிட்டு, கெட்டிப் பாலை மட்டும் பாகில் விடவும். அடுப்பை நிதானமான சூட்டில் வைத்து, கேசரிப் பவுடர் சேர்த்து கைவிடாமல் கிளற ஆரம்பிக்கவும். இப்போது சில துளிகள் எலுமிச்சைச் சாறு சேர்த்தால் அல்வா அடிப்பிடிக்காமல் வேகமாகப் பந்து மாதிரி கிளம்பி சீக்கிரம் கெட்டியான பதத்திற்கு வரும். கலவை கொதித்து கெட்டியாக வர ஆரம்பிக்கும்போது கொதிக்கும் சுடுநீரை ஒரு கப் சேர்க்கவும். இப்படியே ஒவ்வொரு முறை கெட்டியாகி வரும்போதும் ஒவ்வொரு கப் கொதிக்கும் வெந்நீராக மொத்தம் ஆறு கப் சேர்த்து கிளறிக் கொண்டே இருக்கவும். இடையே சிறிது சிறிதாக நெய்யையும் சேர்த்துக் கொள்ளவும். ஆறாவது கப் வெந்நீரும், மிச்சமிருக்கும் நெய்யையும் சேர்த்த பின் வருவதே சரியான பதம். கிளறிக்கொண்டே இருந்தால் பாத்திரத்தில் ஒட்டாமல் நெய்யைக் கக்கிக் கொண்டு வரும்போது ஏலப்பொடி சேர்த்துக் கிளறி, நெய் தடவிய தட்டில் கொட்டிப் பரப்பவும். மேலே சீவிய முந்திரி அல்லது முழு முந்திரிப் பருப்பால் அலங்கரிக்கவும். ஒருவேளை தவறுதலாக கலவை இறுகி, பாறை மாதிரி ஆகிவிட்டால், ஒரு தேங்காயை அரைத்துப் பாலெடுத்து, அதை அல்வாவில் ஊற்றி மிதமான சூட்டில் கிளறவும். அல்வா நெகிழ்ந்து சரியான பதத்திற்கு வந்துவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அதிகாரத்திலுள்ளவர்கள் விளங்கிக்கொள்ளாமையால்

# துர்ப்பாக்கிய நிலை

## சிரேஷ்ட விரிவுரையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

***இன்றைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரங்கின் ஊடாக பல புதிய மாற்றங்களை எமது சமூகத்தினரிடையே ஏற்படுத்தக்கூடியதாக இருந்தும் அதிகாரத்தில் உள்ளவர்கள் அதை விளங்கிக் கொள்ளாத தன் காரணமாக அரங்கை ஒரு சாதகமான ஒரு ஊடகமாக சமூகத்தின ரிடையே கொண்டு வர முடியாமல் இருப்பது எமது துர்ப்பாக்கிய நிலை என நாடகமும் அரங்கியலும் துறையை சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.***

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்களின் வருடாந்த நாடகவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதில் நடுவராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சமூக அக்கறை பற்றி பேசும் போது நாடகம் என்று கூறுவதை விட அரங்கு என்று கூறுவதே சிறந்தது. அரங்கத்துறை யாழ்ப்பாணத்தில் 1985 ஆம் ஆண்டுகளில் அறிமுகமாகி இருந்தாலும் அரங்கு பற்றி சமூகத்தினிடையே போதிய தெளிவு இல்லாத காரணத்தால் அதை வளர்க்க முடியாமல் போய்விட்டது.

இன்றைய சூழ்நிலையில் அரங்கு சமூகத்திற்கு தேவையானது ஒன்றாகும். சமூகத்தினரை ஒன்று கூட்டி பல புதிய சிந்தனைகளை ஏற்படுத்தும் இடமாக அரங்கை மாற்ற வேண்டும்.

இன்று எமது சமூகம் இருக்கும் நிலையில் சமூகம் பற்றிய பாடுகளை பகிர்ந்து கொள்வதற்குரிய இடமாக இந்த அரங்கு விளங்குகின்றது. சமூகம் பற்றிய எண்ணங்களை தூண்டுகின்ற ஒரு இடமாக இந்த அரங்கு அமையும்.

ஒரு கலைஞன் சமூக அக்கறையுடன் சமூகத்தை பார்த்து அதை மனப்பாடம் அமைத்து அதனை ஆற்றுகை செய்வதன் மூலம் மக்களிடையே தாக்க விளைவை ஏற்படுத்த முடிகிறது.

எனவே சமூகத்தில் இடம்பெறுகின்ற பிரச்சினைகளை மக்களிடையே தெளிவுபடுத்தி நல்ல சமூக மாற்றத்தை கொண்டு வருவதற்கு இந்த அரங்கு மிக முக்கியமான ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ITEC, TCS குறுகிய கால பயிற்சிக்கு அதிகளவானவர்களை இணைக்க ஆர்வம்

இந்திய அரசின் ITEC, TCS குறுகிய கால பயிற்சி நெறிக்கு இந்த வருடம் வட மாகாணத்தில் இருந்து அதிகளவா னோரை இணைத்துக் கொள்வதற்கு ஆர்வமாக உள்ளதாக யாழ். இந்திய துணைத் தூதுவர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்மேலும்தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வருடமும் இலங்கையில் இருந்து இக் குறுகிய கால பயிற்சி நெறிக்கு மாணவர்களை உள்வாங்கி வருகின்றோம்.

அந்த வகையில் இம்முறை வடமாகாணத்தில் இருந்து 25 பேர் வரையில் உள்வாங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இப்பயிற்சி நெறியானது 100 வீதம் இலவசமாக வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தில் கணக்கியல், வங்கியியல், விசேட கல்வி, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், சூழலியல், உள்ளூர் அபிவிருத்தி போன்ற பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன.

வட மாகாண சபை அமைச்சர்கள், பல்கலைக்கழகம், உள்ளூராட்சி திணைக்களங்கள், கிராம சேவகர், தனியார் துறையினர் ஊடாக இப் பயிற்சி நெறிக்கு மாணவர்கள் உள்வாங்கப்படுவர். இப் பயிற்சி நெறிக்குரிய விண்ணப்பப் படிவங்களை இணையத்தளங்களின் ஊடாகவும் இந்திய தூதரகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்கள் சிறந்த பேற்றினை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஊழல் மோசடி அரசியல்வாதிகள் பொதுத் தேர்தலில் வேண்டாம்!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது ஊழல் மிக்க அரசியல்வாதிகளுக்கு வேட்பாளர் நிலை வழங்கப்படுவதை தவிர்க்குமாறு அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு கடிதங்களை சமர்ப்பித்துள்ளார்.

அதில், இலங்கையில் முதல் தடவையாக இரண்டு வேறுபட்ட கட்சிகள் இணைந்து வடக்கில் இருந்து தெற்கு வரையிலும் உள்ள முக்கிய பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சிகளில் வெற்றி கண்டு வருவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணம் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதியே ஆரம்பமானது.

அதற்கு முன்னர் இலங்கை அரசியலில் குடும்ப அரசியலும், குடும்ப வியாபாரமுமே இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் தற்போதும் குறித்த குடும்ப ஆட்சியை மீண்டும் கொண்டு வர சூழ்ச்சி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே அதன்னை தடுக்கின்ற வகையில் ஊழல் மற்றும் துஷ்பிரயோகம்,O போதை வஸ்துக்காரர்களுக்கு பொதுத்தேர்தலில் போட்டியிட இடம்தரப்படக்கூடாது என்று அர்ஜுன ரணதுங்க கோரியுள்ளார்.

இதனை ஜனாதிபதியும் பிரதமரும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-5)


## காரைநகர், கருங்காலி, போசுட்டி அருள்மிகு முருகமூர்த்தி தேவஸ்தான திவ்ய மஹோற்சவ 6ம் நாள் விஞ்ஞாபனம்

காலம்- சித்திரைத் திங்கள் 16 ஆம் நாள் (29.04.2015)
காலை 6 மணிக்கு 108 கலச மஹாயாக பூஜை
250 திரவிய அபிஷேகம்
108 கலச அபிஷேகம்

இந்நிகழ்வின் விசேட நிகழ்ச்சியாக "திருப்புகர் அமிர்தம்" இசை இடம்பெறும்.

கலந்து சிறப்பிப்பவர்கள்

பாட்டு- பேராசிரியர் வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் (தமிழ்ப் பேராசிரியர் மொழித்துறை சப்ரகமுவ) பல்கலைக்கழகம்

அணிசேர் கலைஞர்கள்

வயலின்- கலாவேந்தன் அ.ஜெயராமன்
மிருதங்கம்- இசைக் கலைமாமணி கி.இராசதுரை
முகர்சிங்- கலாவித்தகர் க.நந்தகுமார்
விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறும்.

தொடர்ந்து வசந்தமண்டப பூஜை இடம்பெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராக திருவீதி உலா வரும் அருங்காட்சி இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சியாக 8.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை இடம்பெற்று முருகப்பெருமான் அழகிய முத்துச் சப்பரத்தில் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

அத்தருணம் அடியார்கள் வருகை தந்து முருகப் பெருமானை தரிசித்து திருவருள் பெறுவீர்களாக!

கருங்காலி, காரைநகர் — இங்ஙனம் 6 ஆம் திருவிழா உபயகாரர் (210)



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 37 உயரம்: 5’
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: B/676

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 15 உயரம்: 5’10"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் லண்டன் NOT PR
தொ.இ: B/682

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 48 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்: A/L லண்டன் PR
தொ.இ: B/687

பிறப்பு: 1967 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 54 உயரம்: 5’4"
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/693

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 37 செவ் 2 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்
தொ.இ: G/1123

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 63 செவ் 1 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: HNDIT/ அரச தொழில்
தொ.இ: G/1128

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 20
உயரம்: 5’9"
தகைமை/தொழில்: HNS லண்டன் PR
தொ.இ: G/1141

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 45 செவ் 2 இல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1147

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த வருடாந்த நாடக விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட ஹூவர் அரங்கில் சிறப்பாக இடம் பெற்றது. இந்த நாடக விழாவில் 36 ஆம் அணியினரின் ''மீண்டும் மீமும்'' 35 ஆம் அணியினரின் ''புனலே பூத மாய்'' 37 ஆம் அணியினரின் ''யாரொடு நோகின்'' 34 ஆம் அணி யி னரின் ''உமிழ்ந்த எச்சில்'' ஆகிய நாட கங்கள் மேடை யேற்ற ப்பட்டிருந்தன. இதில் ''புனலே பூதமாய்'' என்ற நாடகம் சுன்னாகம் நிலத்தடி நீரால் வரப்போகும் ஆபத்து தொடர்பா கவும் ''உமிழ்ந்த எச்சில்'' என்ற நாட கம் மீள்குடியேற்றம், மனித உரிமைகள், அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் போன்ற சமூக பிரச்சினை களை எடுத்துக் கூறுவதாகவும் இருந்த 2 நாடகங்களும் முதலாவது நிலையை பெற்றுக் கொண்டன.

இந்த நாடகங்களை மதிப்பீடு செய்வதற்கு நாடகமும் அரங்கிய லும் துறையை சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிதம்பரநாதன், நாடகவியல்துறையில் கடமையா ற்றிய கோகிலா மகேந்திரன், நாடக துறையை சேர்ந்த கலாசார உத்தி யோகத்தர் கிரீதரன் ஆகியோர் மதிப் பீடு செய்தனர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சிறீகரன், மகப் பேற்று சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி குருபரன், சிறப்பு விருந்தினராக சக்தி தொலைக்கா ட்சிப் பணிப்பாளர் கஜமுகன் ஆகி யோர் கலந்து கொண்டனர். (இ-4-9)

# ராணுவக்காவலரண் திடீரென அகற்றல்!

**(யாழ்ப்பாணம்)**

**மந்திகை வைத்தியசாலைக்கு அருகில் அமைந்திருந்த இராணுவக் காவலரண் நேற்று திடீரென அகற்றப்பட்டுள்ளது.**

போக்குவரத்திற்கு இடையூறாக காணப்பட்ட மேற்படி காவலரண் நீண்டகாலமாக அப்பகுதியில் இருந்து வந்துள்ளது.

இராணுவத்தினர் அங்கிருந்து சென்று நீண்ட காலமாகியும் இக் காவலரண் அகற்றப்படாது இருந்துள்ளது.

இவ்வாறு காணப்பட்ட காவலரணே நேற்றைய தினம் பருத்தித்துறை பிரதேச சபையினால் அகற்றப்பட்டது.

தற்பொழுது அக்காவலரண் அகற்றப்பட்டுள்ளதால் பயணிகள் தூரத்தில் எதிரே வருகின்ற வாகனங்களைப் பார்க்க முடிவதாகவும் இதனால் விபத்துக்களை தவிர்க்க முடிவதாகவும் தெரிவிக்கின்றனர். (இ-3-60)

## சட்டவிரோத மணல் ஏற்றிய இருவர் கைதாகி மறியலில்

சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற போது இருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் கடந்த வெள்ளியன்று ஆஜர்படுத்தினர்.

50 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் இரண்டு சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்ட அவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)


## வயர்களை அறுத்த மூவருக்கும் மறியல்

கரவெட்டிப் பகுதியில் ரெலிக்கொம் வயர்களை அறுத்த குற்றச்சாட்டில் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட மூன்று பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருடப்பட்ட கேபிள் வயர்களின் பெறுமதி ஒரு இலட்சத்து 868 ரூபா வென பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். மேலும் சந்தேக நபர்களை எதிர் வரும் 8 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத் தரவிட்டுள்ளார்.

பொது உடைமை கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு உயர் நீதிமன்றில் பிணை அனுமதி பெறுமாறு நீதிபதி உத்தர விட்டுள்ளார். (இ-3-60)




## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

தாவடி கொக்குவில் ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இதேவேளை நாளை 29 ஆம் திகதி மாலை 4 மணியளவில் இவ்வருடம் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத் தேர் வெள்ளோட்டம் இடம் பெறும்.

எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த த்திருவிழாவும் இடம்பெறும். (இ

# முரண்பாடுகளைக் களைவது தொடர்பில் அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல்

**நாளை யாழில் நடைபெறும்**

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இடையிலான பயணிகள் சேவை தொடர்பாக இடம்பெறுகின்ற முரண்பாடுகளை முடிபுக்குக் கொண்டு வரும் பொருட்டு நாளை புதன்கிழமை யாழ். அரச அதிபருடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நாளை மாலை 4 மணிக்கு இக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். தூர சேவைப் பேருந்து உரிமையாளர்களின் கம்பனி சார்பாக 5 பிரதிநிதிகளும் மற்றும் வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபை பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.


இதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபை கடந்த கால சேவை நடைமுறைகளைக் கைவிட்டு புதிய பேருந்துகள் கிடைத்தவுடன் கூடிய சேவைகளைப் புகுத்தி தனியார் பேருந்து உரிமையாளர்களை கடும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி விட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஐந்து மாவட்ட பேருந்து உரிமையாளர்களின் முறைப்பாட்டினை அடுத்து 22.12.2014 ஆம் திகதி வடமாகாண ஐந்து மாவட்ட அரச அதிபர்களுடனும் பிரதம கணக்காளர்களும் வடமாகாணத்தின் இலங்கைப் போக்குவரத்துச் சபை முகாமையாளர்களும் ஐந்து மாவட்ட பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர்களும் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சரின் பிரதிநிதிகளும் இணைந்து நடைபெற்ற கலந்துரையாடலில் எட்டப்பட்ட முடிவான ''தனியாருக்கு 60 வீதசேவையும் இலங்கைப் போக்குவரத்துச் சேவைக்கு 40 வீதி சேவையும்'' என்ற தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ள ஆவன செய்யுமாறு தனியார் பேருந்து உரிமையாளர்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தேர்த்திருவிழாவும் தீர்த்தத்திருவிழாவும்

மாதகர்- நுணசையம்பதி திருவருள்மிகு முருகமூர்த்தி கோவில் மன்மத வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம் கடந்த 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான அதேவேளை எதிர்வரும் 2 ஆம் திகதி இரதோற்சவம் இடம்பெறும்.

காலை 8 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு முருகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். மறுநாள் தீர்த்தோற்சவம் காலை 8 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (இ




வலி.மேற்கு பிரதேச செயலகத்தினால் பனுவல் எனும் நூல் வெளியீடு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் அ. சோதிநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டோர் அமர்ந்திருப்பதையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19வது திருத்தச்சட்டத்தை செயலிழக்கச் செய்ய சதி

19வது திருத்தச் சட்டமூலத்தை செயலிழக்கச் செய்யும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அரசியல் அமைப்பு சபைக்கு அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.


அப்படி செய்தால் அது சுயாதீன ஆணைகுழுக்களின் செயற்பாடுக்கு இடையூறு ஏற்படுத்தும் என்றும் மீண்டும் 18வது திருத்தம் செயறபடுத்தப்படும் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் ஜியோப்ரி அழகரட்ணம் மற்றும் செயலாளர் அஜித் பரசன்ன ஆகியோர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அதில் 19வது திருத்தத்தின் மூலம் இலங்கையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமனங்களில் நியாயநிலை பின்பற்றப்படும் நிலை தோன்றியுள்ளது.

இது இலங்கையின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதிக்கும். அத்துடன் பாராளுமன்றத்தின் நம்பகத் தன்மையையும் கேள்விக்குரியாக்கும் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எனவே இதற்கு இடமளிக்காது 19வது திருத்தத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-5)




# ஞானசார தேரர் உட்பட ஐவருக்கெதிராக வழக்கு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞான சார தேரர் உட்பட தேரர்கள் ஐவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுளளது.



கொழும்பு கொம்பனி தெருவில் அமைந்துள்ள விடுதிக்குள் புகுந்து ஊடக கலந்துரையாடலுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் கொம்பனிதெரு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் குர்ஆனை அவமதித்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் விரைவாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த லியனகே நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த வழக்கை ஜூன் 15ஆம் திகதிக்கு கொழும்பு கோட்டை நீதவான் ஒத்தி வைத்துள்ளார். (இ-5)

# 19ஆவது திருத்த சட்டத்திற்கு ஆதரவு அளித்து மக்களை அடிமை நிலையில் இருந்து மீட்போம்

(கொழும்பு)

**19வது திருத்தச் சட்டத்தின் மூலம் இலங்கை மக்கள் அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்படும் தருணமாக பதியப்பட வேண்டும் என பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

வரலாற்றில் தலைவர்கள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக உறுதி அளித்த போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு அந்த செயற்பாட்டை நிறைவேற்ற முன்வந்துள்ளதாக நீதி அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அதிஉயர் சபையான பாராளுமன்றம் குறித்த நம்பிக்கை மக்கள் மத்தியில் இல்லாது போனதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் மக்களை அடிமை நிலையில் இருந்து மீட்கும் 19வது திருத்தச் சட்டத்திற்கு பாராளுமன்றில் உள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் ஆதரவு அளிக்க வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நடைமுறையில் உள்ள 32 உலக நாடுகளும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளாகவே உள்ளதாக ஆய்வுகளில் தகவல் வெளியாகியுள்ளதென நீதி அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு 100 நாட்கள் போதாதாம் - பிரதமர்

(கொழும்பு)

தொழில்வாய்ப்பு வழங்குதல், கல்வி வளர்ச்சி உட்பட பல விடயங்களை 100 நாட்களில் செய்து முடிக்க முடியாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதுவருட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் 100 நாட்களுக்குள் மக்களுக்கு வழங்க வேண்டிய அனைத்து நிவாரணங்களையும் வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 100 நாட்களில் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கியதன் பின்னர் ஏனைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

வளர்ச்சியடைந்துள்ள உலகில் இன்று இளைஞர்களுக்கு விரும்பியவற்றை செய்வதற்கான பூரண சுதந்திரம் தற்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

10 வருடத்தின் பின்னர் ஊழல் மோசடிகள் அற்ற வாழ்க்கை செலவை குறைத்து, தொழிற்பயிற்சி வழங்குதல், வாழ்வாதாரத்தை உயர்த்தும் தொழில் வழங்குவதன் மூலம் மேலும் வலுவடைய செய் வோம்.

இதேவேளை 10 வருடங்களில் செய்யும் வேலைத்திட்டங்களை தற்போதைய அரசாங்கம் 100 நாட்களில் செய்துள்ளது. எதிர்வரும் 5 வருடங்களினுள் 100 இலட்ச வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (இ-5)

# நிஷாந்த முத்துஹெட்டிகமவிற்கு பாராளுமன்றம் செல்ல அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர நிஷாந்த முத்துஹெட்டிகமவிற்கு பத்தேகம நீதிமன்றத்தினால் விசேட அனுமதி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.



19ஆம் திருத்தச்சட்ட விவாதத்தில் கலந்துகொள்வதற்காக பாராளுமன்றத்திற்கு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு முத்து ஹெட்டிகமவினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளினை நேற்று பரிசீலித்த பின்னரே பத்தேகம நீதிமன்றத்தினால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசார மேடைகளுக்கு தீவைத்த சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று பத்தேகம நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்து ஹெட்டிகம குறித்த வழக்கின் பிரதான பிரதிவாதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 19ஆவது திருத்தச் சட்டத்தால் ஊடகங்களுக்கு பாதிப்பில்லை

(கொழும்பு)

19ஆவது திருத்தச் சட்டத்தில் ஊடகங்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் காணப்பட்ட சரத்து நீக்கப்பட்டுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றம் ஒன்றுகூடலில் நேற்று விசேட உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலையீட்டில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என சுட்டிக்காட்டிய அவர், குறித்த சரத்தின் மூலம் ஊடகங்களுக்கு அழுத்தம் பிரயோகிக்கக் கூடியவகையில் அமைந்திருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நேபாளத்தில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை

(கொழும்பு)

நேபாள நிலநடுக்கத்தில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நேபாள நிலநடுக்கம் தொடர்பாக சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட போதே ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேபாளத்தில் கல்விகற்கும் இலங்கை மாணவர்களை அழைத்து வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

**நேபாளம் சென்ற**

# இலங்கை விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு

இலங்கையிலிருந்து நிவாரணங்கள் மற்றும் நிவாரணப் பணியாளர்களை ஏற்றிக்கொண்டு நேபாளத்துக்குச் சென்ற இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானமொன்று தொழில்நுட்பக் கோளாறுக்கு உள்ளாகியுள்ளது.

இவ்விமானத்தின் ஊடாகவே, நேபாளத்தில் உள்ள இலங்கையர்கள் 35பேரும் இலங்கைக்கு அழைத்துவரப்படவிருந்தனர்.

போட்டி ஒன்றுக்காக நேபாளம் சென்றிருந்த 14 வயதுப் பிரிவுடைய மகளிர் காற்பந்தாட்ட வீராங்கனைகள் குழுவும் இந்த குழுவில் அடங்குகின்றனர்.

எவ்வாறாயினும், தொழில்நுட்பக் கோளாறுக்கு உள்ளான விமானத்தை, இன்றைய தினத்துக்குள் சீர்செய்து நாடு திரும்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமானப்படை அறிவித்தது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ.மா.பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தமிழ்த் தினப் போட்டிகள்

(மல்லாவி)

**அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியினை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான மாகாண மட்ட தமிழ்த்தினப்போட்டிகள் நடைபெறவுள்ள கால அட்டவணையை வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) பி.செல்வின் எரேமியஸ் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,மாகாணமட்ட எழுத்தாக்கப் போட்டிகள் மேமாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இதற்கமைய கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளு க்கான போட்டிகள் கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திலும் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கான போட்டிகள் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கான போட்டிகள் வவு/சைவப் பிரகாச மகளிர் மகா வித்தியாலயத்திலும் மன்னார், மடு ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கான போட்டிகள் மன்/புனித சவேரியார் ஆண்கள் மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

எழுத்தாக்கப் போட்டிகளின் மதிப்பீடுகள் வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தில் மேமாதம் 15,16 ஆகிய தினங்களில் நடைபெறும்.

மாகாணமட்ட எழுத்தாக்கப் போட்டிகள் நடைபெறுகின்ற இடங்களுக்கு அந்தந்த கல்வி வலயங்களுக்குரிய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர் இல்லாதவிடத்து தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் எழுத்தாக்கப் போட்டிகளுக்குரிய மாணவர்களின் விபரப்பட்டியலுடன் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை பின்வரும் மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகள் மேமாதம் 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற இருப்பதால் வலயமட்ட போட்டிகளை மேமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி போட்டிகளில் முதலாம் இடத்தை ப் பெற்ற மாணவர்களின் விபரத்தை வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

நடைபெறவுள்ள போட்டிகளின் இலக்கங்களான 18 தொடக்கம் 20 பேச்சு, 15 தொடக்கம் 16 வாசிப்பு, 17 ஆக்கத்திறன் வெளிப்பாடு, கதை கூறல், 23 தொடக்கம் 27 பாவோதல், 45 திறந்த போட்டி தமிழ் அறிவு வினாவிடை, 47 சிங்கள மாணவர்கள் தமிழ் வாசிப்பு, 48 சிங்கள மாணவர்கள் தமிழ் பேச்சு, 49 சிங்கள மாணவர்கள் தமிழ் உறுப்பெழுத்து, 50 சிங்கள மாணவர்கள் தமிழ் உறுப்பெழுத்து ஆகிய போட்டிகள் 22, 23 ஆம் திகதிகளில் நடைபெறும்.

ஏனைய கலைத்திறன், மொழித்திறன் போட்டிகள் யாவும் எதிர்வரும் ஜுன் மாதம் 6, 7 ஆம் திகதிகளில் நடைபெறும் என' அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)



நாங்கள் மக்கள் இயககத்தின் "கிராமிய விவசாயத்தின் மூலம் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல்" எனும் செயற்றிட்டத்தின் கீழ் முல் லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 61 பயனாளிகளுக்கான விதைகள் வழங்கும் நிகழ்வு நாங்கள் மக்கள் இயக்கத்தின் முல்லைத் தீவு மாவட்ட ஏற்பாட் டாளர் அ.சுஜாத்தன் பிரசாத் தலைமையில் அண்மையில் மாங்குளம் மீரா முன்பள்ளியில் இடம் பெற்ற போது... (படம்: பனிக்கன் குளம் செய்தியாளர்)




# மாங்குளம் புகையிரத நிலையத்திற்கான இணைப்பு பேருந்து சேவையை ஆரம்பிக்குக

## முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

(முள்ளியவளை)

முல்லைத்தீவிலிருந்து மாங்குளம் புகையிரத நிலையத்துக்கான இணைப்பு பேருந்து சேவை இன்மையால் முல்லைத்தீவு மக்கள் தமது புகையிரத பயணத்திற்காக வவுனியாவரை பேருந்தில் பயணித்து வவுனியா புகையிரத நிலையத்திலிருந்தே தமது பயணத்தை தொடரவேண்டிய நிலையில் உள்ள தாக கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கொழும்பிலிருந்து புகையிரதத்தில் பயணிக்கும் முல்லைத்தீவு மக்கள் வவுனியாவில் இறங்கி தமது பேருந்து பயணத்தை தொடர வேண்டிய அவல நிலையில் உளளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முல்லைத்தீவிலிருந்து மாங்குளம் புகையிரத நிலையத்துக்கான இணைப்பு பேருந்துசேவையை விரைவில் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் இதனால் முல்லைத்தீவிலிருந்து கொழும்பு யாழ்ப்பாணத்திற்கான தமது புகையிரத பயணத்தை இலகுவாக தொடரமுடியும் எனவும் அம்மக்கள் கோருகின்றனர்.

இதுகுறித்து முல்லைத்தீவு இ.போ.ச.சாலை முகாமையாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, வன்னி யுத்தம் தீவிரம் அடைவதற்கு முன்னர் அதாவது 1990 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் முல்லைத்தீவிலிருந்து தினசரி மூன்று புகையிரத நிலையத்துக்கான இணைப்பு பேருந்து சேவைகள் நடத்தப்பட்டு அதன் பின்னர் நிறுத்தப்பட்டது. தற்போது தமது சாலையில் போதியளவு பேருந்துகள் மற்றும் போதியளவு ஆளணி உள்ளது. எனவே மாவட்ட அரசாங்க அதிபர் உத்தரவிடும் பட்சத்தில் புகையிரத நிலையத்துககான இணைப்புபேருந்துசேவையை உடனடியாகஆரம்பிக்கமுடியும்என அவர் மேலும் தெரிவித்தார். (2-302)

# அரச இலக்கிய விழாவிற்கு நூல்கள் கோரப்படுகின்றன

(கிளிநொச்சி-1)

கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக்கழகத்தின் அரச இலக்கிய குழு ஆகியவை ஒன்றிணைந்து வருடந்தோறும் நடத்தி வரும் அரச இலக்கிய விழாவில் வருடத்தின் சிறந்த நூல்களைத் தெரிவு செய்து விருது வழங்கப்படுகின்றது.

இதற்கமைய 2015ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் விழாவிற்காக சிங்கள தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நூல்கள் கோரப்படுகின்றன.

அதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு நூல்கள் வெளியிட்ட எழுத்தாளர்கள் கலைஞர்கள் மே மாதம் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தமது நூல்களை செயலாளர், அரச இலக்கிய குழு, கலாசார, அலுவல்கள் திணைக்களம், எட்டாம் மாடி, தெத் சிறிபாய, பத்திரமுல்ல, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலும் முதல் பதிப்பாக வெளியிடப்பட்ட 48 பக்கங்களுக்கு குறையாத ஒரு நூலின் 3 பிரதிகள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை அந்தந்த பிரதேச செயலாளர்களின் மாவட்ட செயலகத்தில் கலாசார பிரிவில் பெற்றுக் கொள்ள முடியுமென கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (2-277)

# வர்த்தக நிலையங்களின் திறப்பு விழா நாளை

த.தே.கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் பாலிநகர் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 12 வர்த்தக நிலையங்களைக் கொண்ட நவீன வர்த்தக நிலையத் தொகுதி திறப்புவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அம்பலவாணர் தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தக நிலையத் தொகுதியானது நெல்சிப் திட்ட நிதியுதவியான ஒரு கோடியே 40 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் வர்த்தக கட்டத் தொகுதிக்கான நாடாவை வெட்டித் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலதரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையின் குறைகளை நேரில் சென்று பார்வையிட்டார்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

(மல்லாவி)

நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு கடந்த 25ஆம் திகதி பிற்பகல் 3.30மணியளவில் திடீர் விஜயம் ஒன்றை வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் மேற்கொண்டார்.

இதன்போது வைத்தியசாலையைப் பார்வையிட்டதுடன் வைத்திய அதிகாரி உட்பட பணியாளர்களுடன் கலந்துரையாடி குறை நிறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 22ஆம் திகதி நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியருக்கும் மருந்தாளருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மருந்தாளர் நோயாளர்களுக்கு மருந்து வழங்காது வெளியேறியமை தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்த நிலையில் அவர் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அங்கு சென்ற அவர் வைத்தியர், பணியா ளர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு சேவைகள் தொடர்பில் எடுத்துரைத்ததுடன் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

இதேவேளை குறித்த மருந்தாளருக்கு விசாரணை முடியும் வரை கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் செட்டிக்குளம் பிரதேச வைத்தியசாலையில் கடமையினை பொறுப்பேற்குமாறு இடமாற்றக் கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ஏக்கரில் வடக்கு மாகாணத்திற்கான

# கரும்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணி ஆரம்பம்!

### கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**வடக்கு மாகாணத்துக்கான கரும்பு ஆராய்ச்சி நிலையம் இவ்வருடம் கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியை மீள ஆரம்பிப்பதற்காக ஒரு கருத்திட்ட முயற்சியாக இரத்தினபுரி உடவளவ பிரதேசத்தில் அமைந்துள்ள கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் கரும்பு பரீட்சார்த்த திட்டம் கடந்த 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முதலாவது கரும்புச் செய்கையானது இரணைமடு விவசாய ஆராய்ச்சிநிலையத்தில் 2 ஏக்கர்நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டது.

அதிலிருந்து துண்டங்கள் பெறப்பட்டு கண்ணகி புரத்திலுள்ள20 விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்குரிய கரும்புத்துண்டங்கள் வழங்கப்பட்டு செய்கை பண்ணப்பட்டது.

அதில் 7 விவசாயிகள் வெற்றிகரமாக கரும்புச் செய்கையை மேற்கொண்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாக இவ்வருடம் ஸ்கந்தபுரம், அக்கராயன், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளில் வசிக்கின்ற 29 விவசாயிகள் கரும்புச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். இக்கரும்பு பயிர்ச்செய்கையை மேலும் விஸ்தரிப்பதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரிக்குளம் பகுதியில் 25 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டு கரும்பு ஆராய் ச்சி நிலையம் அமைக்கும் ஆரம்ப கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

## உழைக்கும் வர்க்கத்தின் கோரிக்கைகளை முன்வைத்து மே தினத்தை நடத்த ஏற்பாடு

### புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் வவுனியா மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

புதிய ஜனநாயக மாக்சிச–லெனினிசக் கட்சி தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் ஆகியவை இணைந்து உழைக்கும் மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து மே தினத்தை வவுனியாவில் ஏற்பாடு செய்துள்ளன.

அந்தவகையில் வன்னிப் பிராந்தியத்தில் உழைப்பாளர் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் முன்வைக்கவும் அதனை வென்றெடுக்க தொழிலாளர் சக்தியை அணிதிரட்டி தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் என்போரது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதன் மூலம் மக்கள் அதிகாரத்திற்கான மாற்று அரசியலை முன்னெடுக்கவும் இம்முறை உழைப்பாளர் தினமான மே தினத்தை நினைவு கூர்வதாக புதிய ஜனநாயக மாக்சிச- லெனினிசக் கட்சியின் வவுனியா மாவட்ட செயலாளர் என்.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை தொழிலாளர், விவசாயிகள் மற்றும் ஏனைய உழைக்கும் சக்திகளையும் ஐக்கியப்படுத்தி மேதின ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் ஆர்ப்பாட்ட பேரணியும் ஊர்திப் பவனியும் வவுனியா தமிழ் மகாவித்தியாலய பாடசாலை முன்பாக காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தை சென்றடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே உழைப்பாளர், விவசாயிகள், ஏனைய உழைக்கும் வர்க்க சக்திகளை ஆர்ப்பாட்டப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் பங்கு பெறுமாறு புதிய ஜனநாயக மாக்சிச–லெனிசக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (2)

## மாற்றுவலுவுள்ள சிறுவர்களின் மேம்பாட்டிற்கான மருத்துவ முகாம்

### முள்ளியவளையில் இன்று



(கிளிநொச்சி)

முல்லைத்தீவு CHILDFUND நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல் லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வழிகாட்டலின் கீழ் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத்திட்டம் எனும் சர்வதேச எண்ணக்கருவிற்கு அமைய மாற்றுவலுவுள்ள 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் மேம்பாட்டிற்கான மருத்துவ முகாம் நடைபெற்று வருகின்றது.


இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள 130 மாற்றுவலுவுள்ள மேற்படி வயதிற்குட்பட்ட சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், சமூகமேம்பாடு, உள நல மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து மாலை வரை வள்ளி புனத்தில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதன்போது காது, மூக்கு, தொண்டை, கண், உளநலம், குழந்தை மருத்துவம் ஆகியவற்றுக்கான சிகிச்சைகள் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டன. தொடர்ந்து சிகிச்சைகள் வழங் குவதற்கானஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டது.

இதன்பிரகாரம் கரைதுறை ப்பற்று பிரதேச செயலக பிரிவிற் குட்பட்ட மாற்றுவலுவுள்ள சிறுவர்களுக்கான மருத்துவ முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை வரை முள்ளியவளையின் அமைந்துள்ள கரைதுறைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். (2-277)




## போக்குவரத்துக்கு உதவாத நிலையில் வவுனியா மருக்காரம்பளை வீதி

### பொதுமக்கள் ஆதங்கம்



வவுனியா, மருக்காரம்பளை வீதி வாகனங்கள் பயணம்செய்ய முடியாதவாறு குன்றும் குழியுமாக மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, குளுமாட்டு சந்தியில் இருந்து மருக்காரம்பளை செல்லும் இவ் வீதியானது கணேசபுரம், சமயபுரம், சுந்தரபுரம், மணிபுரம், பத்தினியார் மகிழங்குளம், குகன் நகர், காத்தான் கோட்டம் ஆகிய கிராமங்களுக்கு செல்வதற்கான பிரதான வீதியாகும்.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாக குறித்த வீதி திருத்தப்படவில்லை.

இதன்காரணமாக மேற்படி கிராமங்களில் இருந்து பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளிகள், பொதுமக்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இரவு வேளைகளில் வீதியில் மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் குன்றும் குழியும் நிறைந்து காணப்படுவதால் விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

எனவே போக்குவரத்திற்கு ஏற்ற வித்ததில் திருத்தி தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

## தோட்டக் கொட்டகையிலிருந்து வயோதிபர் சடலம் நேற்று மீட்பு

கிளிநொச்சி)

தோட்டக்கொட்டகை ஒன்றிலிருந்து வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுக்காலை கிளிநொச்சி ஊரியான் பகுதியில் நடைபெற்றுள்ளது.

கண்டாவளை பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை வித்தியானந்ததுரை (வயது 52) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இவர் தனது வீட்டிலிருந்து ஊரியான் பகுதியில் அமைந்துள்ள தனது தோட்டக்காணிக்குச் சென்று தோட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளார். வழமைபோல நேற்று முன்தினம் மாலை சென்றவர் நேற்று அதிகாலை வரையில் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து அவரது உறவினர்கள் தோட்டக்காணிக்குள் சென்று பார்த்த போது தோட்டத்திலுள்ள கொட்டகைக்குள் அவர் இறந்து கிடந்துள்ளார். உடனடியாக கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்திற்கு விரைந்த பொலி ஸார் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2)

## இந்தியன் வீட்டுத் திட்ட வீடு வழங்குமாறுகோரி முள்ளிவாய்க்கால் கிழக்கு மக்கள் ஆர்ப்பாட்டம்

(முள்ளியவளை)

முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவையாளர் அலுவலர் பிரிவிற்குட்பட்ட சுமார் 150 குடும்பங்கள் இந்தியன் வீட்டுத்திட்டத்தின் ஊடாக தமக்கு வீடுகள் வழங்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று காலை 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நடைபெற்றது.

இதில் பங்கேற்றவர்கள்

''அரச நிர்வாகிகளே! எங்கள் கண்ணீரின் வேதனை உங்களுக்கு புரியவில்லையா?, அரசாங்க அதிபரே!, நாங்கள் உங்களை நம்பியுள்ளோம், அம்மாவே நீங்களே வழி செய்யுங்கள்'' ஆகிய வசனங்கள் அடங்கிய பதாகைகள் தாங்கிப் பிடித்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் அங்கு குழுமி நின்ற மக்களுக்கு கூறுகையில்,

“இந்தியன் வீட்டுத்திட்டம் காலம் கடந்த நடவடிக்கையாகும்.

ஆனால் இது தொடர்பில் கூடிய கவனமெடுத்து வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கூறினார்''


இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குடும்பங்கள் கலைந்து சென்றன.

புள்ளிகள் அடிப்படையில் வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டு முறைப்பாடுகள் காரணமாக இடைநிறுத்தப்பட்ட 60 குடும்பங்கள், வீட்டுத்திட்டம் கிடைப்பதற்கு கோரப்பட்ட புள்ளிகள் கிடைக்கப் பெறாத ஏனைய குடும்பங்களும் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீசைக்காரன் செய்த கலாட்டா



கோயிலிலிருந்து திரும்பிய கமலா வீட்டினுள் நுழைந்ததும், தன் வீட்டிற்கு யாரோ இரு விருந்தாளிகள் வந்திருப்பதைக் கண்டாள். அவர்கள் அவளுடைய தந்தையுடன் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்குக் கமலாவை அறிமுகம் செய்து வைத்தார் அவள் தந்தை! அவர்களுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுக கமலா உள்ளே சென்றுவிட்டாள.

சிறிது நேரங்கழித்து அவள் தந்தை அவளிடம் வந்து, 'கமலா! அந்தப் பிள்ளை ரவி உன்னை ஒரு திருமணத்தில் பார்த்தானாம். அவனுக்கு உன்னைப் பிடித்து இருக்கிறதாம் அதனால் பெண் கேட்பதற்காக தன் தந்தையுடன் வந்திருக்கிறான். இந்த வரன் அமைந்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஆனால், பிள்ளையின் அப்பா பத்தாயிரம் ரூபாய் பணத்தை வரதட்சிணையாகக் கேட்கிறார்?" என்றார்.

பார்ப்பதற்கு அழகாக இருந்த ரவியைத் திருமணம் செய்து கொள்வதை நினைத்தவுடனே மிகவும் மகிழ்ந்த கமலா வரதட்சிணை விடயத்தைக் கேட்டு மனமொடிந்து போனாள். அவளுடைய தந்தை வந்தவர்களிடம் யோசித்துச் சொல்வதாகக் கூறி அவர்களை வாயில் வரை சென்று வழி அனுப்பினார்.

அவர்கள் சென்றதும் வீட்டிற்குள் திரும்பி வந்த கமலாவின் தந்தை. 'கமலா! உனக்குப் பிள்ளையைப் பிடித்து இருக்கிறது என்று உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. அதனால் நான் சம்மதம் என்று சொல்லி விட்டேன்!' என்றார் 'ஐயையோ! வரதட்சிணைக்கு என்ன செய்வீர்கள், அப்பா?' என்றுகவலையுடன் கமலா கேட்க, 'அதைப்பற்றி கவலைப்படாதே! நான் எப்படியாவது ஏற்பாடு செய்கிறேன்!' என்று அவர் சொல்லி விட்டார்.

உடனே, திருமணத் திகதி குறிக்கப்பட்டு, திருமணத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கத் தொடங்கின.

வரதட்சிணைப் பணத்தை எப்படியோ ஏற்பாடு செய்து விட்டதாக கமலாவின் தந்தை கூறினார். திருமண தினமும் வந்தது. உறவினர்களும், நண்பர்களும் கூடிவிட்டனர். மணப்பெண்ணிற்கு அலங்காரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது, மிகவும் பருமனான ஒரு ஆள் மணப்பெண் தங்கியிருந்த வீட்டில் நுழைந்தார்.

'நான் ரவியின் பெரியப்பா! ரவி மணக்கப் போகும் பெண்ணை நான் பார்க்க விரும்புகிறேன்!' என்றார். நீளமான தலைமுடியும், அரிவாள் மீசையும் கொண்ட அவரைப் பார்ப்பதற்கு நாடக வேடதாரி போல் இருந்தாலும், மாப்பிள்ளையின் பெரியப்பா என்பதால் அவரை வரவேற்ற கமலாவின் தந்தை, தன் மகளை அறிமுகப்படுத்தினார்.

பிறகு அந்த அரிவாள் மீசைக்காரர் நேராக மாப்பிள்ளை தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றார். அங்கு சென்று ரவியின் தந்தையை சந்தித்து, 'நான் கமலாவின் மாமா! மாப்பிள்ளையைச் சிறிது பார்க்கலாமா?' என்றதும், ரவியின் அப்பாவும் தன் பிள்ளையை அறிமுகப்படுத்தினார்.

முகூர்த்த நேரம் நெருங்கியதும் அப்போது திடீரென ரவியின் தந்தையைத் தனியே அழைத்த மீசைக்காரர், 'உங்களிடம் வரதட்சிணையைப் பற்றி பேச வேண்டியிருக்கிறது. உங்கள் அறைக்குச் செல்வோமா?' என்று கிசுகிசுக்க, ரவியின் தந்தை அவரைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

'உங்களிடம் வரதட்சிணைப் பணத்தை...' என்று தொடங்கிய அந்த மீசைக்காரர் திடீரென பயங்கரமாக இருமத் தொடங்கினார். 'தண்ணீர்... தண்ணீர் கொண்டு வாருங்கள்!' என்று திணறிக் கொண்டே அவர் கூற, ரவியின் தந்தை தண்ணீர் எடுத்து வர வெளியேறினார்.



தண்ணீர் எடுத்து வந்ததும், அதை அருந்திய மீசைக்காரர், 'உங்களிடம் இப்போதே வரதட்சிணைப் பணத்தைத் தந்து விடலாமா என்று என் மைத்துனன் கேட்டான்' என்று சொல்ல, ரவியின் தந்தை சம்மதித்தார்.

உடனே, கமலாவின் தந்தையிடம் சென்ற மீசைக்காரர், 'உங்களிடம் ரகசியமாகப் பேச வேண்டியிருக்கிறது. உங்கள் அறைக்குச் செல்வோமா?' என்று கேட்க, இருவரும் அறைக்குள் நுழைந்தனர்....... (தொடரும்)




- 1192 - ஜெருசலேம் மன்னன் முதலாம் கொன்ராட் முடிசூடி இரண்டாம் நாள் கொலை செய்யப்பட்டான்.
- 1792 - பிரான்ஸ் ஆஸ்திரிய நெதர்லாந்தை முற்றுகையிட்டது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிககாவின் அட்மிரல் டேவிட் ஃபராகுட் கூட்டமைப்பிடம் இருந்து லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரைக் கைப்பற்றினான்.
- 1876 - லண்டன் அரசியாக விக்டோரியா மகாராணி தெரிவு செய்யப்பட்டமை லண்டன் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.
- 1920 - அசர்பைஜான் சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது.
- 1932 - மஞ்சள் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி முதன முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1945 - முசோலினியும் அவனது மனைவியும் இத்தா லிய எதிர்ப்புப் படையினரால் சுட்டுக் கொல் லப்பட்டனர்.
- 1952 - இரண்டாம் உலகப் போரின் போது ஐக்கிய அமெரிக்காவினால் கைப்பற்றப்பட்ட ஜப்பானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறின.
- 1965 - டொமினிக்கன் குடியரசில் ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் தரையிறங்கினர்.
- 1978 - ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி முகமது டாவூட் கான கம்யூனிச சார்புப் போராளிகளால் பதவியிறக்கபபட்டுக் கொல்லப்பட்டார்.
- 1995 - பலாலியில் அவ்ரோ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதற்கு அடுத்த நாள் இன்னுமொரு விமானம் வீழ்த்தப்பட்டது.
- 2000 - இலங்கை இராணுவத்தினருக்கெதிரான விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை முடிவுக்கு வந்தது.
- 2001 - கோடீஸ்வரர் டென்னிஸ் டீட்டோ என்பவர் விண்வெளிக்குச் சென்ற முதல் உல்லாசப் பயணியானார்.
- 2005 - இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கொழும்பில் கடத்தப் பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

பிறப்புகள்

- 1758 - ஜேம்ஸ் மன்ரோ, ஐக்கிய அமெரிக்காவின் ஐந்தாவது குடியரசுத் தலைவர் (இ. 1831)
- 1937 - சதாம் உசேன் - ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி (இ. 2006)

இறப்புகள்

- 1942 - உ. வே. சாமிநாதையர், தமிழறிஞர் (பி. 1855)
- 1945 - முசோலினி, இத்தாலிய நாட்டு சர்வாதிகாரி (பி. 1883)
- 1955 - தி. வே. சுந்தரம் அய்யங்கார், இந்திய தொழிலதிபர் (பி. 1877)
- 1999 - ஆர்தர் சவ்லோவ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1921)
- 2005 - தர்மரத்தினம் சிவராம், ஈழத்து ஊடகவியலாளர் (பி. 1959)

சிறப்பு நாள்

வேலையின் [illegible] உலக தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

...இதில் 'கூக்கூ' பாடலை லதா ரஜினிகாந்தும், 'என்னென்ன கனவு கண்டாயோ' பாடலை இளையராஜாவும் பாடியிருந்தார்கள்.

### புகழ்

இந்தப்படத்தில் என்னுடன் பணியாற்றிய உதவி இயக்குனர்கள் ஹரி, மணி பாரதி இருவரும் இப்போது டைரக்டர்களாக இருக்கிறார்கள். ஹரி ஆக்ஷன் படங்களில் புகழ் பெற்று வருகிறார். சரவணன் என்ற இன்னொரு உதவி இயக்குனர் இப்போது புதிய படம் இயக்கும் முயற்சியில் இருக்கிறார். இவரும் பெரிய அளவில் வருவார்.

ரஜினிக்கும் எனக்குமான நட்பு, திரைப்படக் கல்லூரியில் ஆரம்பித்து 34 வருடங்களாக தொடர்கிறது. 'சிவாஜி' படத்துக்குப்பின் ரஜினியின் புகழ் இன்னும் உச்சத்துக்கு வரும்.

'ரஜினி இல்லாமல் நாங்கள் இல்லை. அவரது வளர்ச்சிதான் எங்கள் பெருமை: நண்பன் என்ற முறையில் அவரை தலையில் வைத்து தாங்க வேண்டுமே தவிர, மடியில் உட்கார்ந்து கொண்டு தடையாக இருக்கக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறேன்.'

இவ்வாறு டைரக்டர் கே.நட்ராஜ் கூறினார்.

தமிழில் வெளிவந்த 'நாட்டாமை' படம், தெலுங்கில் 'பெத்தராயுடு' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டது. 25 வாரங்கள் ஓடிய இப்படத்தின் வெற்றி விழாவில் ரஜினிக்கு பெரிய தங்கக்காப்பை பழம்பெரும் நடிகர் ஏ.நாகேசுவரராவ் அணிவித்தார்.

தமிழில் மிகப்பெரிய வெற்றி பெற்ற படம் 'நாட்டாமை.' இதில் கதாநாயகனாக சரத்குமாரும், அவருடைய தந்தையாக விஜயகுமாரும் நடித்தனர்.

### ரஜினி யோசனை

தெலுங்கு நடிகர் மோகன்பாபு, ரஜினியின்



தெலுங்குப் படமான 'பெத்தராயுடு' படத்தில் ரஜினி

நண்பர். அவர் தெலுங்கில் ஒரு படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டார்.

'நாட்டாமை படம் நன்றாக இருக்கிறது. அதை தெலுங்கில் எடுக்கலாம் என்று ரஜினி யோசனை தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல. பட அதிபர் ஆர்.பி.சவுத்திரிக்கு போன் செய்து, நாட்டாமை கதை உரிமையை மோகன்பாபுவுக்கு வாங்கித் தந்தார்.

### நண்பரின் கோரிக்கை

'"தெலுங்குப் படத்தில் நீங்களும் நடிக்க வேண்டும்' என்று ரஜினியிடம் மோகன்பாபு கேட்டுக்கொண்டார்.

'சரி. தமிழில் விஜயகுமார் நடித்த வேடத்தில் நான் நடிக்கிறேன்' என்று ரஜினி கூறினார்.

மோகன்பாபுவின் 'ஸ்ரீலட்சுமி பிரசன்னா பிக்சர்ஸ்' பேனரில், 'பெத்தராயுடு' தயாராகியது. ரவிராஜா பின்னிரெட்டி டைரக்ட் செய்தார்.

பானுப்பிரியா, ஆனந்தராஜ் ஆகியோரும் நடித்தனர்.

### வெள்ளி விழா

படம் 1995 ஜூன் 15 ஆம்திகதி திரையிடப்பட்டது.

25 வாரங்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது.

### வெற்றி விழா

இந்தப்படத்தின் வெற்றி விழா, திருப்பதியில் நடந்தது. வெங்கடேஸ்வரா பல்கலைக் கழக மைதானத்தில், பிரமாண்டமாக நடந்த இந்த விழாவில், ஒரு லட்சம் பேருக்கு மேல் கலந்து கொண்டனர்.

விழாவுக்கு, அப்போதைய ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு தலைமை தாங்கினார்.

மேடைக்கு ஒவ்வொருவராக அழைக்கப்பட்டனர். கடைசியாக அழைக்கப்பட்டவர் ரஜினி. மேடையின் நடுவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அவரை அமரச்செய்தார், சந்திரபாபு நாயுடு. அப்போது, கூடியிருந்தவர்கள் பலமாக கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

### 'பாட்ஷா பேசட்டும்'

ஒவ்வொரு பேச்சாளராக ஒலிபெருக்கி முன் வந்து பேசிக்கொண்டிருந்தனர்.

நாலைந்து பேர் பேசியதுமே, கூட்டத்தினர் பொறுமை இழந்து, 'பாட்ஷாவைப் பேசச் சொல்லுங்கள்' என்று கூச்சல் போட்டனர்.

நடிகர் மோகன்பாபு எழுந்து, 'இந்த விழாவின் பிரதம விருந்தினர் ரஜினிதான். அவர் கடைசியாகத்தான் பேசுவார். எல்லோரும் அமைதியாக இருங்கள்' என்று கேட்டுக் கொண்டார்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்



**வைரமுத்து-126**

..கருவாச்சி, ரங்கம்மா, முக்குறுணி, மூணு பேரும் மொடாவுல தண்ணி காய வச்சக் கேப்பமாவ உள்ள போட்டுக் கிண்டோ கிண்டுன்னு கிண்டுறாக. பொழுது ஏறு பொழுதாயிட்டிருக்கப்பா; எடுங்க மாலைய; கட்டுங்க தாலிய.

புதுச்சேல சுத்திப் பூவும் பொட்டும் வச்சுத் தங்கச்சியக் கூட்டிட்டு வாரா அக்காகாரி. தோழிப் பொண்ணுக்குத் தொணப்பொண்ணா வாரா கருவாச்சி.

மாத்திக்குங்க மாலைய.

மாத்திட்டாக.

ஒலக் கொட்டான்ல இருக்கிற உப்புல வலதுகால வச்சுச் கட்டப்பா தாலிய.

கட்டிட்டான் தாலிய.

ஒரு முடிச்ச அவன் போட்டான்; மிச்ச இரண்டு முடிச்ச மூத்தபொண்டாட்டி வந்து முடிஞ்சுவிட்டா.

கருவாச்சிக்கு மட்டும் தெரியிற மாதிரி அவளக் கையெடுத்துக்கும்புட்டாரு சுப்பஞ்செட்டியாரு; ஒடஞ்ச கண்ணுல ஒழுகுது தண்ணி.

வந்திருக்கிற ஆளுகளுக்கெல்லாம் வைர மோதிரம் தெரியட்டும்ன்னு அரிக்காத மூச்ச அடிக்கடி சொறிஞ்சு நிக்கிறான் முத்துக்காமு.

பெரிய மனுசங்க வாங்கப்பா. வாழப்போற வாழக்குருத்துகளுக்கு விபூதி வச்சு விடுங்கப்பா.

அழுக்குத் துண்டெடுத்து அழுத கண்ணத் தொடச்சுக்கிட்டே கூப்பிட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

உருமாப் பெருமாத்தேவரும் சக்கணனும் அம்மையநாயக்கரும் கடப்பாரக் கவுண்டரும் விபூதி வச்சுவிட்டு, கால்ல விழுந்தவுக கையில ரெண்டு ஒண்ணே கால், ஒண்ணுன்னு செய்மொறை செய்ய, நல்லா இருங்கன்னு உக்காந்த எடத்துலயே சொல்லிவிட்டு ஒதுங்கி ஓரமாகி செருப்பு மாட்டிக் கெளம்பிட்டாரு சடையத்தேவரு.


விரிச்ச ஆமணக்கு எலையில கேப்பக் களிய அகப்பையில அள்ளி மொத்த மொத்தமா மோந்து போடவும் அவுக அவுக பருப்புச் சாம்பாருக்குப் பள்ளம் பறிச்சுக்கிட்டாக நடுவுல.

கேப்பக் களிச் சூட்டுல உருகி ஓடுது உள்ள போட்ட நெய்யி. யார் யாருக்கு ஜாதகத்துல அந்த வருசம் சுக்கிரதெசைன்னு போட்ருக்கோ அவுகளுக்கு மட்டும் விழுகுது முங்கக்காத்துண்டும் கத்தரிக்காக் கீத்தும்.

இதப் பாத்ததும் செட்ட கிறுக்கு வந்திருச்சு முத்துக்காமுக்கு.

கல்யாணத்துக்கே நெல்லுக் கஞ்சி ஊத்த வக்கில்லாத மாமன், பொண்ணு எதுக்குப் பெத்த பொண்ணு?

பித்துப்புடிச்ச கொரங்கு மாதிரி பிச்சு எறிஞ்சான்



மாலைய. அது ஓடி விழுந்து போச்சு களிக்கிண்டி வச்ச அடுப்புல.

எந்திரிங்கடி போகலாம். எங்கூருக்குப் போயாச்சும் நெல்லுச் சோறு திம்போம்.

ஒத்தப் பொண்ணக் கொடுத்தன்னைக்கே மனசுக்கு ஒத்தத் தாப்பாப் போட்டுக்கிட்டேன்; இப்ப ரெட்டப் பொண்ணும் குடுத்ததனால ரெட்டத் தாப்பாப் போட்டுக்கிர வேண்டியதுதான் நெனச்சாரு; சொல்லல.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய் நிவாரணமும் உணவு முறையும்

## நீரிழிவு நோயை கட்டுப்படுத்தலாம்

எதிலும் பரபரப்பு , அவசரம், பதற்றம், காலச் சக்கரத்தின் வேகமான ஓட்டம், கணனி யுகத்தின் தலையீடு, வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றம். மனிதன் செய்து வந்த வேலைகளை எந்திரத்திடம் ஒப்படைத்து விட்டது. நாகரிக வேட்கையில் துரித உணவு பழக்கவழக்கங்கள் பாரம்பரியமிக்க நமது வாழ்க்கை முறைகளையே தலைகீழாகப் புரட்டிப்போட்டு விட்டது. இதன் விளைவாக இன்று உலக நாடுகளில் நீரிழிவு நோய் என்ற சர்க்கரை நோய், எய்ட்ஸ் நோயை விடவும் வேகமாகப் பரவி மனித குலத்தை ஆட்டிப் படைத்து வருகிறது. இதனால் கோவில்களுக்கு அடுத்தபடியாக நீரிழிவு நோய் சிகிச்சைமையங்களில் தான் அதிக கூட்டங்களை காண முடிகிறது.

### விடிவு உண்டா

இதற்கு விடிவு இல்லையா? நீரிழிவு நோயில் இருந்து விட பட முடியதா? என்ற கேள்விக்கு நீரிழிவு நோய் சிகிச்சை நிபுணர் ஒருவரிடம் விடை கேட்ட போது கிளிப் பிள்ளைக்கு சொல்வது போல நீரிழிவு நோய் குறித்து விளக்கமாகச் சொன்னார்.

### உடற்கோளாறு

சர்க்கரை (நீரிழிவு) என்பது ஒரு நோயே அல்ல. அது ஒரு உடற்கோளாறு அவ்வளவே. நீரிழிவு ஒருவருக்கு இருக்கிறதா? இல்லையா? என்பது எழுவது சதவீதம் தெரியாது. முப்பது சதவீதம் தான் தெரியும்.

### அறிகுறிகள்

ஒருவருக்கு நீரிழிவு நோய் இருக்கிறதா என்பதை ஒரு சில குறிப்பிட்ட அறிகுறிகள் மூலமாக கண்டறியலாம். அதிகமாக பசி எடுக்கும். நாவறட்சி ஏற்பட்டு அதிக தாகம் எடுக்கும். சிறுநீர் அடிக்கடி வரும். அதாவது அதிகமாக நீர் பிரியும். மேலும் உடல் உழைப்பு, சிறிய புண்கள் கூட ஆறுவதற்கு அதிக நாட்கள் ஆகும், பார்வை மங்குவது, வேகமாக எடை குறைவது, ஆமாம் திடீரென்று எடை குறையும், சோர்வு, தோள் பட்டை வலி, பிறப்புறுப்புக்களில் அரிப்பு. ஆனால் முப்பது சதவிகிதத்தினருக்கு மட்டுமே இப்படி அறிகுறிகள் தென்படும். மீதமுள்ள எழுவது சதவிகிதத்தினருக்கு இப்படி அறிகுறிகள் தெரியாது. தங்களுக்கு வு நோய் இருப்பது உணராமலேயே அதை அறியாமல் தான் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வேறு ஏதாவது ஒரு மருத்துவ சிகிச்சைக்கு வரும் போது தான் பலருக்கும் நீரிழிவு நோய் இருப்பதே கண்டுபிடிக்கப்படுகிறது.

### எல்லோருக்கும் பொருந்துமா?


இந்த அடையாளங்கள் எல்லோருக்கும் பொருந்துமா என்றால் கிடையாது. ஒரு சிலருக்கு இது மாறுபடும். அதிகமாக உடல் எடை குறைதல் உடம்பில் தளர்ச்சி, தோள் பட்டை வலி, கைகளை தூக்க முடியாமை, பின்னுக்கும் போகாது இது போன்ற அறிகுறிகள் தென்படுபவர்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதை சொல்லி விட லாம்.

ஆனால் தோள் பட்டையில் வலி இருப்பவர்கள், கைகளை தூக்க முடியாதவர்கள் முதலில் எலும்பு வைத்தியர்களைத் தான் அணுகுகிறார்கள். அதில் குணம் ஏற்படாததால் நீரிழிவு நோய் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு நீரிழிவு நோய் சிகிச்சை வைத்தியரை நாடி வருகிறார்கள்.

நீரிழிவு நோய் இருப்பவர்களுக்கு அதற்கான அறிகுறிகள் தெரிய வேண்டுமென்ற நியதி எல்லாம் கிடையாது. முன்பெல்லாம் நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத்தான் நீரிழிவு நோய் காணப்பட்டது. ஆனால் இப்போது அப்படியில்லை. வயது வித்தியாசம் இல்லாமல் எந்த வயதிலும் நீரிழிவு நோய் வருகிறது. சிறு வயது உடையவர்கள் முதல் முதியவர்கள் வரை இந்த நோய் விட்டு வைப்பதில்லை. பிறக்கும் குழந்தைக்கும் வந்து விடுகிறது.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் நீரிழிவு நோய் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் ஐந்து கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கிராம வாழ்க்கையும் நகர வாழ்க்கையாக மாறி வருவது தான் இதற்குக் காரணம். முன்பெல்லாம் உடல் உழைப்பு இருந்தது. இப்போது குறைந்து வருகிறது. சைக்கிளில் செல்வது, நடந்து செல்வது என்பதெல்லாம் குறைந்து விட்டது. இதனால் உடல் எடை கூடுகிறது.




### நீரிழிவு நோய் யார் யாருக்கு வரும்?

துரித உணவுப் பழக்கமும் நீரிழிவு நோய்க்கு மேலும் ஒரு காரணமாகும். கர்ப்பப்பையில் குழந்தையை சுமக்கும் பெண்களுக்கும் நீரிழிவு நோய் வரும். கர்ப்பப்பையில் குழந்தை இருக்கும் போது பதினாறு சதவீத பெண்களுக்கு இந்த நோய் வரும் என்பதும் ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

உடல் பருமன் உள்ளவர்களுக்கும் 3 1/2 கிலோவுக்கு மேல் எடையுள்ள குழந்தையை பெற்றெடுத்த தாய்க்கும் நீரிழிவு நோய் வர சந்தர்ப்பம் உள்ளது. அவர்கள் அதற்கான பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

தவிர 30 வயதினருக்கு மேலுள்ளவர்களும் முக்கியமாக தனக்கு முந்தைய தலைமுறையினருக்கு (உதாரணம்: தந்தை, தாத்தா) நீரிழிவு நோய் இருந்திருந்தால் அவர்கள் கண்டிப்பாக நீரிழிவு நோய் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

பெற்றோர் இருவருக்கும் நீரிழிவு நோய் இருந்தால் பிள்ளைக்கு வர 90 சத வீதம் வரை வாய்ப்புண்டு.

பெற்றோரில் ஒருவருக்கு நோய் இருந்து இன்னொருவர் ஏற்கனவே இந்நோய் பாதிக்கப்பட்ட குடும்பத்திலிருந்து வந்திருந்தால் பிள்ளைக்கு நோய் வர 70 சதவீதம் வாய்ப் புண்டு. பெற்றோரில் ஒருவருக்கு மட் டுமே இருந்தால்40 சதவீதம் வாய்ப்புண்டு.

பெற்றோரில் ஒருவருக்கு இந்நோய் இல்லையென்றாலும் பரம்பரையில் யாருக்கேனும் இருந்திருந்தால் 20 சதவீதம் வாய்ப்பு.

உடற்பருமன் மட்டுமல்ல, மன உளைச்சலாலும் இந்நோய் வர வாய்ப்புள்ளது.

பிறந்த குழந்தையின் எடை 4 கிலோவுக்கு மேல் இருந்தாலும் இந்நோய் பிற்காலத்தில் வர வாய்ப்புள்ளது.

### நீரிழிவு நோயின் பாதிப்புக்கள்

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பது ஆபத்தானது. இது இரத்த ஓட்டத்தை வெகுவாக குறைத்து விடும். இதனால் கண்பார்வை மங்கும், காயங்கள் ஆறாது, சிறுநீரகம் செயலிழக்கும், நரம்புகள் பாதிக்கப்பட்டு கை, கால்களில் எரிச்சல், மற்றும் ஊசியால் குத்துவது போன்ற வேதனையுணர்வு ஏற்படும். சிலருக்கு கால்கள் மருத்துப் போகலாம். மாத விடாய்க் கோளாறுகள் வரும்.

இதயத்திற்கு இந்த நோய் மிகப் பெரிய சவால் தான். நீரிழிவு நோயாளர்களுக்கு இதய நோய் மற்றும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பு 2 முதல் 5 மடங்கு வரை அதிகம்.

### நீரிழிவு நோயின் வகைகள்

நீரிழிவு நோய் வகை-1, வகை-2 என இரு வகைப்படும். முதல் வகை சிறுவயதிலேயே வந்து விடும். 5சத வீதமானோருக்குத்தான் இப்படி வரும். பாரம்பரிய நோயும் அல்ல.

இரண்டாவது வகை பாரம்ப ரியமாக வரக்கூடியவை. இன்சுலின் உற்பத்தியில் திறன் குறைந்த நிலை ஒருவகை. இதுவே வகை-1 என்பார்கள்.

இன்னொன்று இன்சுலின் உற்பத்தி முற்றிலுமாக இல்லாத நிலை. இதுவே வகை -2 என்பார்கள்.

வகை-1 இல் இன்சுலின் உற்பத்தி பாதியாக அல்லது தேவையான அளவுக்கு குறைவாகவே சுரக்கும். இதுதான் பெரும்பாலானோருக்கு ஏற்படக்கூடியது. இந்த நோயாளிகள் 40 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் உடற்பருமனாக இருப்பவர்களாகவும் இருக்கக்கூடும். இவர்கள் உணவுக் கட் டுப்பாடு, உடற்பயிற்சி மற்றும் மாத்திரைகள் மூலம் நோயை கட்டுக்குள் வைத்திருக்கலாம்.

வகை-2 இல் கணையம் பழுதுபட்டு முற்றிலுமாக இன்சுலின் சுரப்பி செயலிழந்து உற்பத்தியில்லாமல் இருக்கும். பெரும்பாலும் சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் தான் இந்த பாதிப்பு நேரிடுகிறது. ஜுவனைல் டயபடீஸ் (Juvenile Diabetes) என்று சொல்லப்படும். இந்த நோய்க்கு ஊசி மூலமாக இன்சுலினை உடலுக்குள் செலுத்தியே ஆக வேண்டும்.

### எல்லோருக்குமே

முன்பெல்லாம் நகர்ப்புறங்களை காட்டிலும் கிராம புறங்களில் நீரிழிவு நோய் அதிகமாக இருந்ததில்லை. ஆனால் இப்போது அந்த வேறுபாடு குறைந்து விட்டது.

கிராமப்புறங்களில் வசிப்பவர்களும் நீரிழிவு நோய்க்கு ஆளாகி வருகின்றனர். சமுதாயத்தில் நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வு என்னதான் இருந்தாலும் இந்த நோய்க்கு ஆளானவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகிறது. ஏனெனில் கிராமங்களில் வசிப்பவர்களிடமும் உடல் உழைப்பு இல்லாமல் போய் விட்டது. அதாவது தொலைக்காட்சி, குளிர் சாதனப் பெட்டி அரவை எந்திரம் என நவீன வசதிகள் வந்துவிட்டன. கிராமங்களில் நடந்து போகிறவர்கள் கூட ஸ்கூட்டர் அல்லது வேறு இரு சக்கர வாகனங்களில் தான் போகிறார்கள்.

### கட்டுப்படுத்தலாம்

நீரிழிவு நோயைக் குணப்படுத்த முடியாது . ஆனால் கட்டுப்படுத்தலாம்.

உணவுக்கட்டுப்பாடு, உடற் பயிற்சி, மருந்து, இன்சுலின்.

இந்த 4 வகைகள் மூலம் இந்நோயை கட்டுப்படுத்தலாம். இப்படி நோயைக் கட்டுக்குள் வைத்திருந்தால் எந்த பிரச்சினையும் வராது. ஆனால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கதவறினால் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியது வரும்.

நீரிழிவு நோயை கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிட்டால் கண் பார்வை மங்கும், சிறுநீரகம் பாதிக்கப்பட லாம். காயம் ஏற்பட்டு புரையோடிப் போனால் கை, கால் களை வெட்டி எடுக்க வேண்டிய அபாயமும் ஏற்படலாம். உடல் பருமானாக இருப்பவர்களுக்கு இந்நோய் வருவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு. அப்பாவுக்கு நீரிழிவு நோய் இருந்து அவரது மகன்களில் ஒருவர் 100 கிலோ எடை இருந்து இன்னொரு மகன் 50 கிலோ எடை இருந்தால் 50 கிலோ எடையுள்ள மகனைக் காட்டிலும் 100 கிலோ எடையுள்ள மகனுக்கு நீரிழிவு நோய் வரு வதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.

மன அழுத்தம் இருந்தால் இந்நோய் வரும் என்பது உண்மை இல்லை. ஆனால் அதே சமயம் சிக்கல் மிகுந்த வாழ்க்கையில் உழல் பவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

### மருத்துவ விஞ்ஞான வளர்ச்சி

முன்பெல்லாம் நீரிழிவு நோய் கட்டுப்படுத்த மருந்து மாத்திரைகள் எல்லாம் கிடையாது. ஆனால் இப்போது அப்படி இல்லை. மருத்துவ விஞ்ஞான வளர்ச்சி காரணமாக தனித்தனி மருந்து மாத்திரைகள் வந்து விட்டன.

நமது உடலில் உள்ள கணையம் இன்சுலினை சுரந்து உடலின் எல்லா பகுதிக்கும் அனுப்பி வைக்கும் கணையத்தில் தேவையான அளவு இன்சுலின் சுரக்காத போது இரத்தத்தில் நீரிழிவு நோயின் அளவு அதிகரித்து விடுகிறது. ஆகவே உடலுக்குத் தேவைப்படும் இன்சுலினை நாம் உடலுக்குள் செலுத்தியதாக வேண்டும். உயிர் காக்க இன்சுலின் தேவை.

கணையம் பழுதடைந்து விட்டாலும் உடலில் எதிர்ப்பு சக்தி குறைந்து விடும். அப்போது உடலில் இன்சுலின் சுரப்பது நின்று விடும். இதனால் இன்சுலின் போட வேண்டியது வரும். கடைசி வரை இந்த இன்சுலினை போட்டுக் கொண்டே தான் இருக்கவேண்டும். அப் போது தான் உயிர் வாழ முடியும்.

இன்சுலின் ஊசி போட்டுக்கொள்வதால் உடலில் எந்தவித எதிர்விளைவுகளும் ஏற்படுவதில்லை. இன்சுலினில் இருப்பது; ஓமோன்கள்தான். ஆகவே எந்த பக்க விளைவுகளும் வருவதில்லை. இதற்கு முன்பெல்லாம் இன்சு லின் போட்டுக் கொண்டால் உணவு அருந்துவதற்கு 30 நிமிடம் காத் திருக்க வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியக் கொடியில் மாற்றம் வேண்டுமெனில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

## சரத் என் சில்வா வலியுறுத்து



(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாமல் தேசியக் கொடியில் மாற்றம் செய்ய முடியாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசியக் கொடியில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமாயின் அது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

தேசிய கொடியை திரிபுபடுத்தி பயன்படுத்துதல் குற்றச் செயலா என்பது குறித்து அரசியல் அமைப்பில் குறிப்பிடப் படவில்லை.

எனினும் எந்தவொரு நிலைமையிலும் தேசியக் கொடியில் மாற்றங்கள் செய்வதென்றால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

தேசியக் கொடி திரிபுபடுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டமை குறித்து கொழும்பு ஊடகமொன்று வினவிய போது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# உதவப்போய் உபத்திரவத்தில் சிக்கிய பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க

டுபாயிலிருந்து வரியின்றி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பித்தளை கம்பி கண்டேனரை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்காக கொழும்பு வர்த்தகர் ஒருவருக்கு பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க உதவி செய்துள்ளதாக சுங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இதனை பிரதி அமைச்சர் ஏற்க மறுத்துள்ளார். பிரதி அமைச்சர் சுங்கத்துக்குச் சென்று இதனை வரியின்றி விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்த போதிலும், சுங்கம் இந்த வேண்டுகோளை மறுத்ததாகவும் சுங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த வர்த்தகர் வரியின்றி இறக்குமதி செய்யப்பட்ட 18 கெண்டேனர் பித்தளைக் கூறுகளை ஏற்கனவே விற்பனை செய்துள்ளதாகவும்.

இதனால் அரசுக்கு வர வேண்டிய 10 கோடி ரூபா வரி கிடைக்காமல் போயுள்ளதாகவும் சுங்க சிரேஷ்ட அதிகாரியொருவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 | 30-40 | 40 |
| தக்காளி | 60 | 40 | 60 | 30-40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 50 | 30 | 30 |
| கரட் | 120 | 100 | 120 | 100 | 120 |
| பூசணி | 30 | 30 | 40 | 30-40 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 | 40 | 70 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100 | 50-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 120 | 40 | 60 | 40 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | — | 80 | 60-80 | 80 |
| பயற்றங்காய் | 60 | 60 | 60 | 30-50 | 40 |
| லீக்ஸ் | 150 | 140 | 160 | 140 | 160 |
| பீற்றூட் | 50 | — | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 80 | 80 | 80 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 600 | 400-600 | 500 |
| போஞ்சி | 130 | 120 | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | — | — | — |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 150 | 150 | 160 | 140-180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 130 | 130 | 100 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 30 | 80 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

# கிரீன்கார்ட் லோட்டரியை பயன்படுத்தியும் மோசடி

(கொழும்பு)

அமெரிக்காவினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற கிரீன்காட் லோட்டரி சீட்டிழுப்பை பயன்படுத்தி, மோசடிகள் இடம்பெறுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் சிரேஷ்ட தொடர்பாடல் அதிகாரி செலி ஸ்ரேன் தெரிவித்தார்.

இந்தச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றதாகக் கூறி, சிலர் போலியான முறையில் தொலைபேசி அழைப்பு களை மேற்கொண்டும், மின்னஞ்சல்களை அனுப்பியும் நிதி மோசடியில் ஈடுபடுகின்றனர்.

எனினும் இந்த சீட்டிழுப்பில் வெற்றிபெற்றுள்ளமை குறித்து www.dvlottery.state.gov என்ற அமெரிக்காவின் கிரீன்காட் சீட்டிழுப்புக்கான உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மாத்திரமே தெரிந்து கொள்ள முடியும்.

இந்த இணைத்தளத்தை தவிர மாற்று வழிகள் எவையும் இல்லை.

எனவே இதனை பயன்படுத்தி மோசடியில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பில் மிகுந்த அவதானமாக இருக்குமாறு அவர் எச்சரித்துள்ளார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 354

Search for people, places and things Nagendram Home

செல்வா ராஜ்




மாதுஷன் சிவராசா





லோஜி லோஜிதா




எட்வின் டேவிட்




வேணு வேணுசன்




சாலினி பத்மநாதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "நாங்கள் கடல் எல்லையை மீறியது இல்லை"



## "எல்லை தாண்டி வருவதை நிறுத்த வேண்டும்"

மீன்பிடித் தடைக்காலம் நீட்டிப்பு, மீனாகுமாரி கமிஷன் அறிக்கை, இலங்கை - தமிழக மீனவர் பேச்சுவார்த்தையில் இழுபறி... என அடி மேல் அடி விழுந்து நிலைகுலைந்து போயிருக்கிறார்கள் தமிழக மீனவர்கள்.

மூன்று கட்டங்களாக நடைபெற்றுள்ள இரு நாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தை இப்போது இறுதி அத்தியாயத்தை எட்டியுள்ளது.

இருதரப்பினருக்கும் சாதகமான முடிவை இலங்கை எடுக்குமா என்ற எதிர்பார்ப்பில் தமிழக மீனவர்கள் பதைபதைப்போடு காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதுபற்றி நிரபராதி மீனவர் விடுதலைக்கான கூட்டமைப்பின் தமிழக பிரதிநிதி அருளானந்தம், 'இலங்கை மற்றும் தமிழக மீனவர்களுக்கு இடையேயான பேச்சு வார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியிருக்கிறது.

ஏற்கனவே, மார்ச் மாதத்தின்போது நடந்த பேச்சுவார்த்தையில் எங்களுடைய அனைத்துக் கோரிக்கைகளையும் இலங்கை மீனவ சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்துவிட்டோம்.

அதற்கு, அவர்கள் எங்கள் நாட்டு அரசுடன் கலந்து ஆலோசித்து விட்டு சொல்வதாகக் கூறினர்.

அதேபோல், இலங்கை மீனவர்களும் எங்களிடம் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

முக்கியமாக, தடை செய்யப்பட்ட இரட்டைமடி, சுருக்கு மற்றும் தங்கூசி வலைகளையும் இழுவை படகுகளையும் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர்.

நாங்களும் அதற்கு ஒப்புக் கொண்டோம். மேலும், 365 நாட்களில் 83 நாட்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பது, ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு மாற 3 ஆண்டுகள் கால அவகாசம் போன்ற எங்களுடைய கோரிக்கைகளையும் இலங்கை மீனவப் பிரதிநிதிகளிடம் தெளிவாக விளக்கி விட்டோம். இனி முடிவு அவர்களுடைய கைகளில் தான் உள்ளது.

என்றுமே நாங்கள் இலங்கையை அந்நிய நாடாக கருதியதில்லை. மீனவனுக்குக் கடல் மட்டும்தான் ஒரே வாழ்வாதாரம்.

அவர்களுடைய வாழ்வாதாரத்தை சீர்குலைத்துவிட்டு நாங்கள் மட்டும் வாழ வேண்டும் என்று ஒருபோதும் எண்ணியது கிடையாது.

இதுநாள் வரை இருதரப்புகளில் இருந்தும் நிறைய சேதங்களை சந்தித்துவிட்டோம்.

நாங்கள் செய்த தவறுகளுக்காகப் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கக்கூட தயாராக இருக்கிறோம்.

நம் இருநாட்டு மீனவர்களுக்குள்ளான ஒற்றுமை கடந்தகால பேச்சுவார்த்தைகளின் மூலம் இறுக்கமாகி உள்ளது.

அந்த உறவு சிதைந்துவிட நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

அடிதடி சண்டையெல்லாம் நம்மோடு முடிந்துவிடட்டும். இனி வருபவருக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்கித் தருவோம்" என்றார் உருக்கமாக.

'இலங்கையில், தற்போது சிறிசேன தலைமையிலான ஆட்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முக்கியப் பங்காற்றி வருகின்றனர்.

மேலும், இலங்கை மீனவர்களுக்கு இவர்களுடைய ஆதரவு பலமாக இருப்பதால் இப்போது இருநாட்டு மீனவர் விவகாரம் வேறு ஒரு திசையை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளது.

இந்தப் போக்கு தமிழக மீனவர்களுக்கு எதிராக அமைய அதிக வாய்ப்புள்ளது' என்று கருத்து தெரிவிக்கின்றனர் விவரமறிந்தவர்கள்.

இன்னும் இரண்டு வாரங்களில் இருநாட்டு மீனவர் பேச்சுவார்த்தை தொடர்பான இறுதி முடிவை எடுக்க தயாராகி வருகிறது இலங்கை அரசு.

இது தொடர்பாக, கொழும்பு மீனவர் சங்கத் தலைவர் சதாசிவத்தைத் தொடர்புகொண்டு பேசியபோது. "இந்த விவகாரத்தில் இலங்கை வடமாகாணத்தைச் சேர்ந்த மீனவர்கள்தான் அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர்.




போராட்டத்தில்...

தமிழக மீனவர்களோடு நடந்த பேச்சுவார்த்தையில் இன்னும் இரண்டு வாரகாலத்துக்குள் இலங்கை அரசோடு பேசி முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளோம். தமிழக மீனவர்களிடம் நாங்கள் வைத்த கோரிக்கைகளும் நியாயமானவைதான். நாங்கள் பாரம்பரிய மீன்பிடி முறையைத்தான் இதுவரை கையாண்டு வருகிறோம். இரட்டைமடி வலை, சுருக்கு வலை மற்றும் இழுவை படகுகளைப் பயன்படுத்துவதில்லை.

கடல் வளத்தைக் காப்பதற்காக இவை இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால், தமிழகத்தில் பலரும் இதைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள். அதை மாற்றிக்கொள்ளுங்கள் என்று கோரிக்கை வைக்கிறோம்.

பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தபோதே தமிழக மீனவர்களால் ஈயக் குண்டு மற்றும் பெட்ரோல் பாம் கொண்டு இலங்கை மீனவர்கள் தாக்கப்பட்டார்கள்.

நாங்கள் எப்போதும் இலங்கைக் கடல் எல்லையை கடந்ததில்லை. ஆனால், தமிழக மீனவர்கள் கச்சத்தீவையும் தாண்டி இலங்கைக்கு மிக அருகில் வந்து மீன்பிடித்துச் செல்கின்றனர்.

தமிழக மீனவர்களோடு இணக்கமாகச் செல்லவே விரும்புகிறோம். இருந்தும் அரசு அறிவிக்கும் முடிபே இறுதியானது' என்றார்.

யாழ்ப்பாண மாவட்ட கடல் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை, 'இருநாட்டு மீனவர் பேச்சுவார்த்தையும் தொடங்கி 10 ஆண்டுகள் கடந்திருக்கின்றன.

ஆனால், இந்த 10 ஆண்டுகளில் என்னென்ன மாற்றங்களை மீனவர்கள் செய்திருக்கிறார்கள் என்றால் ஒன்றுமே கிடையாது. இது வெறும் பேச்சுவார்த்தைகளால் தீர்க்கக் கூடிய பிரச்சினையல்ல. இரு நாட்டு அரசுகளும் தலையிட்டு எப்போதோ தீர்த்திருக்க வேண்டும்.

ஆனால், அதற்கான முயற்சிகளை இருநாட்டு அரசுகளுமே எடுத்ததில்லை. நாங்கள் தமிழக மீனவர்களை வெறுக்கவில்லை. அவர்களை தொப்புள் கொடி உறவுகளாகத்தான் பார்க்கிறோம்.

ஆந்திராவில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டபோதும் துடிதுடித்துப் போனோம்.

நாங்கள் கேட்பதெல்லாம் ஒன்றுதான், தயவுசெய்து எல்லை தாண்டி வராதீர்கள்.

எங்கள் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்க வேண்டாம்' என்றார் வேதனையோடு.

இரண்டு தரப்பு மீனவர்களுக்குமான கருத்து மாறுபாட்டை போக்க வேண்டியது அரசின் கடமை!

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19,20ஐ எதிர்ப்பவர்கள் மக்களின் துரோகிகள்!

**சம்பிக்க கூறுகிறார்**

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது மற்றும் 20ஆவது திருத்தச் சட்டமூலங்களை நிறைவேற்ற இடையூறு விளைவிப்பவர்கள், மக்கள் துரோகிகளாக இலங்கை வரலாற்றில் இடம் பிடிப்பர் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளரும் மின்சக்தி அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள புதிய தேர்தல் முறையின் மூலம் எந்தவொரு அரசியல் கட்சிக்கோ அல்லது குழுவுக்கோ அசாதாரணம் ஏற்படப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமூலம் மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு, ஜாதிக ஹெல உறுமய கட்சி தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்றும், கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றின் போது அமைச்சர் ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன், இவ்விரு திருத்தச் சட்டமூலங்களுக்கும் ஏனைய கட்சிகளும் தங்களது ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

இவ்விரு சட்டமூலங்களை நிறைவேற்ற இடையூறு விளைவிப்பவர்கள், மக்கள் துரோகிகளாக இலங்கை வரலாற்றில் இடம்பிடிப்பர் எனவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதன்போது, மேலும் சுட்டிக்காட்டினார். (இ-5)

# சு.க. உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஜனாதிபதி தலைமைதாங்க வேண்டும்

**சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விருப்பம்**

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றிணைக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமைதாங்க வேண்டுமென சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷவை இணைந்துக்கொண்டு ஜனாதிபதி, கட்சியை தலைமைத்துவம் தாங்கி முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அது அவ்வளவு சிரமமான காரியமல்ல. ஒருசில பிரச்சினைகளே காணப்படுகின்றன.

நாங்கள் நாட்டை ஆட்சி செய்த காலத்தில் நான் பலதடவைகள் மனம் நோகடிக்கப்பட்டுள்ளேன். ஆனாலும் நாம் அதனை மறக்க வேண்டும். கடந்த காலங்களில் விட்ட தவறுகள் மீண்டும் இடம்பெறாத வகையில் நாம் பரஸ்பர புரிந்துணர்வுக்கு வரவேண்டும்.

எமது இந்த அரசியல் பயணத்தை நாம் உறுதியுடன் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். எம்மிடையே பிரிவு ஏற்பட்டிருந்த போது 1977 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் எமக்கு என்ன நடந்தது என்பதனை நாம் நினைவுகூர வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதுகாக்கும் நோக்கிலேயே இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் தலைவரை பாராளுமன்றத்திற்கு அழைப்பதற்காக அண்மையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டதென்றும் சபாநாயகர் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

"இதற்கு முன்னரும் பல தடவைகள் நாம் சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுக்களின் முக்கிய அதிகாரிகளை அழைப்பித்துள்ளோம். முன்பொரு சந்தர்ப்பத்திலும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தலைவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக, நாம் அவரை பாராளுமன்றத்திற்கு அழைப்பித்திருந்தோம் தவிர அவருக்கு பணிப்புரைகளை வழக்குவதற்காக அல்ல. சில ஊடகங்கள் இந்த விடயத்தை திரிபுபடுத்த முயற்சிக்கின்றன" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# யோஷித, சஜின்வாஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு விரைவில்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்சஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன ஆகியோர் அடுத்த சில தினங்களில் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படவிருப்பதாக தெரியவருகிறது.

அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய 4 ஆயிரம் மில்லியன் ரூபா பணத்தை இவர்கள் முறைகேடாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சீ.எஸ்.என் தொலைக்காட்சிக்கு இலங்கையின் கிரிக்கெட் போட்டிகளை ஒளிப்பரப்பும் உரிமையை பெற அரச வளத்தை முறைகேடாக பயன்படுத்தியமை,

அதில் கிடைத்த வருமானத்தில் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தாது அதனை வேறு வர்த்தகங்களுக்கு பயன்படுத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய 4 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் மேலான நிதியை இவர்கள் செலுத்த தவறியுள்ளனர்.

யோஷித ராஜபக்ஷ, சீ.எஸ்.என் தொலைக்காட்சியின் உரிமையாளர்களில் ஒருவர் என்பதுடன் சஜின்வாஸ் குணவர்தன அதில் முதலீடுகளை செய்துள்ளதாக கூறப்படுகிறது.

சீ.எஸ்.என் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் எதனையும் செலுத்தவில்லை.

இதன் காரணமாக குறித்த தொலைக்காட்சி நிறுவனம் ஒரு பில்லியன் ரூபாவை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும் தொலைக்காட்சி நிறுவனம் இந்த பணத்தை செலுத்தாது தொலைக்காட்சி நிறுவனத்தை மூடிவிட தீர்மானித்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## நீங்கள் முறமா? சல்லடையா?

சாதனைகளுக்கு எண்ணங்களே எரிபொருளாக இருக்கின்றன. கோடீஸ்வரராயிருந்த ஹென்றிபோர்டை சந்தித்த ஒரு நிருபர், எப்போதிலிருந்து நீங்கள் கோடீஸ்வரராக இருக்கிறீர்கள்? என்று கேட்டதற்கு சிறு வயதிலிருந்தே நான் கோடீஸ்வரராக இருக்கிறேன் என்றார் அவர். நீங்கள் சிறு வயதில் கூலித் தொழில், மில் வேலைதானே பார்த்தீர்கள்? பிறகு எப்படி சிறுவயதிலேயே கோடீஸ்வரராக ஆனேன் என்று நீங்கள் சொல்ல முடியும்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் நான் சிறுவயதிலேயே கோடீஸ்வரராக ஆக வேண்டும் என்ற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன். என்னுடைய தன்னம்பிக்கைதான் என்னை கோடீஸ்வரனாக ஆக்கியது. அதனால்தான் சிறு வயதிலேயே நான் கோடீஸ்வரன் என்று சொன்னேன் என்றார்.

இந்தியாவில் அறிவியல் துறையில் முதன் முதலாக நோபல் பரிசைப் பெற்றவர் சர்.சி.வி.ராமன்.

1924 ஆம் ஆண்டு கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக அவர் பணியாற்றியபோது லண்டனில் உள்ள ராயல் சொஸைட்டியில் கௌரவ உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு பாராட்டு தெரிவிப்பதற்காக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அதிஷ்டோஷ் முகர்ஜி விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். அந்த விருந்தில் சர்.சி.வி.ராமனை பாராட்டிப் பேசுகிறபோது, ராமன் அவர்களே! நீங்கள் செய்ய விரும்பும் சாதனை என்ன? என்று கேட்டார். அதற்கு அவர் நான் நோபல் பரிசைப் பெற வேண்டும் என்றார். அதே போல் ஓரிரு ஆண்டுகளில் நோபல் பரிசைப் பெற்றார்.

எண்ணங்கள்தான் நீங்கள் செல்லும் பாதையைத் தீர்மானிக்கின்றன. எனவேதான் 'உயர்வாக எண்ணமிடுவது ஒருவனை உயர்ந்தவனாக ஆக்கும். தாழ்ந்த எண்ணங்கள் ஒருவனை தாழ்ந்த நிலையில் தள்ளிவிடும்' என்றார் ஜேம்ஸ் ஆலன்.

இப்போது யோசித்துப் பாருங்கள். நாம் முறமா? சல்லடையா? முறம் நல்லவற்றைத் தன்னிடம் வைத்துக்கொண்டு தேவையில்லாதவற்றை ஒதுக்கிவிடும். சல்லடை நல்லவைகளை நழுவவிட்டு கழிவுகளை மட்டும் தன்னிடம் வைத்துக் கொள்ளும். எனவே நாம் சல்லடையாக இல்லாமல் முறமாக இருப்பதே நல்லது.

கறுப்பு வளையல்
கையுடன் ஒருத்தி
குனிந்து வளைந்து
பெருக்கிப் போனாள்
வாசல் சுத்தமாச்சு!
மனசு குப்பையாச்சு!

இடப்பெயர்ச்சி என்கிற தலைப்பிலான கல்யாண்ஜியின் இந்தக் கவிதையில் மனசு எப்படி குப்பையாகிறது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்ல எண்ணங்களும் அதனால் உண்டாகும் செயலும் எப்போதும் நன்மையே தரும். விதையொன்று போட சுரையொன்று முளைப்பதில்லை. வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான். இது படிப்பினையைத் தரும் பட்டறிவாகும்.

'மண்ணையும் சீனியையும் ஒன்றாகக் கலந்து விட்டாலும் எறும்பு மண்ணை நிராகரித்து விட்டு சீனியை மட்டுமே எடுத்துச் செல்கின்றது. இந்த உலகத்தில் நல்லவைகளும் கெட்டவைகளும் கலந்திருக்கின்றன. சீனியை மட்டும் எடுத்துச் செல்லும் எறும்பைப் போன்று புத்திசாலி மனிதர்கள் கெட்டவைகளைத் தவிர்த்து நல்லவற்றை மட்டுமே தேர்ந்தெடுக்கிறார்கள்' என்றார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

நம் மகிழ்ச்சியில் பிறர் மகிழ்ச்சி இணையும்போதுதான் 'வாழ்க்கை' முழுமை பெறுகிறது. சுதந்திரம் மனிதனின் பிறப்புரிமை. அப்படி இருக்க வாழ்க்கையில் கட்டுப்பாடு என்று ஒன்று அவசியமா? என்று சிலருக்கு கேட்கத் தோன்றலாம்.

புல்லாங்குழலை அப்படியே எடுத்து வாசித்தால் அடுப்பு ஊதுவதுபோல்தான் இருக்கும். அதிலிருந்த இனிமையான இசை பிறக்காது. ஒவ்வொரு துவாரத்திலேயும் ஒவ்வொரு விரலை விட்டு விட்டு அடைத்தால்தான் சுகமான இசை அதிலிருந்து பிறக்கும். அதுபோல வாழ்க்கை முறையில் சில கட்டுப்பாடுகள் இருந்தால்தான் சுதந்திரத்தின் பூரணத்துவத்தை நம்மால் அனுபவிக்க முடியும். நாளை வாடி உதிரப் போகிறோம் என்று தெரிந்திருந்தும் பூக்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டேதான் இருக்கின்றன. மனிதர்களாகிய நாமும் என்றாவது ஒருநாள் இறந்து விடப் போகிறோம் என்று தெரிந்திருந்தும் சிரித்துக் கொண்டேதான் இருக்கிறோம். இதுதான் வாழ்க்கை.

வாழ்க்கையில் பிரச்சினை என்பது இருந்தால்தான் அது ரசிக்கும்படியானதாக இருக்கும். கலகம் இல்லாத வாழ்க்கை உப்புச்சப்பில்லாததாக இருக்கும். வாழ்க்கை என்பது மகிழ்ச்சியும் பிரச்சினையும் கலந்த ஒரு கலவையாகவே இருக்க வேண்டும். ஆனால் வாழ்க்கையே பிரச்சினையாக இருக்கக்கூடாது.

மின்மினிப்பூச்சிகள்கூட பறக்கும்போதுதான் பிரகாசிக்கின்றன. மனிதனும் உழைக்கும்போதுதான் பிரகாசிக்கிறான்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் இன்றி எதிரியைத் தோற்கடிக்கும் மூலோபாயம்!

இராணுவ மூலோபாயங்கள் தொடர்பாக சன் சூவால் எழுதப்பட்ட 'Art of War' நூலில் அவர் பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

யுத்தமில்லாமல் எதிரியைத் தோற்கடிப்பதற்கான பல்வேறு மூலோபாயங்களை **சன் சூ** தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதுவே தற்போது சீன வெளியுறவுக் கோட்பாட்டில் பிரயோகிக்கப்படுகிறது.

**இவ்வாறு live mint இணையத்தளத்தில் வெளியாகியுள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.**

சீனாவின் இராணுவ மேதையான **சன் சூ** (Sun Tzu) தற்போது உயிருடனிருந்து ருவிற்றரில் இணைந்திருந்தால், சீனாவில் பிறந்ததை எண்ணித் தான் எவ்வளவு பெருமைப்படுகிறார் என்பதை இந்த உலகிற்குத் தெரிவித்திருப்பார்.

சீனாவின் இராணுவ மூலோபாயங்கள் தொடர்பாக சன் சூவால் எழுதப்பட்ட Art of War நூலில் அவர் பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

யுத்தமில்லாமல் எதிரியைத் தோற்கடிப்பதற்கான பல்வேறு மூலோபாயங்களை **சன் சூ** தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதுவே தற்போது சீன வெளியுறவுக் கோட்பாட்டில் பிரயோகிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இந்தியா அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இதிலிருந்து இந்தியா பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாரத்திலிருந்து, சீனாவும் பாகிஸ்தானும் 45 பில்லியன் டொலர்களை சீன-பாகிஸ்தான் பொருளாதாரப் பாதை என்கின்ற திட்டத்திற்காக (CPEC) முதலிட்டுள்ளதாக அறிவித்துள்ளன.

சீனாவின் வடமேற்கிலுள்ள சின்ஜியங் பிரதேசத்திலிருந்து பாகிஸ்தானின் தென்மேற்கிலுள்ள குவாடர் துறைமுகம் வரையான பகுதியை இணைப்பதே இத்திட்டத்தின் நோக்காகும்.

இத்திட்டம் நிறைவடையும் போது 3000 கிலோமீற்றர் வரையான வீதி பாகிஸ்தானின் பொருளாதாரத்திற்கு வலுச் சேர்க்கும் என எதிர்வு கூறப்படுகிறது.

சீனாவைப் பொறுத்தளவில் இத்திட்டமானது ஒரு கல்லில் பல பறவைகளைக் கொல்வதுடன் தொடர்புபட்டதாகும்.


சீனாவால் ஏற்கனவே முன்னெடுககப்பட்ட திட்டங்களும் இதனுடன் சம்பந்தப்பட்டதாகும். சீனாவின் திட்டம் ஒன்று மெதுவாக நிறைவேறுகிறது. சீனா எவ்வாறு பிரதான ஐந்து விடயங்களைக் கையாளுகிறது என்பதை இந்தியா கவனத்தில் எடுக்கவேண்டும்.

இந்திய உபகண்டத்தில் பாரிய கட்டுமானத் திட்டங்களுக்காக முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் இந்தியாவை தனது முற்றுகைக்குள் உட்படுத்த சீனா முயல்கிறது. தற்போது சீனா எவ்வித புதிய திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை எனவும் முத்துமாலை சீனாவால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட ஒன்று எனவும் சிலர் கூறலாம்.

ஆனால், சீனா இந்திய மாக் கடலில் தனது செல்வாக்கைச் செலுத்துவதன் மூலம் இந்தியாவை முற்றுகைக்கு உள்ளாக்கும் நகர்வை மிகவும் மெதுவாக ஆனால் உறுதியாக முன்னெடுத்துச் செல்கிறது.

பாகிஸ்தானின் குவாடர் துறைமுகம் மற்றும் சிறிலங்காவின் அம்பாந்தோட்டைத் துறைமுகம் போன்றன சீனாவின் கணிசமான முதலீடாகவும் ஈடுபாடாகவும் காணப்படுகின்றன.

நேபாளத்தில், எவரெஸ்ட் சிகரத்திற்குக் கீழே சுரங்கம் ஒன்றின் ஊடாக திபெத்திலிருந்து 540 கிலோமீற்றர் நீளமான விரைவுத் தொடருந்துப் பாதை ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை சீனா கொண்டுள்ளது. இந்தத் தொடருந்துப் பாதை இந்திய-நேபாள எல்லைக்கு அருகாக அமைக்கப்படவுள்ளது.




2015 இன் முதல் காலாண்டில், சீனா கடந்த ஆறு ஆண்டுகளாக மிக மெதுவாக மேற்கொண்ட முதலீட்டின் பெறுபேற்றைப் பெற்றுள்ளது. சீனா எவ்வாறு தனது பொருளாதாரத்தில் வளர்ச்சியை எட்டியுள்ளது?

'பாரியளவில் வேலையின்மையை ஏற்படுத்தாது சீனா தனது உள்நாட்டின் கட்டுமானத் துறையை முன்னேற்றியதன் மூலம் முதலீட்டை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்கிறது. இதுவே சீனாவின் பொருளாதார வளர்ச்சியின் மிக முக்கிய காரணியாகும்.

சீனாவின் வெளிநாட்டு முதலீடுகள் அதன் உள்நாட்டுப் பொருளாதாரத்தை முதன்மைப்படுத்துவதாக மேற்கொள்ளப்படுகிறது' என ஆய்வாளர் ஜக்கோப் ஸ்ரொக்ஸ் ஏப்ரல் 19 அன்று வெளியான வெளிவிவகார சஞ்சிகையில் 'சீனாவின் வீதிச் சட்டங்கள்' என்கின்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனா தனது வடமேற்கிலுள்ள சின்ஜியாங் மற்றும் தெற்கிலுள்ள திபேத் போன்ற இடங்களில் பல்வேறு முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள்வதானது தற்செயலான நிகழ்வல்ல. சின்ஜியாங் மற்றும் திபேத் ஆகிய இரண்டு எல்லைகளும் இனமோதலின் மையங்களாக உள்ளன. இவை இரண்டும் அபிவிருத்தியடையாத இடங்களாகும்.

இவ்விரு பிராந்தியங்களிலும் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புப் போன்றவற்றைப் பெருக்கலாம் என்பது சீனாவின் நம்பிக்கையாகும். இது நீண்டகால அடிப்படையில் உள்நாட்டு மோதல்களைக் குறைப்பதற்கு உதவ முடியும் எனவும் சீனா நம்புகிறது.



சீனாவால் பரிந்துரைக்கப்பட்ட ஆசிய உட்கட்டுமான முதலீட்டு வங்கியானது அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. கடந்தவாரம் வரை இந்த வங்கியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 57 ஆகும்.

அமெரிக்கா, ஜப்பான், கனடா ஆகிய நாடுகளைத் தவிர பொருளாதார வலுமிக்க மிகவும் அதிகமான நாடுகள் இந்த வங்கியில் அங்கம் வகிக்கின்றன. சீனா தனது அயல் நாடுகளில் முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு ஆசிய உட்கட்டுமான முதலீட்டு வங்கியிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும. இதற்கு எவ்வித தடையும் சீனாவுக்கு இருக்காது.

பிறேசில், ரஸ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிய புதிய அபிவிருத்தி வங்கியானது இதனைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

எந்தவொரு நாடும் தனது பொருளாதாரத்தை வளர்ச்சியுறச் செய்வதற்கு எண்ணெய் வளம் மிகவும் தேவையான ஒன்றாகும். சீனாவானது உலகின் மூன்றாவது மிகப் பெரிய நிலக்கரி கையிருப்பைக் கொண்டிருப்பினும், சீனா தனக்குத் தேவையான நிலக்கரி, எண்ணெய் மற்றும் வாயு போன்றவற்றைப் பிற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்கின்றது.

ஏன் சீனா நிலக்கரியை இறக்குமதி செய்கிறது? சீனா அவசரமாகத் தேவைப்படுகின்ற எண்ணெய் வளத்தை சேமிப்புச் செய்கின்ற நாடாக உள்ளதால் இதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் நிலக்கரி போன்றவற்றை இறக்குமதி செய்கிறது.

பெரும்பாலான எண்ணெய் மற்றும் வாயு ஏற்றுமதி நாடுகளுடன் சீனா மூலோபாயப் பங்காளி உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் இதனால் தனக்குத் தேவையான நிலக்கரிகளை இறக்குமதி செய்ய முடிகிறது.

சீனாவானது உலகின் அதி கூடிய மீட்கத்தக்க கனிம வளத் தொகுதிகங்களைக் கொண்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது இன்னமும் பயன்படுத்தப்படவில்லை. இதனால் சீனாவின் எதிர்காலத் தேவைக்கு இதனைப் பயன்படுத்தலாம்.

1979 லிருந்து சீனாவின் வளர்ச்சியானது தற்செயலாக இடம் பெற்ற சம்பவங்கள் அல்ல. இது மிகவும் திட்டமிடப்பட்டு தொலை நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீனாவின் வெளியுறவுக் கோட்பாடானது இதன் பாதுகாப்பு, மூலோபாய மற்றும் பொருளாதாரத தேவைகளை மிகத் திறமையான வழியில் முகங்கொடுப்பதற்கேற்ப வரையறுக்கப்படுகிறது.

இந்தியா தனது வலுமிக்க அயல்நாடான சீனாவிற்குச் சவாலாக விளங்க முடியும் என நம்பிக்கை கொண்டிருந்தால் சீனாவின் இத்தகைய வளர்ச்சியைக் கருத்திற்கொள்வதுடன், இதனுடைய வெளியுறவுக் கோட்பாட்டிற்கு ஒத்ததாக தனது கோட்பாட்டையும் இந்தியா வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால், சன் சூ எச்சரித்தது போன்று, சண்டையின்றி யுத்தம் தோற்கடிக்கப்படும்.

**நித்தியபாரதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிகுண்டுத்தாக்குதல்களில் சிக்கி ஈராக்கில் 18 பேர் உடல் சிதறிப்பலி!



(பக்தாத்)

**ஈராக்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வெவ்வேறு கார் வெடிகுண்டுத் தாக்குதல்களில சிக்கி பொதுமக்கள் 18 பேர் உடல்சிதறி உயிரிழந்துள்ளனர்.**

தலைநகர் பக்தாத்தின் கிலானி பகுதியில் இருந்த சன்னி பிரிவு மசூதி அருகே நிகழ்த்திய கார் வெடிகுண்டுத் தாக்குதலில் 7 பேர் பலியாகினர். 25 பேர் காயமடைந்தனர்.

அமீல் பகுதியில் நிகழ்த்தப்பட்ட கார் வெடிகுண்டுத் தாக்குதலில் 3 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும், இந்தத் தாக்குதலில் 13 பேர் காயமடைந்தனர்.

நகரின் ஹூசேனியா பகுதியில் கார் வெடிகுண்டுத் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.

தலைநகர் பக்தாத்துக்குத் தெற்கே 30 கி.மீ. தொலைவிலுள்ள மஹ்மூதியா நகரில் காரில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததில் 4 பேர் பலியாகினர். 9 பேர் காயமடைந்தனர்.

பக்தாத்தையடுத்த பயா மாகாணத்தில் வெடிகுண்டுத் தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளனர். (இ-5)

## மழை வெள்ளத்தால் 44 பேர் உயிரிழப்பு!

பாகிஸ்தானின் வடமேற்கு நகரான பெஷாவர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் தொடக்கம் பெய்து வரும் கன மழை காரணமாக இதுவரை 44 பேர் உயிரிழந்துள்ளனர். 180 பேர் காயமடைந்தனர்.

பெஷாவரில் கன மழை காரணமாக கட்டடம் இடிந்து விழுந்ததில் 12 பேர் உயிரிழந்தனர்.

தொடர் மழை காரணமாக மரங்கள் வேரோடு விழுந்துள்ளன. வீதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது. ஏராளமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். (இ-5)






## திபெத் நிலநடுக்கத்தில் பலியானோரின் எண்ணிக்கையும் 20 ஆக உயர்ந்தது

நேபாள நாட்டில் நிகழ்ந்த நிலநடுக்கத்தின் தாக்கம் திபெத் நாட்டிலும் எதிரொலித்தது. இதன் காரணமாக அந்நாட்டில் நேற்று வரை 20 பேர் பலியாகியுள்ளனர். இந்நிலநடுக்கத்தில் மேலும் 58 பேர் காயமடைந்துள்ளதாகவும், நான்கு பேர் காணாமற் போயுள்ளதாகவும் திபெத் பிராந்திய பேரிடர் மீட்பு தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் நிகழ்ந்த பூகம்பத்தால் அந்நாட்டின் எல்லையருகே உள்ள திபெத்தின் இரு துறைமுக நகரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இரு துறைமுக நகரங்களில் ஒன்றான சிகேஸ் நகரத்தில் இருந்து மட்டும் 24 ஆயிரத்து 800 பேர் பாதுகாப்பான இடத்திற்கு இடம்பெயர்ந்துள்ளதுடன், சிகேஸ் நகருக்கும் சாம் பாசுக்கும் இடையே உள்ள நெடுஞ்சாலை நிலச்சரிவால் துண்டிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் நிகழ்ந்த போது 12 வெளிநாட்டினர் உட்பட 80 பேர் திபெத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்ததாகவும், அவர்களில் நேபாள சுற்றுப்பயணி உட்பட 4 பேரைக் காணவில்லை என்று சின்ஹூவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-5)

## ஏமன் நாட்டிற்கு ஐ.நா.தூதுவர்

(நியூயோர்க்)

ஏமனுக்கான புதிய ஐ.நா. தூதராக இஸ்மாயில் சேக் அஹமது நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பாகத் தெரிவித்துள்ளார்.

இஸ்மாயில் சேக் அஹமது, மோரிடேனியா நாட்டைச் சேர்ந்தவர். ஐ.நாவின் எபோலா தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு வரும் குழுவுக்குத் தலைவராகத் தற்போது ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இவர் ஏமனுக்கான புதிய ஐ.நா. தூதராக நியமிக்கப்படுவார் என்ற தகவலை ஐ.நா. சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்தபோதிலும், அது இப்போதுதான் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏமனுக்கான ஐ.நாவின் முந்தைய தூதர் ஜமால் பினோமார் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி இராஜினாமா செய்ததாக ஐ.நா. தெரிவித்தது. அவர் நான்கு ஆண்டுகள் அந்தப் பதவியில் இருந்து வந்தார்.

ஏமனில் பரவலான முறையில் நடைபெற்று வரும் வன்முறையைத் தவிர்க்கத் தவறிவிட்டதாகக் கூறி, ஜமால் பினோமார் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

அதே நேரத்தில் கிளர்ச்சியாளர்களின் நிலைப்பாடுகளுக்கு ஆதரவாக அவர் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. (இ-5)

## புதைந்தன கோயில்கள்

(காத்மண்டு)

நேபாளத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலஅதிர்வில், அந்நாட்டின் புகழ்பெற்ற, பழைமையான இந்துக் கோயில்கள் பல இடிந்து, தரைமட்டமாகியுள்ளன. நேபாளத்தில் உலுக்கிய 7.9 ரிக்டர் கொண்ட நிலநடுக்கம், அந்த நாட்டையே புரட்டிப் போட்டு, ருத்ரதாண்டவம் ஆடியுள்ளது. மக்கள் உயிர்களை காவு வாங்கியது மட்டுமின்றி, கடுமையான பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியது. இதனிடையே, அந்நாட்டின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பறைசாற்றும் பழைமையான இந்துக்கோயில்கள் பலவற்றையும் நிலநடுக்கம் விட்டு வைக்கவில்லை.

காத்மண்டு எனப் பெயர் பெறக் காரணமான, கஸ்தமண்டபம் கோயில், பஞ்சட்லே கோயில், ஒன்பது மண்டபங்கள் கொண்ட பசந்த்பூர் தர்பார், தசஅவதாரம் கோயில், கிருஷ்ணன் கோயில், ஆகிய புகழ்பெற்ற கோயில்கள் நிலஅதிர்வில் சிக்கி ஏறக்குறைய அழிந்துவிட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து, நேபாளத்தின் வரலாற்று அறிஞர் புருஷோத்தம் லோச்சன் சிறீஸ்தா கூறுகையில், காத்மண்டு, பக்தபூரில் உள்ள ஏராளமான பழைமையான இந்துக் கோயில்களை இந்த நிலநடுக்கத்தில் இழந்து விட்டோம். இவை அனைத்தும் உலகப் புகழ் பெற்றவை எனத் தெரிவித்தார். (இ-5)




## ஒபாமாவின் மின்னஞ்சல்; ரஷ்யர்களால் ஊடுருவல்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகை கணனிகளை, இணைய வழி முடக்கல் செய்த ரஷ்ய முடக்கல்காரர்கள் பல தகவல்களை பெற்றுள்ளதாக “நியூயோர்க் ரைம்ஸ்” செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உத்தியோகபூர்வமற்ற மின்னஞ்சல் செய்திகளை அவர்கள் முடக்கி அறிந்துள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் இணைய வழி முடக்கல் தொடர்பான தகவல் வெளியானதனை அடுத்து, வெள்ளை மாளிகையின் கணனி வலைப் பின்னலின் பல பகுதிகள் அதிகாரிகளினால் செயலிழக்க வைக்கப் பட்டது.

எப்படியிருப்பினும், அமெரிக்க பாதுகாப்பு போன்ற விடயங்கள் குறித்து எந்தவிதமான தகவல்களும் ரஷ்ய முடக்கல்காரர்களின் கைக்கு கிடைக்கவில்லை எனவும் “நியூயோர்க் டைம்ஸ்” செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழர் உட்பட 10 பேரின்

# மரணதண்டனையினை நிறுத்துமாறு ஐ.நா.பொதுச்செயலாளர் கோரிக்கை

**(நியூயோர்க்)**

**போதைப்பொருள் கடத்தல் வழக்கில் இலங்கை தமிழர் உட்பட 10 பேருக்கு வழங்கப்பட்ட மரணதண்டனையை நிறுத்தி வைக்கும்படி ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன், இந்தோனேஷிய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.**

இந்தோனேசியாவில போதைப்பொருள் கடத்தல் வழக்கில் சிக்கினால் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. போதைப் பொருள் கடத்தியதாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மயூரன் சுகுமாரன் (வயது 33) என்ற இலங்கை தமிழர் மற்றொரு அவுஸ்திரேலியர், நைஜீரியா, பிரேசில், கானா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 10 பேருக்கு மரண தணடனை விதித்து பாலி நகர நீதிமன்று தீர்ப்பு அளித்தது.

இதில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 2 பேரை மீட்க அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன.

இதேபோன்று போதைப்பொருள கடத்தல் வழக்கில் சிக்கிய மற்றவர்களின் மனுக்களும் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டன. இதனையடுத்து 10 பேரும் கடந்த மாதம் 4ஆம் திகதி பாதுகாப்பு மிகுந்த நுசகம்பன்கன் சிறைக்கு மாற்றப்பட்டனர். அவர்களுக்கு தண்டனை நிறைவேற்றுவதற்கான அனைத்து இறுதிக்கட்ட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. இவர்களுக்கு அநேகமாக இன்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்லாம் என்று தெரிகிறது.

இதற்காக மரண தண்டனை கைதிகளிடம் பேசி ஆறுதல் கூற மதகுருமார்கள், துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனையை நிறைவேற்றும் தொழிலாளிகள், சுட்டுக் கொன்ற பின்பு கைதிகளின் மரணத்தை உறுதிப்படுத்த வைத்தியர்கள் தயார் நிலையில் இருக்கும்படி உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மரண தண்டனை நிறைவேற்றுவதை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து பான் கீ மூனின் செய்தி தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது.

உலக நாடுகளில் பெரும்பாலானவை மரண தண்டனையை ஒழிக்க நடவடிக்கை எடுத்து வரும் வேளையில், மரண தண்டனையை நிறைவேற்ற நீங்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளை அவசரமாக பரிசீலனை செய்து தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டுகிறேன்.

எத்தகைய சூழ்நிலையிலும் மரண தண்டனையை நிறைவேற்றக் கூடாது என்று ஐ.நா. சபை எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

சர்வதேச சட்டவிதிகளின்படி மிகக்கொடூரமான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு மட்டுமே அதிகபட்ச தண்டனையான மரண தண்டனை விதிக்கப்படுகிறது. குறிப்பாக சர்வதேச அளவில் கொலை குற்றங்களில் ஈடுபடுவோருக்கு இந்த தண்டனை விதிக்கப்படுகிறது.

ஆனால், போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றை இது போன்ற கொடூரமான குற்றச் செயலாக கருத முடியாது. எனவே 10 பேருக்கும் மரணதண்டனை நிறைவேற்ற உங்களுடைய அரசு எடுத்து வரும் நடவடிக்கையை நிறுத்தி வைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அதில் கேட்டுக் கொண்டுள்ளார்.மயூரனின் தாயார் ராஜனி, கண்ணீர் மல்க கூறுகையில், "கடந்த 10 ஆண்டுகளாக சிறையில் மயூரன் நல்ல மனிதனாக வாழ்கிறான். சிறையில் கூட ஓவியங்களை தீட்டி டி.சர்ட்டுகளில் அச்சடிக்கும் தொழில் செய்து பணம் சம்பாதித்து அதை போதை பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காக செலவு செய்கிறான். எனவே அவனுக்கு இன்னும் ஒருமுறை உயிர் வாழ்கிற வாய்ப்பு தரப்பட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (இ-5)

# கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

## யாழில் நாளை நடைபெறும்

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பை வழங்கக்கோரி நடத்தப்படவுள்ள கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நாளை புதன்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்னால் இடம்பெறவுள்ளது.

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பை வழங்கக் கோரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு வடமாகாணத்திற்குட்பட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் அனைவரையும் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பு ஒன்றுகூடுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கவனயீர்ப்பில் உள்வாரி,வெளிவாரி,தேசிய உயர்தொழில்நுட்ப பட்டதாரிகள் அனைவரையும் ஒன்றுகூடுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் கேட்டுக்கொள்கின்றது என அறிவிக்கப்படுகின்றது. (இ)

## தலைக்கவசத்தடை நீக்கம் நீடிப்பு

(கொழும்பு)

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிய விதிக்கப்பட்ட தடையை நீக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த இடைக்கால தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போதே இவ் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்த உத்தரவு எதிர்வரும் 19ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த தலைக்கவசம் அணிவது எதிர்வரும் 19ஆம் திகதி வரை சட்டவிரோத செயல் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## லாஹூர் நகரில் இலங்கை அணி மீது தாக்குதல் நடத்தியவர் சுட்டுக்கொலை



2009ஆம் ஆண்டு பாகிஸ்தானின் லாஹூர் நகரத்தில் வைத்து இலங்கை கிரிக்கெட் அணி மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் பாகிஸ்தான் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அத்துடன், தலிபான் தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த மூவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தான் பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போது இவர்கள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை சுட்டுக் கொல் லப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான ஹபீஸ் அலியாஸ் மொஹமட் என்பவரே இந்த நடவடிக்கையின் போது உயிரிழந்துள்ளார். (இ)

# நாட்டில் தலைவர்கள் அதிகரித்துள்ளனராம்

நாட்டில் தலைவர்கள் அதிகரித்துள்ளதாக கெட்டம்பே ராஜோபவனாராமயவின் கெப்பட்டியாகொட சிறிவிமல நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மாநாயக்க தேரரை நேற்று முன்தினம் சந்தித்து ஆசிபெற்றுக் கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட போவதாக ஜனாதிபதியே அறிவிக்க வேண்டும். எனினும் வேறு நபர்களும் நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளதாக அறிவிக்கின்றனர்.

அண்மையில் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட உள்ளதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். இவ்வாறு செயற்பட்டால் நல்லாட்சி அரசாங்கம் வேறு திசை நோக்கி நகரக் கூடும்.

இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்காலத்தில் சிறந்த முறையில் செயற்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி 19ஆம் திருத்தச் சட்டத்தின் நகல் பிரதியொன்றையும் இதன் போது மாநாயக்க தேரரிடம் சமர்ப்பித்துள்ளார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### சதாசிவம் செல்வநாதன்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர், ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் கிளிநொச்சி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் செல்வநாதன் கடந்த 25ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ந.ப.12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கயித்தாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

இளவாலை மாரீசன் கூடலைப் பிறப்பிடமாகவும் மணற்காட்டை வதிவிடமாகவும் கொண்ட கயித்தாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை கடந்த 26ஆம் திகதி காலமானார் .

அன்னாரின் திருவுடலானது நாளை காலை 8 மணிக்கு மணற்காடு அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் மணற்காடு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### வெரோணிக்கா தோமாஸ்

கிளிநொச்சி இரணைமாதா நகரைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வெரோணிக்கா தோமஸ் கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருவுடல் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று இரணைமாதா நகரில் அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு 09.05.2015 சனிக்கிழமை அன்று இரணைமாதா செபமாலை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொர்டுக்கப்பட்டு பின்னர் இரணைமாதா நகர் துயிலும் இல்லத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயா மேல்முறையீட்டு வழக்கில் பவானிசிங் நியமனம் செல்லாது!

## மறுவிசாரணை இல்லை உச்சநீதிமன்றம் தீர்ப்பு

**(புதுடில்லி)**

**முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சட்டத்தரணி பவானி சிங் நியமனம் செல்லாது என உச்ச நீதிமன்றம் அதிரடியாக நேற்று தீர்ப்பளித்துள்ளது.**

அதேநேரத்தில், கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் ஜெயலலிதா மேல்முறையீட்டு வழக்கல்மறு விசாரணை தேவையில்லை என்றும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பு தெளிவுபட தெரிவித்துள்ளது.

பவானிசிங்நியமனம்குறித்த இறுதி தீர் ப்பை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, ஆர்.கே.அகர்வால், பிரபுல்ல பந்த் அடங்கிய அமர்வு நேற்று காலை வழங்கியது. அப்போது நந்திபதிகள், "பவானி சிங்கை, தமிழக இலஞ்ச ஒழிப்பு துறை நியமித்திருக்கிறது. வழக்கு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நடைபெறுவதால் அங்குள்ள நீதிமன்றமே அரசு சட்டத்தரணியை நியமித்திருக்க வேண்டும். அரசு சட்டத்தரணியை நியமிக்க தமிழக அரசுக்கு எந்த உரிமையும் இல்லை.

ஆனால், இவ்வழக்கில் மறு விசாரணைக்கு அவசியமில்லை" என தெரிவித்துள்ளனர். மேலும் நீதிபதிகள் கூறும் போது, "மனுதாரர் க.அன்பழகன், 90 பக்கங்களுக்குள் எழுத்து பூர்வமான வாதத்தை தாக்கல் செய்ய வேண்டும், கர்நாடக அரசு 50 பக்கங்களுக்குள் எழுத்துபூர்வ வாதத்தை இன்று தாக்கல் செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

மேல்முறையீட்டு வழக்கில் அன்பழகன் மற்றும் கர்நாடக அரசும் எழுத்துமூலம் அளிக்கும் வாதத்தை பெற்றுக் கொண்டு தீர்ப்பளிக்கவும் கர்நாடக உயர் நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

வருவாய்க்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், கர்நாடக உயர் நீதிமன்றத்தில் அரசு சிறப்பு சட்டத்தரணியாக பவானி சிங் ஆஜராகி வாதாடினார.

அவரது நியமனமே செல்லாது என்று திமுக பொதுச்செயலாளர் அன்பழகன் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், இரண்டு நீதிபதிகள் முரண்பட்ட தீர்ப்பை அளித்ததால், இவ் வழக்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு மாற்றப்பட்டது.


மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்பு இவ்வழக்கு விசாரணைக்கு வந்த போது, உச்ச நீதிமன்றத்தால் வேறு மாநிலத்துக்கு மாற்றப்பட்ட ஒரு வழக்கில், அந்த மாநில அரசுதான் அரசு சட்டத்தரணியை நியமிக்க முடியும். தமிழக இலஞ்ச ஒழிபபுத்துறை அரசு சட்டத்தரணி பவானி சிங்கை நியமித்தது செல்லாது என்று வாதிடப்பட்டது. வழக்கின் விசாரணை அமைப்பு என்ற முறையில் அரசு சட்டத்தரணியை நியமிக்க எங்களுக்கு அதிகாரம் உண்டு என்று தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் வாதிடப்பட்டது.

கடந்த 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் 27ஆம் திகதியன்று, சொத்துக் குவிப்பு வழக்கில், ஜெய லலிதா, சசிகலா, இளவரசி, சுதா கரன் ஆகியோர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவி த்த நீதிபதி மைக்கேல் டி குன்ஹா, அவர்கள் அனைவருக்கும் 4 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்ப ளித்தார். மேலும், ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாவும், மற்ற மூவ ருக்கும் தலா 10 கோடி ரூபாவும் அபராதம் விதித்தும் உத்தர விட்டார்.

இதனையடுத்து, ஜெயலலிதா பிணையில் வெளிவந்தார். அவர் தொடர்ந்து மேல்முறையீட்டு வழக்கு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நீதிபதி குமாரசாமி தலைமையில் நடந்து வருகிறது. இந்த மேல்முறை யீட்டு வழக்கில் பவானி சிங் அரசு சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டது செல்லாது என்று உச்ச நீதிமன்றம் நேற்று அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. (இ-5)

### பாரதச் செய்தி

## சொத்துக் குவிப்பில் கூட்டுச் சதி நடந்தது



ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையில், திமுக பொதுச் செயலாளர் அன்பழகன் சார்பில் நேற்று எழுத்து பூர்வ வாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு விசாரணையில் அரசு சட்டத்தரணியாக பவானி சிங் நியமிக்கப்பட்டது செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த வழக்கில் அன்பழகன் தரப்பில் எழுத்துபூர்வ வாதத்தை நாளைக்குள் தாக்கல் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து, உடனடியாக 81 பக்கங்கள் கொண்ட வாதத்தை அன்பழகன் தரப்பு சட்டத்தரணியாக தாக்கல் செய்தார்.

அதில், சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா உள்ளிட்டோர் கூட்டுச் சதியில் ஈடுபட்டதற்கான ஆதாரங்களை நீதிபதி குமாரசாமி கேட்டிருந்தார். அதற்கு முழுமையாக விளக்கம் அளிக்கும் வகையில், கூட்டுச் சதி எவ்வாறு நடைபெற்றது, அதில் ஈடுபட்ட நபர்கள் என முழுமையான தக வல்களை எடுத்துக் கூறி எழுத்து பூர்வ வாதம் அமைந்திருப்பதாக சட்டத்தரணி தரப்பு தெரிவித்துள்ளது. (இ-5)

# 'ஆப்ரேஷன் மைத்ரி' மூலம் 203 பேர் பத்திரமாக மீட்பு

## நேபாளத்தில் இந்தியா நடவடிக்கை



நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டு 23 மணிநேரத்திற்குள், அங்கு சிக்கிததவித்த 203 பேர் ஆப்ரேஷன் மைத்ரி எனும் மீட்பு நடவடிக்கை மூலம் இந்திய ஹெலி கொப்டர்களால பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேபாளத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கம் அந்நாட்டையே உருக்குலைத்துள்ளது. 2 ஆயிரத்திற்கும் மேற் பட்ட மக்களை பலிகொண்டது. உறவுகளையும், உடைமைகளை யும் இழந்து, இடிபாடுகளில் எண் ணற்ற மக்கள் சிக்கியுள்ளனர். நட்பு நாடு, மற்றும் மனித அடிப்படையில் நேபாளத்தில் இடரில் சிக்கியுள்ள மக்களை மீட்க, இந்திய ராணுவம் "ஆப ரேஷன் மைத்ரி" எனும் பெயரில் மீட்பு பணியைத் தொடங்கியுள்ளது.

நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்ட 23 மணி நேரத்திற்குள், இந்திய ஹெலிகொப்டர்கள் 37 முறை பறந்து அங்கு சிக்கித் தவித்த 203 மக்களை மீட்டுள்ளன. மேலும, இந்திய விமானப்படை யின் எம்.ஐ. 17 வி.ஜி., 2 எம்.ஐ.17 ஹெலி கொப்டர்களும் மீட்பு பணியில், நேபாள இராணுவத்திற்கு துணையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், ஹெலிகொப்டர்கள் மூலம், ஏறக்குறைய 3.7 தொன் எடை கொணட நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும், சிறப்பு பயிற்சி பெற்ற ஆயிரம் படைவீரர்களும், 24 விமானங்களும் இந்தியா சார்பில் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதில் இராணுவத்திற்கு சொந்தமான 13 விமானங்கள், ஏர் இந்தியாவின் 3 பயணிகள் விமானம், ஒரு ஜெட்ஏர்வேஸ் விமானம், 6 ஹெலி கொப்டர்கள், அதி நவீன லகுரக ஹெலிகொப்டர்கள் இரண்டு, ஆகியவைகளும் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் 10 தொன் போர்வைகள், 50தொன் குடிநீர், 22 தொன் உணவு பொருட்கள், 2 தொன் மருந்துகள் ஆகியவைகள் விமானம் மூலம் காத்மண்டு நகருக்கு இந்திய அரசு சார்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும், 3 இராணுவ வைத்திய சாலைக் குழுக்கள், பொறியியல் வல்லுநர்கள் குழுக்கள், மருத்துவக் குழுக்கள் ஆகிய வைகளும் காத்மண்டு நகருக்கு புறப்பட்டுச் சென்றுள்ளன. (இ-5)

**7,800 கோடி ரூபா**

# கறுப்புப் பணத்தை கண்டறிந்த நிதிப் புலனாய்வுப் பிரிவினர்

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள 7,800 கோடி ரூபாய் கறுப்பு பணத்தை நிதி புலனாய்வு பிரிவு கண்டறிந்துள்ளதாக பெயர் வெளியிட விரும்பாத நிதி அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நிதி புலனாய்வு பிரிவு 2013-14ஆம் நிதி ஆண்டில் சர்ச்சைக்குரிய வர்த்தக நடவடிக்கைகளை அடிப்படையாக வைத்து இதனை கண்டறிந்துள்ளது.

இதில் வருமான வரித்துறை கணக்கில் முறைகேடு செய்தது 7,078 கோடி ரூபாய். சுங்கம் மற்றும் சேவை வரி துறை பிரிவில் முறைகேடு செய்தது 750 கோடி ரூபாய் ஆகும்.

இதில் வருமான வரித்துறை 163 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை கைப்பற்றி இருக்கிறது. அதேபோல சேவை வரி துறை 17 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை கைப்பற்றி இருக்கிறது.

இது தவிர அமுலாக்கப் பிரிவும் 20 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடான பணத்தை கண்டறிந்துள்ளது, இதில் 17 கோடி ரூபாய் அளவுக்கு சொத்துகளை கைப்பற்றி இருக்கிறது. தவிர கறுப்பு பண தடைச் சட்டத்தின் கீழ் 105 புதிய வழக்குகளை அமுலாக்க பிரிவு பதிவு செய்துள்ளது.

2012-13ஆம் நிதி ஆண்டுடன் ஒப்பிடும்போது சந்தேகத்துக்கு இடமான 61,953 கணக்குகளை கண்டு பிடித்திருக்கிறது. அதற்கு முந்தைய ஆண்டில் இது 31,731 கணக்குகள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன.

அனைத்து வங்கி, இன்ஷூரன்ஸ், பங்குச்சந்தை உள்ளிட்ட அனைத்து நிதி சார்ந்த அமைப்புகளும் நிதி புலனாய்வு பிரிவுக்கு தகவல்களை தெரிவிக்க வேண்டும் என்று ஏற்கனவே ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. (இ-5)

## பொட்டலங்களை அனுப்ப சீக்கிய அமைப்பு முடிவு

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்துக்கு நேற்று முதல் தினமும் 25 ஆயிரம் உணவுப் பொட் டலங்களை அனுப்புவது என சீக்கியமத அமைப்புகளான சிரோமணி குரு த்வாரா பிரபந்த குழு, டில்லி சீக்கிய குரு த்வாரா நிர்வாக குழு ஆகியவை முடிவு செய்துள்ளன. சிரோமணி அகாலி தளம் தலைவர் சுக்பீர் சிங் பாதல் கேட்டுக் கொண் டதன் பேரில் இந்த உதவி அளிக்கப்படுகிறது என அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதுதவிர இந்த அமைப்புகள் சாரபில் காத்மண்டுவில் சமுதாய சமையலகூடம் நிறுவி உணவு விநியோகிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதே வேளை நேபாளத்தில் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள 100 மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்க, குஜராத் மாநிலம் வடோதராவில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வரி ஏய்ப்பாளரின் பட்டியல் வெளியீடு

இந்தியாவில் வரி ஏய்ப்பாளர்கள் பட்டியலை வருமான வரித்துறை கடந்த சனிக்கிழமை வெளியிட்டது. 31 நபர்கள் கொண்ட பட்டியல் வெளியிடப்பட்டது.

இவர்கள் அனைவரும் செலுத்த வேண்டிய தொகை சுமார் 1,500 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று வருமான வரித்துறை தெரிவித்திருக்கிறது. வரி ஏய்த்த நபரின் பெயர், கடைசியாக சமர்ப்பித்த முகவரி, முக்கியமான நிதி தகவல்கள், பான் எண் ஆகியவை செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன. சம்பந்தப்பட்ட நபர்களிடம் போதுமான சொத்துகள் இல்லை அல்லது அவர்களை பிடிக்க முடியவில்லை என்று வருமான வரித்துறை குறிப்பிட்டுள்ளது.

செய்தித்தாள்களில் வெளியிடும் போது பொதுமக்கள் அரசுக்கு தகவல் கொடுக்க முடியும். தவிர சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் சட்டத்துக்கு எதி ராக செயற்படுகின்றன ஏன்பதை பொது மக்களுக்கு தெரிவிக்க முடியும் எனறு வருமான வரித்துறை அதிகாரி தெரிவத்தார். இவர்களது பெயர்கள் ஏற்கனவே வருமான வரித்துறை இணையததளத்தில் வெளியிடப்பட் டுள்ளன.


ஐதராபாத்தை சேர்ந்த டோடெம் இன்பிரா (401.64 கோடி ரூபாய்), ராயல் பேப்ரிக்ஸ் (158 கோடி ரூபாய்) புனேவை சேர்ந்த பதேஜா பிரதர்ஸ் போர்ஜிங் அண்ட் ஆட்டோ பார்ட்ஸ் (224 கோடி ரூபாய்) மற்றும் மும்பையை சேர்ந்த ஹோம டிரேட் (72 கோடி ரூபாய்) ஆகியவை அதிக தொகை செலுத்த வேண்டிய நிறுவனங்கள் ஆகும். இந்தப்பட்டியலை வெளியிட்டது மட்டுமல்லாமல் உடனடியாக வரிசெலுத்த வேண்டும் என்றும் வருமான் வரித்துறை கூறியுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தியமற்றதாகத் தோன்றும் நல்லாட்சிக்கான சாத்தியக்கூறுகள்

**சாத்தியமற்றதாக தோன்றும் நல்லாட்சிக்கான சாத்தியக்கூறுகள் எனும் தலைப்பில் ஸ்ரீலங்கா கார்டியன் பத்திரிகையில் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இஸ்ரேல் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் சரத் விஜேசிங்க எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**






நாட்டின் பொதுமக்கள் சம்பந்தமான விவகாரங்களுடன் நாடு முழுவதற்குமே சொந்தமான அனைத்துவளங்களும் மூலவளங்களும் சரியான முகாமைத்துவம் மூலம் நல்லவிதமாக கையாளப்படுகிறதா என்பதை வெட்ட வெளிச்சமாக வெளிப்படுத்தி சரியானதை சரியென்றும் தவறானதை தவறென்றும் சுட்டிக்காட்டி பாராட்டோ தண்டனையோ வழங்குவதே நல்லாட்சிக்குரிய வெளிப்படையான அறிகுறிகளாகும். ஸ்தாபன ரீதியிலான திட்ட ஒழுங்குகளுக்கு அமைவான வழிமுறைகளும் ஸ்தாபனத்தை சீரான முறையில் நடத்துவதற்கான தேவைப்பாடுகளும் சரியான முறையில் நிர்வகிக்கப்படுகின்றனவா என்பதிலேயே நல்லாட்சியின் ஒருமுக கவனம் எப்போதும் சிதறாமலிருக்கும்.

அரச, தனியார் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் தமக்கே உரித்தான குறியிலக்கு நோக்கிய பணியினையே கடமையெனக்கொண்டு ஒருங்கிணைவான முறையில் செயற்படுவதன் மூலமே நல்லாட்சியினை நல்லபடியாக முன்னெடுத்துச்செல்லமுடியும்.

எந்தவொரு கட்டமைப்பிலும் ஊழல் என்பது முடிந்தவரையில் ஒழிக்கப்படவேண்டிய ஓர் தீமை என்பதை அத்தியாவசியமான முறையில் மனதிற் கொண்டு சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தி பொதுச் சேவைகளுக்கான செயற்றிறன், நம்பகத்தன்மை போன்றவற்றை விருத்தி செய்வதுடன் அடையப்பெற்ற நல்லாட்சியின் அனைத்து அம்சங்களையும் மேம்படுத்திச் செல்வதன் மூலம் பொருளாதாரத்தைச் செழுமைப்படுத்திக் கொள்ளலாம் என்பதே சர்வதேச நாணயநிதியம் (IMF) என்ற உலகளாவிய நிறுவனத்தின் 1996 ஆம் ஆண்டு பிரகடனமாகும். பொது நிறுவனங்கள், பொதுவிவகாரங்களையும் பொதுவானமூலவளங்களையும் எவ்வாறு கையாளுகின்றன என்பதையே அது விளக்குகிறது. சர்வதேச தேசிய மற்றும் உள்ளூராட்சி ரீதியில் ஒரு நாட்டின் உள்ளகக் கட்டமைப்புக்களான அரச மற்றும் தனியார் துறை ஆட்சி முறைச் செயற்பாடானது ஒன்றுக் கொன்று ஒத்திசைவாகச் செயற்படுவதாக தோன்றக்கூடும். ஆனால் எந்த முறை ஆட்சிமுறையிலும் நல்லாட்சியென்பது அதன் நம்பகத்தன்மை வெளிப்படைத் தன்மைமற்றும் முறையான சட்ட ஆளுமை போன்றவற்றிலேயே எப் போதும் தங்கியதாயிருக்கும். நல்லாட்சியென்பது அதற்கான பிரதிபலிப்புக்களை அனுமதிப்பதாகவும் சமநீதி- சமத்துவம் போன்றவற்றுடன் நடைமுறைச் சாத்தியமானதும் நியாயமானதுமான ஆற்றல்களையும் உள்ளடக்கியதாகவே இருக்கும்.

### இலங்கையின் நிறுவன ரீதியான கட்டமைப்பு

தெற்காசிய ரீதியில் பார்த்தால் இலங்கையின் நிறுவனக் கட்டமைப்புடன் அதனது சட்ட ரீதியான ஒழுங்கமைப்பும் உயர்தரமானதேயாகும். அதாவது இலங்கையின் குறிப்பிடத்தக்களவிலான தொழிலாளர் எண்ணிக்கையைக் கொண்ட பொதுச்சேவைத்துறையானது மிகச்சிறந்த பொதுச்சேவை மூத்த அதிகாரிகளுக்கான ஆளணியையும் கொண்டதாகவேயுள்ளது. இந்த ஒழுங்குமுறையானது 1948 ஆம் ஆண்டின் மேற்கத்தேய மாதிரிகளுடன் நவீன அபிவிருத்திகளையும் படிப்படியாக சேர்த்துக் கொண்டதுடன் காலத்திற்குக் காலம் தொடர்ந்து பதவிக்கு வந்த அரசுகளினால் உருவாக்கப்பட்ட கொள்கைகளால் விளைந்த பயன் தாக்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தற்போது குற்றச் சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசானது இலங்கையை ஆசியாவிலேயே ஒரு தலைமைத்துவ நாடாக ஆக்குமளவிற்கு அதுபற்றிய எதிர்கால வாய்ப்புக்களுடன் கருத்தியல் சித்தாந்தத்தையும்கூட ஒரு சிறந்த மாதிரியாக ஆக்கியிருப்பது போலவே தோன்றுகிறது. அதாவது 30 வருடகால கசப்பான போருக்குப் பின்னர் தனது ஆட்சியின் இரும்புக்கரப் பிரயோகத்தினூடாக ஆகக்கூடுதல் சக்தி வாய்ந்ததும் நிலையான ஆட்சியுடன் கூடிய சமாதானத்தையுங்கூட அது சாதித்துக் கொண்டதாகவே தெரிகிறது. நாட்டில் தற்போது இருக்கும் ஆட்சிக் கட்டமைப்பானது நல்லாட்சியொன்றுக்குப் போதிய ஆற்றலையும் தகுதியையும்கொண்டிருப்பினும் அதற்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் ஆளும் திறனுடன் கூடிய துணிச்சலும் உயர்தகுதியும் வாய்ந்த நிர்வாகிகளேயாகும். எமது நாட்டை ஆசியாவின் அதிசயமொன்றாக மாற்றுவதற்கு உயர்தகுதி வாய்ந்த ஆளுநர்கள் நம்மிடையே உள்ளனரா என்ற வாதத்திற்குரிய கேள்வியொன்றும் உள்ளது. நாம் இப்போதும் உலகத்திலேயே கூடுதல் நிலையானதும் சமாதானமும் சக்தியுமிக்கதொரு நாடாகவேதான் இருக் கிறோமா? என்பது மற்றுமொரு கேள்வியேயாகும்.



நாட்டினது பொதுவான மூலவளங்களை பொது நிறுவனங்கள் எவ்விதம் கையாளுகின்றன, கொண்டு நடத்துகின்றன என்பதையே நல்லாட்சி விளக்குகிறது. இதன் போக்கானது சர்வதேச – தேசிய மற்றும் உள்ளூராட்சி ரீதியில் அவற்றுக்கான அரச மற்றும் தனியார் உட்கட்டமைப்புக்கள் உள்ளார்ந்த ஒருங்கிணைப்பாகவே ஒத்துழைத்துச் செயற்படுவதாக தோன்றக் கூடும். ஆனாலும் இச்செயற்பாடுகளனைத்திலும் நம்பகத் தன்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் சட்ட ஆட்சி போன்றவற்றுடன் பிரதிபலிப்புக்கள் சமத்துவம்–சமநீதி கொண்டவையாகவும் ஆற்றல்மிக்க நடைமுறைகள் நீதி–நியாயமான பங்குபற்றுதலுடன் கூடியதாக இருக்கவேண்டுமென்பதே நல்லாட்சியின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. சம்பூரண நல்லாட்சியென்பது உலகில் எங்குமே இருப்பதில்லை என்றபோதிலும் சர்வதேச நாணய நிதியமும் அதுபோன்ற ஏனைய சில சர்வதேச அமைப்புக்களுமாக ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசுகள் பின்பற்றுவதற்கென குறிப்பிடத்தக்க சில நியம முறைகளைப் பரிந்துரைத்துள்ளன. தற்போதைய அரசானது பொருளாதார நன்மைகளுடன் கூடிய நல்லவிதமான நடைமுறைகள் கொண்டதொரு நல்லாட்சியை வாக்குறுதியாக முன்வைத்தேதான் ஆட்சிக்கு வந்திருக்கிறது.

### நல்லாட்சிக்கான மாற்றங்கள்

அரசை நல்லாட்சிக்குரிய ஒன்றாக மாற்றுவதற்கான தற்போதைய மாற்றங்களை உயர்ந்த அளவான எதிர்பார்ப்புகளுடன் கூடிய பெரும்பான்மை வாக்காளர்களாலேயே கொண்டுவரப்பட்டவையாகும். ஊழல், தவறான நடைமுறைகள் மற்றும் எதிலும் வெளிப்படையற்ற தன்மை என்பது போன்ற குற்றச்சாட்டுக்களுடன்கூடிய பெருமெடுப்பிலான பாரிய அபிவிருத்திகளுக்குப் பதிலாக பொருளாதார நன்மைகளுடன் கூடிய நல்லாட்சி பற்றி சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் (INGOS), அரசசார் பற்ற நிறுவனங்கள் (NGOS) போன்றவற்றுடன் உள்ளக அமைப்புக்கள் நிறுவனங்களும் எதிர்க்கட்சியுடன் கலந்துரையாடல்களை நடத்தியே வந்துள்ளன. நல்லதொரு மாற்றத்திற்காகவும் நல்லாட்சிக்குமாகவேதான் தற்போதைய ஆட்சியை தமது வாக்குகள் மூலம் வாக்காளர்கள் தெரிந்து கொண்டனர். தற்போதைய அரசானது முழுப் பெரும்பான்மைப் பலமற்ற ஒரு சிறுபான்மை அரசாகவே இருந்தும் தனது 100 நாட்கள் வேலைத்திட்டத்திற்குள்ளாகவே பூர்த்தி செய்யக்கூடிய சாத்தியமற்ற விதமான சமூகப்பொருளாதார மற்றும் அரசியலமைப்பு ரீதியான மாற்றங்களை கொண்டு வருவதாகவே அது வாக்குறுதியளித்திருந் தது.

இந்தப் பணிகளனைத்தையும் 100 நாட்கள் காலக்கெடுவுக்குள் நிறைவேற்றுவதென்பது உண்மையில் முடியாத காரியமேயாகும். மேற்கு நாடுகளின் அனுசரணையையே மைத்திரிபால சிறிசேன அரசு எதிர்பார்த்திருக்கும் அதே நேரம் மகிந்த ராஜபக்ஷ அரசானது இந்தியா உள்ளிட்ட சார்க் (SAARC) அயல் நாடுகளுடன் கூட்டுச்சேரா நாடுகள், ரஷ்யா, சீனா போன்ற நாடுகளின் பின்னணி ஆதரவிலேயே தங்கியதாயிருந்தது. இந்த நெருக்கடியான நிலையிலும் மேற்கானது விரும்பித்தகாதவிதமான மத்திய கிழக்குப்போரில் சிக்கிக்கொண்டதாகவே இருந்தது. அத்துடன் தான் இருக்கும் நிலையில் அது இலங்கைக்கு உதவக்கூடியதாயிருக்குமா என்பதும் கருத்திற்கொள்ளப் படவேண்டிய முக்கிய விடயமாகிறது.

### ஆட்சி மாற்றம்

உள்ளூர் மற்றும் சர்வதேச காரணிகளின் செல்வாக்கு இல்லாமல் ஆட்சி மாற்றத்தினைக் கொண்டு வருவதென்பது ஏறக்குறைய சாத்தியப்படாத விடயமாகவேயிருக்கும். போரின் உச்சக் கட்டத்திலும் கூட வெளிநாட்டு குறுக்கீடுகளால்தானும் அசைத்து விட முடியாத பாறை போன்றதொரு மக்கள் தலைவராக கருதப்பட்ட மகிந்த ராஜபக்ஷவினது முன்னைய அரசானது இப்போது எதிரணி மற்றும் உள்ளூர், சர்வதேச சக்திகளின் பின்னணி ஆதரவுடன் கூடிய எதிராளியான மைத்திரிபால சிறிசேனவினால் தோற்கடிக்கப் பட்டுள்ளது. *(தொடரும்...)*

**தமிழில்:- யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பேரழிவு வரும் போது இறைவனை உணர்வதை விட, குளிர்ந்த காற்று வீசும் போது அவரது மகத்தான சக்தியை அறிய வேண்டும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நேபாள நாட்டு மக்களுக்கு இதயவலியோடு எழுதும் மடல்

நேபாள நாட்டு மக்களுக்கு இதய வலியோடு எழும் மடல் இது. உலகில் ஒரே ஒரு இந்து நாடு என்ற பெருமைக்குரிய நேபாள நாட்டில் நடந்த பெரும் துயர் அறிந்து ஈழத்தமிழ் மக்களாகிய நாம் தாளாத வேதனை கொள்கிறோம்.

இழப்புகளின் துயரம் எத்தகையது என்பதை கணப்பொழுதும் அனுபவித்து வரும் ஈழத் தமிழ் மக்கள், உங்களுக்கு ஏற்பட்ட இழப்பின் கொடூரம் கண்டு கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியாது.

இயற்கையின் சீற்றத்தால் மூவாயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட மக்களை இழந்து தவிக்கும் உங்களின் அவலநிலையை அந்த இறைவன் ஆற்றுப்படுத்த வேண்டும் என இந்நேரத்தில் உங்கள் அனைவருக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட மரணம் என்பதற்கு அப்பால் அநாதரவாகிப் போன குழந்தைகள், விதவைகளாகிப் போன பெண்கள், அங்கவீனனவர்கள் என்ற மிகப் பெரியதொரு பட்டியலையும் நிலநடுக்கம் தந்துவிட்டுப் போயிருக்கும்.

என்ன செய்வது! இனத்தால், மதத்தால், மொழியால், நிறத்தால் மனித சமூகம் பேதமைப்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கி அழித்து மனித வாழ்வை அர்த்தமற்றதாக்கி வருகின்ற துயர் மாறாத நிலையில்,

இயற்கையும் தனது பங்கிற்கு அமைதியான உங்கள் நேபாள நாட்டில் கோரத்தாண்டவம் ஆடி மூவாயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்களை இரையாக்கியதுடன் தேசத்தையும் நாசமாக்கியுள்ளது.

ஓ! அன்புக்குரிய நேபாள நாட்டு மக்களே! நாங்கள் ஈழத்தமிழர்கள். வாழத்துடித்து எல்லாவற்றையும் இழந்து இன்று அரசியல்வாதிகளின் பதவிக்காக புள்ளடிபோடும் பாவச்செயலை மட்டும் செய்கின்ற அப்பாவிகள்.

வன்னியில் எம் இனம் கொன்றழிக்கப்பட்ட போது, சர்வதேசமே எங்களைக் காப்பாற்று என்று கையேந்தி மன்றாடியும் காப்பாற்றுவார் இன்றி துடிதுடித்துப் பலியாகிப் போன இனத்தின் எச்சங்கள் நாங்கள்.

உலகில் அமைதியை நிலைநிறுத்துவதற்காக சர்வதேசம் ஒன்று கூடி அமைத்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனினால் கைவிடப்பட்ட இனம்.

வாலியை வதம் செய்த இராமராக இந்தியா செயற்பட்ட போதும் இராமரை நம்பியிருந்த வாலி போல இந்தியாவை நம்பியிருந்த ஏழையினம் உங்கள் துயர் கண்டு இன்று கலங்குகிறது.

உயிரிழப்பின் வலிமை மிகவும் கொடுமையானது. கடவுளே! எப்படித்தான் நீங்கள் தாங்கப் போகிறீர்கள் என்ற ஏக்கம் இழப்பால் தவிக்கும் எங்கள் இதயத்தை கடுமையாகத் தாக்குகிறது.

உங்கள் இழப்பின் துயரில் எங்கள் கண்ணீரும் கலந்து கொள்கிறது. நாட்டில் வாழ உரிமையில்லாத ஓர் இனத்தின் கண்ணீர்தான் அந்த இனம் தரக்கூடிய அதி உயர்ந்த உதவி என்பதை இந்த நேரத்தில் சொல்லும்போது எங்கள் கண்கள் கலங்குகின்றன.

இது உங்கள் துயருக்காக அல்ல; எங்களுக்கென்று ஒரு நாடு இருந்திருந்தால் நாங்களும் உங்கள் துயர் துடைக்க விமானத்தில் உதவிப் பொருட்கள் அனுப்பியிருப்போம். என்ன உதவி தேவை என்று கேட்டிருப்போம். என்ன செய்வது எந்த வாகனம் வந்தாலும் என்ன தருவார் என்று ஏங்கும் அளவில் எங்கள் நிலைமை இருப்பதை நினைத்த போது கண்கள் கலங்கின.

## தண்ணீர்த் தொட்டிக்குள் வீழ்ந்த குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தண்ணீர்த் தொட்டிக்குள் தவறி விழுந்த குடும்பப்பெண் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் உடுவில் தெற்கு, மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஆனந்தகுமார் வசந்தா என்ற மூன்று பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வலிப்பு நோயால் அவதிப்பட்டுவந்த குறித்த குடும்பப் பெண் நேற்று தனது வீட்டுக்கு அருகிலுள்ள கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தபோதே தண்ணீர்த்தொட்டிக்குள் தலைகீழாக தவறி விழுந்துள்ளார்.

இதேவேளை மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் குறித்த குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி நேற்றுக்காலை 8.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (செ-6)

## பேருந்திலிருந்து வீழ்ந்த நடத்துநர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

பயணித்துக் கொண்டிருந்த பேருந்திலிருந்து தவறிவிழுந்த நடத்துநர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சண்டிலிப்பாய் தொட்டிலடியைச் சேர்ந்த அரிஹரராஜன் தினேஷ்குமார் (வயது-21) என்ற நடத்துநரே நேற்று அதிகாலை 4 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி காலை 8 மணியளவில் யாழ்.நகரிலிருந்து காரைநகர் நோக்கி மானிப்பாய் வீதியூடாகப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து மானிப்பாய் சந்தியை அண்மித்த போது பேருந்தின் மிதவையில் நின்ற நடத்துநர் திடீரென ஏற்பட்ட வாகன அசைவினால் கீழேவிழுந்துள்ளார்.

கீழேவிழுந்து நிலைகுலைந்த நடத்துநர், வீதியோரமாகயிருந்த பாலத் தின் மதகுடன் தலைமோதுண்ட நிலையில் விழுந்துள்ளார். இதனையடுத்து மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு தீவிரசிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (செ-6)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் நன்கொடை நிதியில் நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கொக்குவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்காக அமைக்கப்பட்ட கற்பூர உற்பத்தி நிலையத்தின் திறப்பு விழா வைபவம் நாளை 29ம் திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமை தாங்குவதுடன் வடமாகாண சபை அமைச்சர் பா.டெனீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

• மேற்படி இந்நிகழ்விற்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கொக்குவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (செ)

XXXXXXX

(யாழ்ப்பாணம்)

ஊரதீவு சனசமூக நிலையத்தின் திறப்பு விழாவும் மாபெரும் விளையாட்டு நிகழ்வும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் சனசமூக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூகத்தின் தலைவர் ந.சாந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பேராசிரியர் கா.குகபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (செ)

## ஹலோ ட்ரஸ்ட் பணியாளர்கள் நேற்று மீண்டும் ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஹலோ ட்ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றிய சுமார் 300 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள், இரண்டாவது தடவையாக நேற்று நிறுவனத்தின் கிளிநொச்சி அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 25ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோதும் அவர்களுக்கான சீரான தீர்வு கிடைக்கவில்லை. இதனையடுத்து நேற்று மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிதிப்பற்றாக்குறை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றியவர்களில் 200 பணியாளர்களை தவிர ஏனைய 450 பணியாளர்களை, வேலையில் இருந்து நிறுத்தப்போவதாக ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

தங்களில் 300 பேரை முதற்கட்டமாக எவ்வித ஒழுங்குமின்றி படிப்படியாக வேலைநிறுத்தம் செய்துள்ளதாகவும் மிகுதி 150 பேரையும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

கையிருப்பில் உள்ள நிதி மூலம் அனைத்து பணியாளர்களுக்கும் ஏக காலத்தில் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர்.

ஆர்ப்பாட்டத்தில் அதிகமான பணியாளர்கள் கலந்துகொண்டமையால் பதற்றத்தை குறைக்கும் நோக்கில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் முன்பாக பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## 3500.091 மெற்றிக்தொன் நெல் இவ்வருடம் கொள்வனவு

கிளிநொச்சி மாவட்டத்தில் 2014 - 2015 பெரும் போக நெற்பயிர்ச் செய்கையில் இந்த வருடம் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை 3500.091 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக வடக்கு மாகாண நெல் சந்தைப்படுத்தல் சபையின் முகாமையாளர் ஏ.சாந்தகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 887 விவசாயிகளிடம் இருந்து 160.186 மில்லியன் ரூபாய்க்கு 53 இலட்சத்து 36 ஆயிரத்து 406 கிலோகிராம் சம்பா நெல்லும் 29 இலட்சத்து 63 ஆயிரத்து 685 கிலோகிராம் நாடு நெல்லும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். (2-9)

## கனரக வாகனங்கள் செல்லத் தடை!

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் கனரக வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதிகளில் கனரக வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக விளம்பரப் பலகைகள் நேற்று வீதிகளில் வைக்கப்பட்டுள்ளன. (இ-3-60)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பிரான்பற்று ஞான வைரவர் ஆலய 5ஆம் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மார்க்கண்டு சுவாமிகள் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இத்திரு விழாவில் சிறப்புச் சொற்பொழிவை சைவப் புலவர் நித்தியதசீதரன் "மாதா பிதா குரு தெய்வம்" எனும் தலைப்பில் வழங்கவுள்ளார். (இ-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



குழந்தையாக இருந்தபோது நான் கொண்டிருந்த நம்பிக்கை, இப்போது நான் செயற்படுத்திக் கொண்டிருக்கின்ற நம்பிக்கை- அதுபோன்ற அசைக்கமுடியாத நம்பிக்கையை உங்களிடம் நீங்கள் கொள்ளுங்கள். அத்தகைய மகத்தான நம்பிக்கையை, ஒவ்வோர் ஆன்மாவிலும் எல்லையற்ற ஆற்றல் இருக்கிறது என்ற நம்பிக்கையை நீங்கள் ஒவ்வொருவரும் கொண்டீர்களானால் உலகம் முழுவதையும் நீங்கள் புதுப்பித்து விடலாம்.

நான் உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன். ஏனென்றால நீங்கள் தெய்வங்களின் குழந்தைகள், மேன்மைமிக்க முன்னோர்களின் குழந்தைகள்.

சீதையைப் பற்றி என்ன சொல்வது! உலகம் முழுவதும் உள்ளகடந்தகால இலக்கியங்கள் முழுவதையும் அலசிப் பாருங்கள், அதுபோலவே எதிர்கால இலக்கியங்களையும்முடிந்தால் ஆராயுங்கள். இன்னொரு சீதையை நீங்கள் காணமுடியாது. இது உறுதி. சீதை இணையற்றவள்.

இராமர் வீரகாலத்தின் இலட்சிய புருஷர்,சத்தியம் மற்றும் ஒழுக்கத்தின் திரண்டவடிவம், இலட்சிய மகன், இலட்சியக் கணவன், இலட்சியத் தந்தை, இவைகளுக்கு மேலாக, இலட்சிய மன்னன்.

நமது புனிதமான தாய்த்திருநாடு ஆன்மீகமும் தத்துவமும் தழைத்த நாடு.ஆன்மீகச்செம்மல்களைப் பெற்ற நாடு.துறவின் உன்னதநாடு. இங்கு, இங்குமட்டுமே மிகப் பழங்காலத்திலிருந்து மிக நவீன காலம்வரை, வாழ்வின் மிகவுயர்ந்த இலட்சியம் மனிதனுக்குக் காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்.ஏ.கிண்ண காற்பந்து

## இளவாலை யங்ஹென்றீஸ் வெற்றி



இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்டு வரும் எப்.ஏ.கிண்ணத்துக்கான காற்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று ஐந்தாவது சுற்றில் விளையாட தகுதிபெற்றுள்ளது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயி ற்றுக்கிழமை நடைபெற்ற இந்த போட்டியில் நவாலி சென் பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பித்த சில நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களை போட்ட சென்.பீற்றர் அணி, யங்ஹென்றீஸ் அணிக்கு அதிர்ச்சியளித்தது. எனினும் அதி லிருந்து மீண்ட யங்ஹென்றீஸ் அணி, பதிலுக்கு அடுத்தடுத்து 3 கோல்களைப் போட்டது. முதல் பாதியாட்டத்தில் யங்ஹென்றீஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் சென்.பீற்றர் அணியினர் அடித்த கோலை, நடுவர் முறையற்ற கோல என அறிவித்தனர். சில நிமிடங்களில் யங்ஹென்றீஸ் அணியும் ஒரு கோல் போட்டது. அதுவும் நடுவரால் நிராகரிக்கப்பட்டது. மேலதிக கோல்கள் இரண்டாவது பாதியாட்டத்தில் பெறப்படவில்லை. யங்ஹென்றஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

# ரோஹித் சர்மாவின் பெயர் அர்ஜீனா விருதுக்கு பரிந்துரை




இந்திய கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மாவின் பெயர் இந்த ஆண்டுக்கான அர்ஜீனா விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் இந்திய கிரிக்கெட் வாரிய செயற்குழு கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் 2015 ஆம் ஆண்டுக்கான அர்ஜீனா விருதுக்கு ரோஹித் சர்மாவின் பெயரை பரிந்துரை செய்ய முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஜனவரி முதல் 21 போட்டிகளில் விளையாடி அவர், சராசரியாக 55.05 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 3 சதம் மற்றும் 5 அரை சதங்கள் அடங்கும்.

மேலும் புதிய பயிற்சியாளராக யாரை நியமிப்பது என்பது பற்றி இந்திய கிரிக்கெட் வாரிய செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பின்னர் இது பற்றி சச்சின், டிராவிட், கங்குலி ஆகியோரிடம் ஆலோசனை கேட்கவும் முடிவு செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது. (க)

# மலிங்கவுக்கு அபராதம்



ஐ.பி.எல். தொடரில் ஐதராபாத் அணித்தலைவர் வோனருடன் மோதலில் ஈடுபட்ட மும்பை பந்து வீச்சாளர் மலிங்கவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பந்துவீச்சில் மிரட்டிய மலிங்க 4 விக்கெட்டுகளை வீழ்த்தி மும்பை அணியின் வெற்றிக்கு உதவினார். ஆட்டநாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

இந்தப் போட்டியில் ஐதராபாத் அணித்தலைவர் வோனரை ஆட்டமிழக்க செய்த போது, மலிங்க அவரிடம சில வார்த்தைகளை கூறியுள்ளார்.

இது தொடர்பாக போட்டி நடுவர் ரோசான மகானாமா ஆய்வு செய்ததில், மலிங்க வீரர்கள் நடத்தை விதிமுறையை (லெவல் 1) மீறி இருப்பது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து மும்பை வீரர் மலிங்கவுக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 5 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (க)

# பருத்தித்துறை பிரதேச செயலக பெண்களுக்கான உதைபந்தாட்டம்

## சென்தோமஸ் வி.கழகம் சம்பியன்





பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2015 விளையாட்டு விழாவின் பெண்களுக்கான உதைபந்தாட்டம் இறுதி ஆட்டத்தில் சென்தோமஸ் வி.க.எதிர் விக்கிரமன் வி.கழகம் மோதியது. இதில் மிகவும்விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆரம்பம் முதல் சென்தோமஸ் அணியின் ஆதிக்கமே காணப்பட்டது. இருப்பினும் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல்களை போட முடியவில்லை. இரண்டாம்பாதிஆட்டத்தில் போட்டி முடிவடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது சென்தோமஸ் அணி ஒரு கோல் அபாரமாக போட்டு முன்னிலை பெற்றது. போட்டி முடிவடையும் போது 1:0 என்ற அடிப்படையில் சென்தோமஸ்வி.க.பெண்கள் அணி வெற்றி வாகை சூடியது.

மேலும் ஆண்கள் உதைபந்தாட்டத்தில் அரையிறுதிக்கு வல்வை வி.க, விண்மீன் வி.க, சென்சேவியர் வி.க. தகுதி பெற்றுள்ளன. நான்காவது அணியாக திக்கம் இ.வி.க.எதிர் அல்வாய் நண்பர்கள் வி.க.காலிறுதியில் சந்திக்கிறது. இதில் வெற்றி [illegible] அணி அரை இறுதியில் சென் சேவியர் வி.கழகத்துடன் மோதவுள்ளது. மேலும் எல்லே போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய வி.க ஆண் கள் அணி சம்பியன் ஆகியது குறிப்பிடத்தக்கது.

மேலும் எல்லே பெண்கள் போட்டியில் சென்தோமஸ் அணி சம்பியன் ஆகி உள்ளது. (க)

# மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி-2015

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும் மேசைப்பந்தாட்ட அணியும் இணைந்து லீக் முறையில் நடத்தி வருகின்ற அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடை யிலான ஆண், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரை இறுதிக்குத் தெரிவாகிய அணிகள்.

ஆண்களுக்கான பிரிவில் குழு "A" யில் யூனியன் கல்லூரி அணியும் குழு "B" யில் யாழ் பல்கலைக் கழக அணியும் வெற்றியை (Group Champion) ஐப் பெற்றுக் கொண்டது.

(Group Runner up) ஆக குழு "A" யில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் குழு "B" யில் ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும் பெற்றுக்கொண்டது.

குழு "A" யில்

யாழ். மத்திய கல்லூரி அணி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி, கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழக அணி, ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி ஆகியனவும்

குழு "B" யில்

யாழ் பல்கலைக்கழக அணி, சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, ஒஸ்கா விளையாட்டுக்கழக அணி, யாழ். இந்துக்கல்லூரி அணி ஆகியன பங்குபற்றின.

பெண்களுக்கான பிரிவில்

குழு "A" யில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் குழு "B" யில் யாழ்.பல்கலைக்கழக அணியும் வெற்றியினைப் (Group Champion) ஐப் பெற்றுக் கொண்டது..

(Group Runner up) ஐ குழு "A" யில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் குழு "B" யில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

குழு "A" யில்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி, கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழக அணி, யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி, உடுவில் மகளிர் கல்லூரி அணி ஆகியனவும்

குழு "A" யில்

யாழ். பல்கலைக்கழ அணி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி, ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி ஆகியனவும் பங்குபற்றின. (க)

# வங்கதேசத்திடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் பாகிஸ்தானை கழுவி ஊற்றும் சயித் அப்ரிடி

பாகிஸ்தான் அணி, வங்கதேசத்திடம் ஒருநாள் தொடரைத் தொடர்ந்து, இருபது-20 போட்டியிலும் தோல்வியடைந்த தால் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பாகிஸ்தான் அணி அடுத்தடுத்த தோல் விகளால் 3-0 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை வங்கதேசத்திடம் பறிகொடுத் தது. இது ரசிகர்களு க்கு ஏமாற்றம் அளித்தது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற இருபது-20 போட்டியிலாவது பாகிஸ்தான் அணி வெற்றி பெறும் என்று எதிர் பார்க்கப்பட்ட நிலையில், [illegible] விமர்சனங்கள் எழுந்துள்ளன.




ஏற்கனவே பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் இம்ரான்கான், பாகிஸ்தான்வாரியத்தில் கிரிக்கெட் அறிவே இல்லாத அதிகாரிகள் இருப் பதாகவும், திறமைகத மதிப்பு கொடுப்பது இல்லை எனவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில் இருபது-20 போட்டி களின் அணித் தலைவர் சயித் அப்ரிடி, வங்கதேசத்திடம் இருந்து பாகிஸ்தான் அணி வீரர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

வங்கதேசத் தொடரில் ஒருநாள் மற்றும் இருபது-20 போட் டிகள் அனைத்தையும் இழந்த பாகிஸ்தான், டெஸ்ட் போட்டி களி லாவது இழந்ததை மீட்குமா என் பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் அருணாசலம் காலமானார்




பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் கனகசபை அருணாசலம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் காலமானார்.

1995 தொடக்கம் 1998 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து அத்துறையின் எழுச்சிக்குப் பங்களிப்பாற்றினார்.

இலங்கைத் தமிழியல் ஆய்வு முயற்சிகள் தொடர்பாகவும் பாரதி ஆய்வியல் தொடர்பாகவும் மலையக இலக்கியப் பாரம்பரியம் தொடர்பாகவும் 70க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் மற்றும் நூல்களையும் எழுதியுள்ளார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு மீசாலை வடக்கு பூதவராயர் கோவிலடியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். (ந)

# பஞ்சாப்பை வென்றது ஹைதராபாத்



ட்ரெண்ட் போல்டின் அசத்தலான பந்து வீச்சு கைகொடுக்க ஹைதராபாத் 11 ஓட்டங்களால் பஞ்சாப் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழாவின் நேற்றைய லீக் போட்டியில் பஞ்சாப்- ஹைதராபாத் அணிகள் மொஹாலியில் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் ஹைதராபாத் அணியின் வோர்னர் - தவான் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

தவான் ஒரு ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த விகாரி 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

3ஆவது விக்கெட்டுக்கு வோர்னர் உடன் ஹென்றிக்யூஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பஞ்சாப் அணியின் பந்துவீச்சை விளாசித் தள்ளியது. குறிப்பாக வோர்னர் ஆட்டத்தில் அனல் பறந்தது.

ஆனால், வோர்னர் 41 பந்துகளில் 10 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 58 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன்போது ஹைதராபாத் அணி 9.5 ஓவர்களில் 76 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இதையடுத்து ஹைதராபாத் அணியின் ஓட்ட விகிதமும் குறைய ஆரம்பித்தது.

ஹென்றிக்யூஸ் 32 பந்துகளில் 30 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ஆசிஷ் ரெட்டி கடைசி ஓவரில் இரண்டு சிக்ஸர்கள் விளாச,

இறுதியில் ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 150 ஓட்டங்கள் எடுத்தது.

ஆசிஷ் ரெட்டி 8 பந்துகளில் 22 ஓட்டங்கள் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பஞ்சாப் அணி சார்பில் ஜோன்சன், பட்டேல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 151 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக 4 ஓவர்களில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை கைப்பற்றிய ஹைதராபாத அணியின் ட்ரெண்ட் போல்ட் தெரிவானார். (க)




# அல்வாய் கொலை; சந்தேகநபர் கைது

அல்வாய்ப் பகுதியில் இடம்பெற்ற குடும்பஸ்தர் கொலைச் வழக்கின் பிரதான சந்தேக நபரான வடமராட்சியைச் சேர்ந்த சந்திரகுமார் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இவரை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் மா.கணேசராஜா உத்தர விட்டுள்ளார். (செ-11)

# 19ஐ ஆதரிப்போர்...

வருகின்றார்.

மைத்திரிபால சிறிசேன இழிவான நபர். இவரை போன்று மேற்குலகத்திற்கு தேவையான வகையில் செயற்படும் வேறு நபர்கள் நாட்டில் இல்லை.

அதேவேளை ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை பிக்பொக்கட் அடித்தவர். டி.எம். ஜயரத்னவே இன்றும் நாட்டில் சட்டரீதியான பிரதமர்.

மேலும் 19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இன்று (நேற்று) பேரணி சென்றவர்கள் நாட்டில் இருக்கும் சிங்கள புலிகள். மாதுளுவாவே சோபித தேரர் தற்போது சிங்கள விரோதியாக மாறிவிட்டார் எனவும் பேராசிரியர் நளின் டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# உழவு இயந்திரம் - கார் விபத்து

## ஐவர் காயம்

எழுதுமட்டுவாழ், ஏ-9 வீதியில் உழவு இயந்திரமும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஐவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் நடைபெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த காரும் எழுதுமட்டுவாழிலிருந்து ஏ-9 வீதியில் நுழைந்த உழவு இயந்திரமும் மோதியதில் இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன.

காரின் சாரதியான பேலியகொடவைச் சேர்ந்த டில்வட் காமினி (வயது 44), கொழும்பு விவேகானந்தா வீதியைச் சேர்ந்தவர்களான தில்லைராசா ஞானபூபதி (வயது 52), ஜெயராஜா சந்திராதேவி (வயது 50), ஜெயராஜா தர்சினி (வயது 27), உழவு இயந்திரச் சாரதியான எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த மயில்வாகனம் சிறிதரன் (வயது 42) ஆகிய ஐவருமே காயமடைந்தனர்.

இவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். விபத்துக் குறித்த விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# மரண அறிவித்தல்

## ஆனந்தகுமார் வசந்தா (சுதா)



உடுவில் தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தகுமார் வசந்தா (சுதா) நேற்று 27.04.2015 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கனகசபை-சறோஜினிதேவியின் அன்பு மகளும், (ஏழாலை மத்தி) அப்பாத்துரை-ஞானம்மாவின் அன்பு மருமகளும், ஆனந்தகுமாரின் அன்பு மனைவியும், அஜித்குமார், அபிராமி, அபர்ணா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைமதி (லதா), வசந்தரூபன் (லண்டன்), செல்வரூபன் (பெல்ஜியம்), சகிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சண்முகநாதன் யாழினி (லண்டன்), யான்சி (நீர்கொழும்பு), பிரதீப் (பிரான்ஸ்), யோகேஸ்வரி, வவா, விஜயன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28.04.2015) செவ்வாய்க்கிழமை ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:-
குடும்பத்தினர்

(220)


# Institution of Professional Development for Teachers

**இலங்கை அதிபர் சேவையின் 3ஆம் வகுப்பிற்கு தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு வழிகாட்டல் - செயலமர்வு - 2015**

**சுயகற்றல் கையேடு வெளியீடும்**

காலம் - 03,04/05/2015 (ஞாயிறு,திங்கள்) தொடர் - 1
இடம் - யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரி

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் யூலை மாதம் நடைபெறவுள்ள போட்டிப்பரீட்சையில் எழுத்து மூல பரீட்சை • கிரகித்தல், • பாடசாலை நிர்வாகம் தொடர்பான விடய ஆய்வு, • சவால்கள் மற்றும் பொதுஅறிவு ஆகிய வினாத்தாள்களுக்கான பயிற்சிப் பயிலமர்வு, நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களின் சேவை.

- பேராசிரியர் மா.சின்னத்தம்பி
- கலாநிதி.த.கலாமணி
- திரு.பா.தனபாலன்
- திரு.கு.சண்முகநாதன்
- திரு.T.தர்மராஜா
- திரு.க.இ.கமலநாதன்

விசேட வழிகாட்டல்கள், சுயகற்றல் குறிப்புக்கள், முன்னைய பரீட்சை வினாத்தாள்கள், மாதிரி வினாத்தாள்கள், பயிற்சிகள், கலந்தாய்வுகள், சமர்ப்பிப்புக்கள், பரீட்சைகள் என நவீன கல்வி பிரயோகங்கள்........

பங்குபற்றுநர்கள் முன்கூட்டியே பதிவுகளை தொலைபேசியில் மேற்கொள்ள வேண்டும்.

**தொலைபேசி இல :- 0773325374**

பா.தனபாலன் (பணிப்பாளர்)
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனம்
528, பலாலி வீதி, திருநெல்வேலி.

பயிற்சி - முயற்சி - ஈடுபாடு - சுயகற்றல் - வெற்றி

**விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது பா.தனபாலனின்**

- கல்வி நிர்வாகத்தில் விடய ஆய்வு
- பாடசாலையில் ஆலோசனை வழங்கல்
- கல்விப்பிரயோக உளவியல்
- நவீன கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்
- ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகள்
- உட்படுத்தல் கல்வி

(214)

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
**கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிழைத்து விடாதீர்கள்...

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்க ஆகியோர் முன்னெடுத்த வேலைத்திட்டங்களை நாம் முன் கொண்டு செல்லவேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி பதவியில் இருக்கின்ற வரம்பற்ற அதிகாரங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அன்று எதிர்த்தது. அந்த வரம்பற்ற அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி 1991 ஆம் ஆண்டு அறிவித்தது.

அந்த எதேச்சதிகாரமான அதிகாரங்களை நீக்குவதாக அதற்கு பின்னர் வந்த அரசாங்கங்கள் பல சந்தர்பங்களில் கூறியிருந்த போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் போது இந்த எதேச்சதிகாரமான அதிகாரங்கள் நீக்கப்படும் என்று தெளிவாக கூறப்பட்டது. எனினும், அது நிறை வேற்றப்படவில்லை.

ஆனால், சுயாதீன ஆணைக் குழுக்கள் உள்ளிட்ட நல்ல சட்டங்களை பாடசாலை மாணவர்களும் பாராட்டுவர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்ட நபர் என்ற வகையில், அந்த அதிகாரங்களை குறைப்பதற்கு நான் விரும்பினேன. நான் என்னை பற்றி கூறவில்லை.

அந்த அதிகாரங்களை குறைப்பதற்கு என்னை போல நெகிழ்வான நபர் இருப்பாரா என்று நினைக்க முடியாது. இந்த அரசியலமைப்பு திருதத்தின் ஊடாக அரச நிர்வாகத்தின் நல்ல அம்சங்களுக்கு சர்வதேச ரீதியில் பெரும் ஆதரவு கிடைக்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் பெரும் ஆதரவு கிடைக்கும். ஜனநாயகத்தை பாதுகாப்பு முறைமை, ஊழல், மோசடி, மனித உரிமைகள் ஒடுக்குமுறையின்றி எமது நாடு முன்கொண்டு செல்வதை பார்த்து அவர்கள் திருப்தி கொண்டுள்ளனர.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் இருக்கின்ற எதேச்சதிகாரமான அதிகாரங்களை நீக்குவதாக மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் எனது தேர்தல் விஞ்ஞாபனததிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும் என்று 120 இலட்ச வாக்காளர்கள் தெளிவாக கூறியிருந்தனர். அந்த முறைமையை இல்லாமல் செய்வதற்கு கடந்த 28 மற் றும் 37 வருடங்களாக மக்கள் முயற்சித்தனர். எனினும், எப்படியோ ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டமை மட்டுமே நிறைவேறியுள்ளது.

ஜனாதிபதிக்கு எதேச்சதிகாரமான அதிகாரங்களை பெற்றுக் கொள்ளும் வகையில் 18 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி கொண்டனர்.

ஜனாதிபதி பதவிக்காக இரண்டு தடவைகளுக்கு மேல் தேர்தலில் போட்டியிடலாம் என்று 18ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் உட்பட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த சகலரும் அதற்கு அன்று ஆதரவளித்தோம். அந்த முறைமையை மாற்றவேண்டும் என்று இன்று சில இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு ஸ்ரீலங்காவின் சுதந்திர ஜனநாயகத்தை மீண்டும் பாதுகாத்து அந்த வரலாற்று கௌரவத்தை கட்சி பேதங்கள் இன்றி சகல கட்சிகளுக்கும் கிடைப்பதற்கு இன்றிலிருந்து இனனும் ஒன்றைநாட்கள் இருகின்றன. அந்த அதிர்ஷ்டத்தை உதயமாக்கி கொள்ளுமாறு நான் சகலரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். (எ-11)


தென்னிந்திய திரையுலக பாடகர் T.M.S. சௌந்தராஜனின் புதல்வர் செல்வக் குமார் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்போல்வேடம் கொண்டு உலகையே கலக்கிவரும் நடிகர் 'நாமக்கல் எம்.ஜி.ஆர்' அவர்களை உங்கள் இசை நிகழ்வுகளிற்கு அழைத்திட மற்றும் இசைக் குழு தொடர்புகளிற்கு

மோகன் சவுண்ஸ்
0777 030 234

(218)


## கிளிநொச்சி...

சேர்ந்த பொறியியலாளரான ரோகித சமரசேகர (வயது 48) என்ற நால்வருமே ஸ்தலத்தில் உடல் சிதைந்த நிலையில் உயிரிழந்தவர்களாவர்.

மேலும் அம்பாந்தோட்டத்தைச் சேர்ந்த வாகன சாரதியான எம்.சுராங்க (வயது 35) கொழும்பினைச் சேர்ந்த எச்.சமன்ன (வயது 45) என்ற இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

நேற்று மதியம் 1.00 மணியளவில் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சரக்குகளை ஏற்றிக் கொண்டு வந்த புகையிரதம் ஒன்று யாழில் சரக்குகளை இறக்கிவிட்டு மீண்டும் அநுராதபுரம் நோக்கி ஒரு இஞ்சின் மற்றும் ஒரு பெட்டியுடன் திரும்பிக் கொண்டிருந்தது.

அவ்வேளை கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையிலிருந்து ஏ-9 வீதி நோக்கி புறப்பட்ட சொகுசு ரக மோட்டார் வாகனம் குறித்த ரயில் கடவையை கடக்க எத்தனித்தது.

துரதிர்ஷ்டவசமாக இங்கு வேகமாக வந்த ரயில் பிரஸ்தாப வாகனத்தை மோதிப் பந்தாடியது. வாகனம் சுமார் 100 மீற்றர் வரை தூக்கி வீசப்பட்டு சின்னாபின்னமாகியதுடன் உயிரிழப்புகளும் சம்பவித்தன.

விபத்து நடந்த பகுதியில் ரயில் கடவை போடப்பட்டுள்ள போதும்விபத்து நடந்த சமயம் கடவையில் காவலாளி இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சரக்கினை ஏற்றி வந்த ரயில் குறித்த நேரத்தில் அவ்விடத்திற்கு பிரயாணம் செய்யும் என்பதனை காவலாளி அறிந்து கடவை பாதுகாப்பினை ஏற்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் குறித்த பகுதியில் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. உயிரிழந்த 4 பேரினதும் சடலங்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-15,273,277)

## பொது பல சேனா மீது...

செய்தியாளர் சந்திப்பை குழப்பியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமததப்பட்டுள்ளன.

இந்த வழக்கு இதற்கு முன்னர் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது கோட்டை நீதவானாக பணியாற்றிய திலின கமகே, பிக்குமார் குற்றவாளி கூண்டிலில் ஏறுவது அவசியமற்றது எனக் கூறியிருந்தார்.

எனினும் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, சந்தேக நபர்களான பிக்குமார் குற்றவாளி கூண்டிலில் ஏறி நீதிமன்றத்தில் நேர்நிலையாக வேண்டும் என நீதவான் பிரியந்த சிலவா உத்தரவிட்டதாக முறைபபாட்டாளர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் பிரதிவாதிகளான பிக்குமாருக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த சிறப்புரிமையை முடிவுக்கு கொண்டுவர நீதவான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கு முன்னர் இந்த வழக்கில் ஆஜரான பொலிஸார் வழக்கு தாக்கல் செய்ய சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்து வந்தனர்.

எனினும் சட்டமா அதிபரின் ஆலோசனை தேவையில்லை என தெரிவித்துள்ள நீதவான் பிரியந்த சில்வா, குற்றச்சாட்டு பத்திரத்தை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனிடையே இந்த வழக்கு குறித்து கருத்து வெளியிட்ட பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், இந்த வழக்குகள் துரிதமாக முடிவுக்கு வருவதை காண வேண்டிய தேவையிருப்பதாக கூறியுள்ளார்.

வழக்கு விசாரணைகளை ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதவான், அன்றையதினம் குற்றச்சாட்டு பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (செ-11)


# மரண அறிவித்தல்

**பேராசிரியர் சாகித்யரத்னா கனகசபை அருணாசலம்**
**(முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்)**



அல்லாரை தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை பேராசிரியர் கனகசபை அருணாசலம் 2015.04.27 நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை காசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியர் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்) யின் பாசமிகு கணவரும் பாலமயூரன் (உறுப்பினர், சாவகச்சேரி நகர சபை), கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அர்ச்சுனா (இணைப்பு விரிவுரையாளர், மருத்துவபீடம் கொழும்பு) வின் அன்பு மாமனாரும் அக்கிலீஸின் பாசமிகு பேரனும், மனோன்மணி, சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தேவமணி, முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மயில்வாகனம், சற்குகானந்தன், கனகரட்ணம் (ஓய்வுபெற்ற சாரதி இ.போ.ச.) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று 28.04.2015 செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

அ.பாலமயூரன் - உறுப்பினர்
சாவகச்சேரி நகரசபை
T.P : 077 210 5672

(C-838)



# Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

(Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-833)



# வேலைவாய்ப்புக்கள்

சர்வதேச கம்பனி ஒன்றிற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் O/L படித்தவர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன. (C-837)

தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
வயதெல்லை 18 - 28 மாதாந்தம் 15,000/-

தொடர்புகளுக்கு : 0773364453 / 0777981471



# V2 Travels & Tours (Pvt) Ltd
## அலுவலக வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தில் வேகமாக வளர்ந்துவரும் பல் வேறு சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும் நிறுவனத்தில் இணைந்து உங்கள் தகைமைகளை வளர்த்துக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு



பதவி :- வாடிகையாளர் சேவை நிர்வாகி வெற்றிடங்கள் :- 5
அடிப்படைத்தகுதி :- Degree அல்லது HND அல்லது A/L
வயது : 21 முதல் 30 வரை (இருபாலாரும்)
மேலதிக தகுதிகள் :- ஆங்கிலத்தில் உரையாடும் புலமை
வேலை தொடர்பான அழுத்தங்களை சமாளிக்கும் ஆற்றல்
ஆரம்ப சம்பளம் :- 15,000/- (திறமையானவர்கள் இரண்டு வருடத்தில் 50 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம்)
காலம் :- 30.04.2015 வியாழக்கிழமை நேரம் : காலை 10.00 மணி
இடம் :- V2 Travels & Tours (Pvt) Ltd 49 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு 1 : தெரிவு ஒரே நாளில் 3 கட்டமாக நடைபெறும். சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்

குறிப்பு 2 : Photoshop, XL, Powerpoint, Word, Tamil Typing தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு : 077 866 8420

(C-836)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.